விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாதி 31 புதன்கிழமை (17.10.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 302

### 24-ம் திகதி மாபெரும் மக்கள் கூட்டம்

# தன் எதிர்கால அரசியலை அறிவிக்கிறார் முதலமைச்சர்

## அனைவரையும் அணிதிரளுமாறு அழைக்கிறது தமிழ் மக்கள் பேரவை

**(யாழ்ப்பாணம்) வடக்கு மாகாண அரசின் ஆட்சிக்காலம் நிறைவுறுகின்ற வேளையில், தனது எதிர்கால அரசியல் பற்றி எதிர்வரும் 24-ம் திகதி முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ் மக்களுக்கு பகிரங்கமாக அறிவிக்கவுள்ளார்.**

இந்த அறிவித்தலுக்காக எதிர்வரும் 24-ம் திகதி காலை 9.30 மணியளவில் நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா - பரமேஸ்வரி மணிமண்டபத்தில் பெருந்திரளான மக்கள் பங்கேற்கும் மாபெரும் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என தமிழ் மக்கள் பேரவை அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் தமிழ் மக்கள் பேரவை நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்களின் தற்போதைய பிரதிநிதித்துவ அரசியலானது மக்கள் பங்களிப்புடன் கூடிய ஒரு அரசியல் பயணமாக மாற்றமடைய வேண்டிய காலகட்டத்தில் உள்ளது 23

---

விக்னேஸ்வரனுக்கு எதிரான

### நீதிமன்ற தீர்ப்பு டிசம்பர் 10-ம் திகதி

(கொழும்பு)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்வைத்துள்ள அடிப்படை ஆட்சேபனை மனு தொடர்பிலான தீர்ப்பு டிசம்பர் மாதம் 10-ம் திகதி அறிவிக்கப்படும் 24

### நீதிமன்ற வளாகத்தில் சந்தேக நபரை கைது செய்ய முற்பட்ட பொலிஸார்

● நீதவான் கடும் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்து சந்தேகநபர் ஒருவரை தாக்கியமை மற்றும் கைது செய்ய முற்பட்டமை 24

### தருமபுர காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகை

(மல்லாவி)



தருமபுரம் 10ஆம் யூனிட் காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி 23

---

### முச்சக்கரவண்டியில் பெண் கடத்தப்பட்டதாக பரவிய வதந்தி

யாழில் சில மணி நேரம் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் இனந்தெரியாத நபர்களால் முச்சக்கரவண்டியில் பெண் ஒருவர் கடத்திச்செல்லப்பட்டுள்ளதாக நேற்று பிற்பகல் பரவிய வதந்தியை தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் சில மணி நேரம் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது. குறித்த சம்பவம் தொடர்பாக தெரியவருகையில்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் செம்மணிப்பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்றில் பெண் ஒருவரை கைகள் கட்டப்பட்ட நிலையில் கொண்டு செல்லப்படுவதை நபர் ஒருவர் அவதானித் 23

### வாள்முனையில் அச்சுறுத்தி பணம், நகை கொள்ளை

துன்னாலை தெற்கில் சம்பவம்

(கரணவாய்)

வீட்டில் இருந்தவர்களின் கழுத்தில் வாளினை வைத்து அச்சுறுத்தி அங்கிருந்த பணம் நகை என்பன கொள்ளையிடப்பட்ட சம்பவம் ஒன்று துன்னாலை தெற்கு, குமரன்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் வீட்டின் சமையலறை புகைப்போக்கி வழியாக உள்நுழைந்த கொள்ளையர்கள் வீட்டின் ஒவ்வொரு கதவினையும் திறந்து அங்கிருந்தவர்களின் கழுத்தில் வாளினை வைத்து சத்தமிட்டால் வெட்டிவிடுவோம் என அச்சுறுத்தி வீட்டினை 23

### அரசுக்கு கூட்டமைப்பு வழங்கிய ஆதரவினால் தமிழருக்கு என்ன பயன்?

சுரேஸ் பிரேமச்சந்திரன்

(யாழ்ப்பாணம்)

புதிய அரசுக்கு இறுதிவரை ஆதரவு வழங்கத் துடிக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, இதுவரை வழங்கிய ஆதரவினால் தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுத்தது என்ன? என ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார். 23

---

### தொடர் திருட்டில் ஈடுபட்ட இருவர் மடக்கிப்பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள ஆலயங்கள் மற்றும் வீடுகளில் தொடர்ச்சியான முறையில் திருடிவந்த திருடர்கள், அப்பகுதி இளைஞர்களால் நேற்று மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலி 23

### அரசு நிதி வழங்காததால் காணி விடுவிப்பதில் தாமதம்

ஜனாதிபதி பணித்துள்ளதால் விரைவில் விடுவிக்க நடவடிக்கை - படையினர்

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் காணிகளில் இருந்து வெளியேறும் படையினருக்கு மாற்றிடம் அமைப்பதற்கான நிதியை அரசு வழங்காததால் தான் காணிகள் விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த இராணுவத்தினர் டிசம்பர் 31-ம் திகதிக்கு முன் அனைத்து காணியையும் விடுவிக்க ஜனாதிபதி பணித்துள்ளதால் காணி விடுவிப்பு நடவடிக்கை தொடர்பில் விரைவில் அறிக்கப்படும் என தெரிவித்துள்ளனர்.

யாழ். குடாநாட்டில் 23

### மின்சாரம் தாக்கியதில் டிப்பர் சாரதி உயிரிழப்பு

மண் பறித்த போது வவு.வில் பரிதாபம்

(வவுனியா)



• வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள மணிப்புரம் கிராமத்தில் டிப்பர் வாகனத்தின் பின்புறம் அதிசக்தி வாய்ந்த மின்சாரக் கம்பிகளில் முட்டிய காரணத்தால் டிப்பர் வாகனம் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகி டிப்பர் வாகனச் 24

---

### கரவெட்டி பகுதியில் கைக்குண்டு ஒன்று நேற்று மீட்பு



(கரணவாய்)

வடமராட்சி கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு பின்புறமாக உள்ள தோட்ட காணியில் இருந்து 24

## அரசியல் கைதிகள் விவகாரத்தில் ஜனாதிபதி இன்று தீர்வு தருவார்

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் நம்பிக்கை வெளியீடு



(கொழும்பு)

அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பாக இன்று நடத்தப்படவுள்ள பேச்சுக்களின் போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்வை வழங்குவார் என்று நம்புவதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பாக கருத்து 23

### கல்லறையில் 39 வருடங்களாக பழுதடையாமல் இருந்த சேலை

(யாழ்ப்பாணம்)

மனைவியின் கல்லறையில் 39 வருடங்களின் பின்னர் கணவனின் சடலத்தைப் புதைப்பதற்குக் குழி வெட்டிய போது மனைவியின் சடலத்தில் இருந்த சேலை பழுதடையாமல் இருந்த 02

---

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**




# பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஸ்ரீ இல்லம் இமையாணன் கிழக்கு
உடுப்பிட்டியை சேர்ந்த ரகுபதி-கவிப்பிரியா
தம்பதிகளின் புதல்வி

## செல்வி ர.பவிஷாயினி

யா/கரணவாய் தாமோதரா வித்தியாலயத்தில் கல்வி கற்று 2018ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 168 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையை பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேலும் பல சிறப்புகளைப் பெற்று உயர்வடைய வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:-**
**அம்மப்பா-நவம், அம்மம்மா-ஸ்ரீ, மாமா-கஜன், சித்து-எழில், அன்ரா-ஷாமினா, தம்பிமார்-ஹிரோஸ், ஜதுஸ், அண்ணா-பிருந்தி.**

(C-4163)

# கல்லறையில்...

ததை கண்ட உறவினர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் யாழ்ப்பாணம் வலி.வடக்கு வசாவிளான் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஒட்டகப்புலம் கிராமத்தில் நடந்துள்ளது.

கடந்த வாரம் பலாலி தெற்கு பகுதியில் வசித்து வந்த யேசுரட்ணம் உயிரிழந்ததை அடுத்து அவரது உடலை வசாவிளானில் உள்ள சவக்காலையில் புதைப்பதற்காக சென்றுள்ளனர்.

அங்கு அவரது மனைவியை கடந்த 1979ஆம் ஆண்டு புதைத்த இடத்தில் குழி வெட்டியுள்ளனர். அதன் போதே மேற்குறித்த சேலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறித்த சேலை அழியாமல் இருப்பதை கண்டு உறவினர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். (ம-9)

# கலைவிழா

(கோண்டாவில்)

கோண்டாவில் சிவபூமி பாடசாலையின் நவராத்திரி விழா இன்று புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் சங்கர்-பாலச்சந்திரன் பிரதம விருந்தினராகவும் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் தம்பதிகள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம)

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு தரித
தபால்கள், பொதிகள் சேவை
உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து
WESTERN UNION மூலம்
அனுப்பிய பணத்தை ஒருசில
நிமிடங்களில் நீங்கள்
பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(சி-4155)

# பதவி வெற்றிடம்

எமது நிர்மாண நிறுவனத்திற்கு கீழ்வரும் அனுபவமுள்ள பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

- பொறியியலாளர்கள்
- தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்
  (ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கலாம்)
- விவசாய, கால்நடை தொடர்பான தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்
  (ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கலாம்)

மேற்படி பதவிகளுக்கு தகைமையுள்ள ஆண், பெண் விண்ணப்பதாரிகள் 24.10.2018ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு சுயவிபரக்கோவையுடன் நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**குறிப்பு:-தகைமை அடிப்படையில் சம்பளம் தீர்மானிக்கப்படும்.**

KPK **கட்டட ஒப்பந்ததாரர்** (ICTAD Grade C4)
**இல 108, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி.**
(புதிய தண்ணீர் தாங்கி முன்பாக)
**தொலைபேசி:021-4923264, 0772484406**
**மின்னஞ்சல்**-kpkkilinochchi@gmail.com

(சி-4161)

# கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் நிர்வாக
கிராம அலுவலராக கடமையாற்றும்
திரு.சோ.சிவலிங்கம் அவர்களின் பாசமிகு தாயார்

## திருமதி சோமசுந்தரம் தங்கச்சிப்பிள்ளை


| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 18.02.1932 | 16.10.2018 |

அவர்கள் 16.10.2018 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை**

(சி-4157)

# மரண அறிவித்தல்



## Dr.பூலோகசுந்தரம் கயிலாயநாதன்
DAMS (Cey)

### சகஸ்ராபிஷேக வைத்தியசூரி
**(தர்மகர்த்தாவும், நிர்வாகியும்-
சுழிபுரம் பறாளாய் ஈஸ்வர விநாயகர் ஆலயம்)**

யாழ்.சுழிபுரம் சித்தர் வளவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட Dr.பூலோகசுந்தரம் கயிலாயநாதன் அவர்கள் நேற்றுமுன்தினம் (15.10.2018) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Dr.தம்பிப்பிள்ளை பூலோகசுந்தரம்-தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற விசுவநாதர்-கந்தையா (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்), மகேஸ்வரி-கந்தையா தம்பதியினரின் அன்பு மருமகனும், ஓய்வுபெற்ற உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கனகாம்பிகை (ADP) அவர்களின் ஆருயிர்க் கணவரும், Dr.(திருமதி) தவத்துரை-மனோரஞ்சிதம் (முன்னாள் விரிவுரையாளர்-ஆயுள்வேத கல்லூரி, முன்னாள் சிரேஷ்ட வைத்திய உத்தியோகத்தர்-பொரளை ஆயுள்வேத போதனா வைத்தியசாலை), காலஞ்சென்ற பூலோகசுந்தரம் குணரத்தினம் ஆகியோரின் பாசமிகு அண்ணரும், சண்முகநாதன் (தவம்-J.P), இராமநாதன், பத்மநாதன், நாகநாதன், வைத்தியநாதன், உலகநாதன் (ஓய்வுபெற்ற நீதவான், J.P-UK) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரியதர்சினி (B.A பொருளியல் (Hon)-கனடா), சுகந்தி (HNDA, CIMA-UK), பூலோகசுந்தரம் (HNDA, MBA-UK), நிரஞ்சனி (B.A,(Hon)M.A-பொருளியல்-கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாளன் (முகாமையாளர்-கனடா), தனேஷ்குமார்-பொறியியலாளர்-UK), அரிசூதனா (கணக்காளர்-UK), செந்தூரன் (பொறியியலாளர்-கொழும்பு), ஆகியோரின் பாசமிகு மாமனாரும், வர்ஷனா, கிஷானா, கபிஷனா, கிரிஷாந், கோஷிகா, பிரணாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சேனாதிராஜா, தவத்துரை (பொறியியலாளர்), Dr.(திருமதி) ஏகாம்பரமூர்த்தி பத்மராணி, திருமதி மனோகரன் ஜெயராணி (கணக்காளர்-UK), திருமதி தனராஜ் ஞானாம்பிகை, திருமதி முருகதாசன் இந்திராணி (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2018) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சித்தர் வளவு,
சுழிபுரம்**

**தகவல்:-குடும்பத்தினர்
0776284439, 0775458938**

(6090)

# அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுவிக்க தீர்க்கமான அரசியல் முடிவை எடுங்கள்

## தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வெகுஜன அமைப்புக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுவிக்கும் நிலைப்பாட்டில் தீர்க்கமான அரசியல் முடிவை எடுக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வெகுஜன அமைப்புக்கள் ஒருங்கிணைந்து கோரிக்கை விடுத்துள்ளன.

வெகுஜன அமைப்புக்களின் சார்பாக அருட்தந்தை மா.சத்திவேல் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

ஆட்சி மாற்றத்தின் பின்னிருந்து இதுவரை ஐந்து தடவைகள் அரசியல் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம் நடத்தி இப்போது ஆறாவது தடவையாகப் போராடி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதியான மாவை சேனாதிராசாவின் வாக்குறுதிக்கு மதிப்பளித்து தற்காலிகமாக தமது உணவுதவிர்ப்பு போராட்டத்தை கைவிட்டுள்ளனர்.

அரசியல் கைதிகளின் விடுதலைக்கான போராட்டம் நடைபெறும் ஒவ்வொரு தடவையும் அரச தரப்பினராலும் தமிழ் அரசியல் தலைவர்களாலும் அரசியல் கைதிகளுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவையும் இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. அவர்களின் போராட்டத்தை நிறுத்த வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் சக்தியற்றவர்களாகவே தமிழ்த் தலைவர்கள் உள்ளனர். இதனை மறு வடிவமாகக் கூறினால் கைதிகளை விடுவிக்கும் ஓர் தீர்மானத்தை எடுக்குமாறு – அரசாங்கத்தின் மீது போதியளவு அழுத்தம் பிரயோகிக்கப்படவில்லை. இம்முறையாவது அரசாங்கத்தின் மீது பயன் பொருத்தமான அழுத்தம் பிரயோகிக்கப்பட வேண்டும்என்று வெகுஜன அமைப்புக்களாகிய நாம் கருதுகின்றோம்.

இது நாடாளுமன்றத்தில் பாதீட்டுக் காலம். எனவே வரவு-செலவுத் திட்டத்தின் மீதான வாக்கெடுப்பை – வடக்கு, கிழக்கு தமிழ் பாராளுமன்றப் பிரதிநிதிகள் பேரம் பேசுவதற்கான ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்த வேண்டும். அதன்படி அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுவித்தால் மட்டுமே அரசாங்கத்தை ஆதரிப்பது என்ற தீர்மானத்தைத் தமிழ்த் தலைவர்கள் எடுக்க வேண்டும்.

ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தையின் போது அரசியல் கைதிகளை தரம் பிரிக்காது விடுதலையை ஜனாதிபதியிடமும் அரசிடமும் வலியுறுத்த வேண்டும். ஜனாதிபதியும் அரசாங்கமும் இந்த நிபந்தனையை ஏற்காவிட்டால் பாதீடு தொடர்பான வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிப்பது என்ற ஒரு அரசியல் தீர்மானத்தை தமிழ்த் தலைவர்கள் எடுக்க வேண்டும். இத் தீர்மானத்தை பொதுமக்களும் அறிந்து கொள்ளுமாறு வெளிப்படையாக அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இது விடயத்தில் தமிழ்த் தலைவர்கள் உறுதியான நிலைப்பாட்டை எடுத்தால் தான் அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கலாம் என்று பொது மக்களாகிய நாம் கருதுகின்றோம்.

தற்போதைய ஆட்சியாளர்களுக்கும் தமிழ்த் தலைமைகளுக்கும் வாக்களித்த மக்களாகிய நாம் இத்தடவையாவது அரசியல் கைதிகளுக்கு ஒரு விடிவு கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம். அதற்காக சம நேரத்தில் அரசியல் கைதிகளுக்கு ஆதரவான போராட்டங்களை முன்னெடுப்பது எனவும் முடிவெடுத்துள்ளோம்.

பாராளுமன்றத்தில் தமிழ் அரசியல் தலைவர்களுக்கு கிடைத்துள்ள இந்த பேரம் பேசும் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தைப் பொறுப்புடன் கையாளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## வலிகாமம் வடக்கில் ஒருபகுதி காணிகள் விரைவில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள மக்களின் காணிகளில் ஒருபகுதி விரைவில் விடுவிக்கப்படவுள்ளது. கட்டுவன் காசிஅம்மன் கோயில் பக்கமுள்ள காணி உரிமையாளர்கள் இந்த வாரத்துக்குள் கூடிய விரைவில் தங்கள் காணிப் பதிவினை கட்டுவன் ஊரங்குனை ஜே/238 கிராம உத்தியோகத்தரிடம் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

காணி உறுதி, அடையாள அட்டை என்பவற்றுடன் வருகை தருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 077 852 5044 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## 12 நாட்களில் 68 பேருக்கு எலிக்காய்ச்சல்

### இனி வேகமாகப் பரவும் அபாயம்–சுகாதார அமைச்சு

(கொழும்பு)

தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக லெப்டோஸ் பைரோஸிஸ் என்ற எலிக்காய்ச்சல் நோய் பரவும் வீதம் அதிகமாக காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி கடந்த 12 தினங்களுக்குள் 68 பேருக்கு குறித்த எலிக்காய்ச்சல் தொற்றியுள்ளதாக சுகாதார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வருடத்தில் ஒக்டோபர் 12 வரையான காலப்பகுதிக்குள் சுமார் 3303 எலிக்காய்ச்சல் நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்திலேயே அதிகமான நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அங்கு 555 பேர் குறித்த எலிக்காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

## நள்ளிரவு வேளை பேருந்து மீது போத்தல் வீச்சு

(கரணவாய்)

வவுனியாவில் இருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்த இ.போ.பேருந்து மீது போத்தல் வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 11.30 மணியளவில் புலோலி-கொடிகாமம் வீதியிலுள்ள முள்ளிச் சந்தியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

வவுனியாவிலிருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்த பேருந்து மீது முள்ளிச் சந்தியில் கறுப்பு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் பியர் போத்தலை வீசித்தாக்கினர்.

இதில் பேருந்தின் முன் பக்க கண்ணாடி சேதமடைந்ததுடன் பேருந்து சாரதியும் காயமடைந்தார். இச் சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் தீவிர விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர். (இ-60)

## பாரிய மோசடிகள் ஒவ்வொன்றாக அம்பலப்படுத்தப்படும்-நாமல் குமார

(கொழும்பு)

பாரிய மோசடிகள் குறித்து அம்பலப்படுத்தப்படும் என ஊழல் ஒழிப்பு படையணியின் பணிப்பாளர் நாமல் குமார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரைப் படுகொலை செய்ய சதித் திட்டம் தீட்டியதாக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு குறித்து நாமல் குமாரவிடம் நேற்று முன்தினம் புலனாய்வுப் பிரிவினர் ஐந்து மணித்தியாலங்கள் விசாரணை நடத்தியிருந்தனர்.

இந்த விசாரணைகளின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் நாமல் குமார கருத்து வெளியிட்டிருந்தார்.

நாட்டில் இடம்பெற்று வரும்பாரியளவிலான காணி அபகரிப்பு உள்ளிட்ட மோசடிகள் பற்றிய விபரங்கள் அம்பலப்படுத்தப்படும்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு மேலும் சில குரல் பதிவுகளை வழங்கியிருக்கின்றேன்.

காணி அபகரிப்பு குறித்த ஆதாரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

பொருட்களை இறக்குமதி செய்வது தொடர்பில் இடம்பெற்று வரும் மோசடிகள் தொடர்பிலும் உண்மைகளை அம்பலப்படுத்த திட்டமிட்டுள்ளேன்.

எல்லா விடயங்கள் பற்றிய தகவல்களையும் ஒரே நேரத்தில் அம்பலப்படுத்துவது சாத்தியமற்றது. எனவே ஒவ்வொரு விடயமாக அம்பலப்படுத்த உத்தேசித்துள்ளோம் என நாமல் குமார மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## நல்லாட்சி ஒப்பந்தத்தை யாரும் நினைத்தவாறு முடித்துக்கொள்ள முடியாது



### ஐ.தே.க.அமைச்சர் ஹரிஸன் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த நல்லாட்சி ஒப்பந்தம் என்பது நினைத்தவாறு முடித்துக் கொள்ளப்படும் ஒன்றல்ல எனவும், குறிப்பிட்ட காலம் முடியும் வரை இந்த இணைப்பு நிலைத்திருக்கும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர் பீ.ஹரிஸன் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்த அரசாங்கத்தை உரிய காலம் வரை முன்னெடுப்பர் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

நேற்றுக் காலை கொழும்பு தனியார் வானொலி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார் (இ-7)

## இந்து அறநெறிப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை பதிவு செய்து கொள்ளல்

(யாழ்ப்பாணம்)

"இந்து இளம் இந்து சிறார்களின் தெய்வீக தாமரையை மலரச் செய்து அவர்களின் ஆளுமைகளும் திறமைகளும் மலர்ந்து விரிவடைய செய்யும் கல்வியை வழங்கல் எனும் உயர் குறிக்கோளையும் இலட்சியத்தையும் கொண்டு இயங்குபவை இந்து அறநெறிப் பாடசாலைகளாகும்.

இந்நோக்கினை விரிபுபடுத்துவதற்காக நாடு முழுவதிலும் உள்ள அனைத்து இந்து அறநெறிப்பாடசாலைகளிலும் தொண்டு அடிப்படையில் சேவை செய்ய ஆர்வம் உள்ளவர்களை இந்து அறநெறி ஆசிரியர்களாக பதிவு செய்து கொள்வதற்கான திட்டமொன்றை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

சாதாரணதரம், உயர்தரம் கற்று நிறைவுசெய்த இந்து ஆண், பெண் இருபாலாரும் பதிவு செய்யலாம். தியாக மனப்பான்மையுடன் சமூக சேவையில் விருப்பம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அறநெறி ஆசிரியர்களாக இணைந்து கொள்பவர்களுக்கு இந்து அறநெறிக்கல்வீ தொடர்பான அடிப்படை பயிற்சி நெறி வழங்கப்படும். தொடர்ந்து சானறிதழ் பயிற்சி நெறி, பட்டய பயிற்சிநெறி போன்றவற்றில் பங்கு பற்றி சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் இந்து ஆசிரியர்களின் சமய அறிவை மேம்படுத்தும் அடிப்படை பயிற்சி நெறியை பூர்த்தி செய்து இந்து இறுதி நிலை பரீட்சையினையும் உயர்கற்கை நெறியை பூர்த்தி செய்து இந்து தர்மாசிரியர் பரீட்சையிலும் சித்தி பெற்று சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

முழுமையாக தொண்டு அடிப்படையிலேயே சேவை செய்ய விரும்புபவர்கள் தங்கள் பிரதேச செயலகங்களில் உள்ள இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் பதிவுகளை மேற்கொள்ளலாம் அல்லது சுருக்கமான சுய விபரக்கோவையுடன் 10.11.2018 ஆம் திகதிக்கு முன் பணிப்பாளர், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், 248 1/1 காலி வீதி, கொழும்பு-04, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் என திணைக்களப் பணிப்பாளர் அ. உமாமகேஸ்வரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2019ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பனவற்றை 2019.01.01ஆம் திகதி தொடக்கம் 2019.12.31ஆந் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் | - 18.10.2018 - 01.11.2018 பி.ப 2.00 மணி வரை |
| கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித்திகதி | - 02.11.2018 பி.ப 1.30 மணி வரை |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி | - 02.11.2018 பி.ப 2.00 மணிக்கு |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் | - வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமையலுவலகம். |

| தொ. இ | விபரம் | மீளளிக்கப் படாத கேள்வி பத்திரத் தொகை (VAT, NBT தவிர) | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT, NBT தவிர) | மாத வாடகை (VAT, NBT) தவிர |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 11,552,200.00 | |
| 2 | உடுவில் கீரிச் சந்தை | 1,000.00 | 10,000.00 | 198,000.00 | |
| 3 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை - 01 | 1,000.00 | 10,000.00 | 2,441,450.00 | 250.00 |
| 4 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை - 02 | 750.00 | 7,500.00 | 71,500.00 | 250.00 |
| 5 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7,500.00 | 43,670.00 | 250.00 |
| 6 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7,500.00 | 54,615.00 | 250.00 |
| 7 | கோழிக்கடை இல 06 | 1,000.00 | 10,000.00 | 198,000.00 | 250.00 |
| 8 | கோழிக்கடை இல 07 | 1,000.00 | 10,000.00 | 198,000.00 | 250.00 |
| 9 | கோழி உரித்தல் கடை இல 05 | 750.00 | 7,500.00 | 99,000.00 | 250.00 |
| 10 | பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 40,480.00 | |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 1 | மருதனார்மடம் சந்தை (வாகன தரிப்பிடம் உட்பட) | 3,000.00 | 30,000.00 | 23,787,500.00 | |
| 2 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம் | 750.00 | 7,500.00 | 50,000.00 | |
| 3 | இணுவில் ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 115,500.00 | 250.00 |
| 4 | இணுவில் கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 100,100.00 | 250.00 |
| 5 | இணுவில் சந்தை | 750.00 | 7,500.00 | 68,750.00 | |
| 6 | மல்வம் சந்தை | 750.00 | 2,000.00 | 35,200.00 | |
| 7 | மல்வம் மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 275,660.00 | 250.00 |
| | **ஏழாலை உப அலுவலகம்** | | | | |
| 1 | ஏழாலை மயிலங்காடு மாட்டிறைச்சிக் கடை | 1,000.00 | 10,000.00 | 257,422.00 | 250.00 |
| 2 | ஏழாலை மயிலங்காடு கோழிக்கடை | 750.00 | 7,500.00 | 110,000.00 | 250.00 |
| 3 | ஏழாலை மயிலங்காடு ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 7,500.00 | 45,000.00 | 250.00 |

1. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியை யும் கொண்டு வருவதுடன், தாம் வதியும் இடத்தின் கிராம அலுவலரின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண் டும்.
2. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
3. கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 15% பெறுமதி சேர் வரியும் 2% தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியும் காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்.
4. தெரிவு செய்யப்படும் மருதனார்மடம், சுன்னாகம் சந்தைகளுக் கான சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பங்குத் தொகையை 2018.11.19ம் திகதிக்கு முன்னரும் ஏனைய சந்தைகள், இறைச்சி, கருவாட்டுக் கடைகளுக்குரிய சித்திகரக் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/2 பங்குத் தொகையை 2018.11.19ம் திகதிக்கு முன்னரும் செலுத்தி சபை யுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
5. சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டு வரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக் கூடாது.
6. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொத்தியாலடி கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும். அத்துடன் சபை யால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படு தல் வேண்டும்.
7. பொது மலசலகூடத்தை குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையி னால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேல் வரி அறவிடக் கூடாது.
8. கேள்விப் பத்திரங்களை தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு மூலப் பிரதி யினை **"தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன் னாகம்"** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியி னுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். மறுபிரதியினை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப் பாணம்"** எனும் முகவரிக்கும் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிரா கரிக்கப்படும்.
9. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
10. கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்படமாட்டாது
11. உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.
12. கேள்வி தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக் கவோ கேள்விச்சபைத் தவிசாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
13. சந்தைச் சுற்றாடலிலிருந்து 500m சுற்று வட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி வகைகள் என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
14. மேலதிக விபரங்களை பிரதேச சபையின் தலைமையலு வலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**க.தர்ஷன்**
தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

17.10.2018

(C-4158)

### சர்ப்பராஷ், ஜமன் அரைச்சதம்

# மீண்டது பாக்.,



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான அபு தாபி டெஸ்டில் பகர், சர்பராஸ் கைகொடுக்க பாகிஸ்தான் முதல் இன்னிங்சில் 282 ஓட் டங்கள் எடுத்தது. 'சுழலில்' மிரட்டிய லயன் 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஷில் பாகிஸ்தான், அவுஸ்திரேலியா அணிகள் இரண்டு போட்டி கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

இரு அணிகள் மோதிய முதல் டெஸ்ட் போட்டி சமனான நிலையில், இரண்டாவது டெஸ்ட் அபு தாபியில் நேற்று ஆரம்பமானது. நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணியின் தலைவர் சர்பராஸ் துடுப்பாட் டத்தை தேர்வு செய்தார்.

பாகிஸ்தான் அணிக்கு ஹபீஸ் (4) அதிர் ச்சி அளித்தார். பின், லயன் 'சுழல்' வேட்டை நடத்தினார். இவரது 20வது ஓவரின் ஐந்தா வது பந்தில் அசார் அலி (15) சிக்கினார். அடுத்த பந்தில் சொகைல் டக் அவுட்டானார். மீண்டும் வந்த லயன் இம்முறை அசாத் சபிக் (0), பாபர் அசாமை (0) வெளியேற்றி னார். அணி 58 ஓட்டங்களுக்கு 5 விக்கெட் டுக்களை இழந்து தத்தளித்தது.

**பகர், சர்பராஸ் அசத்தல்**

பின், இணைந்த பகர் ஜமான், அணித் தலைவர் சர்பராஸ் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தி விக்கெட் சரிவை தடுத்து நிறுத் தியது. இருவரும் அரைச் சதம் கடந்தனர். 6ஆவது விக்கெட்டுக்கு 147 ஓட்டங்கள் சேர்த்தபோது, பகர் 94 ஓட்டங்களில் ஆட்ட மிழந்தார். சர்பராஸ் (94) சத வாய்ப்பை இழந் தார். பிலால் (12), யாசிர் ஷா (28) ஏமாற்ற, பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்சில் 282 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களை யும் இழந்தது. பந்துவீச்சில் ஆஸி சார்பில் அதிகபட்சமாக லியன் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**மோசமான ஆரம்பம்**

முதல் இன்னிங்சை ஆரம்பித்த அவுஸ்தி ரேலிய அணிக்கு அப்பாஸ் தொல்லை கொடுத் தார். இவரது 'வேகத்தில்' கவாஜா (3), 'நைட் வோட்ச்மன்' சிடில் (4) சிக்கினர்.

இந்நிலையில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தபோது, அவுஸ்தி ரேலியா முதல் இன்னிங்சில் 2 விக்கெட்டுக் களை இழந்து 20 ஓட்டங்களை எடுத்திருந் தது.



இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடை யிலான 3ஆவது ஒரு நாள் போட்டி இன்று பல்லேகலயில் ஆரம்பமாகும் நிலையில், அதற்கான பயிற்சியில் ஈடுபட்ட இலங்கை யின் லக்ஷ்சன் சண்டகன்.


SEYLAN
100%
செலான் சேமிப்புக் கணக்குகளுக்கு
இருமடங்கு வட்டி வழங்கும் மூன்று மாத போனஸ் வரம்
போனஸ் வட்டிச் சலுகை 2018 ஒக்டோபர் 01 முதல் டிசெம்பர் 31 வரை செல்லுபடியாகும் என்பதுடன்
செலான் சாதாரண சேமிப்புக் கணக்கிற்கு மாத்திரம் செல்லுபடியாகும்.
செலான்
சேமிப்பு
011 200 88 88
செலான்
வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி


எட்டாயிரம் கடந்த பதிவுகள்
பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை
பொருத்திய சாதனை
உங்கள்
கல்யாண மாலை
உலகின் எப்பாகத்திலிருந்தும்
தொடர்புகொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
நிலைய நிர்வாக செலவிற்காக
பதிவுக்கட்டணம் ரூபாய் 1000/-
சேவைக் கட்டணம் ரூபாய் 300 /-
தொடர்பு - கல்யாணமாலை இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 720 1005, 021 221 5434
Email : Kalyanamalai.jaffna@gmail.com

## ஏடு தொடக்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். சைவ பரிபாலன சபையின் ''ஏடு தொடக்குதல்'' நிகழ்வு நாளை மறுதினம் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெறும்.

பிள்ளைகளுக்கு ஏடு தொடக்கவுள்ள பெற்றோர் தங்களவு பெயர்களை அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை செயலாளர் அறிவித்துள்ளார். (இ

• • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயா மிஷனின் நவராத்திரி விழாவில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை விஜயதசமி அன்று காலை 9 மணிக்கு குழந்தைகளுக்கான வித்தியாரம்பம் (ஏடு தொடக்குதல்) சின்மயா மிஷன், இல 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் எனும் முகவரியில் யாழ்.சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தா வால் நடத்தப்படும்.

(இ-7)

# வடக்கில் பாரிய மீன்பிடித் துறைமுகங்கள் தென்பகுதி மீனவர்களுக்கு நல்லவாய்ப்பு

## பேராசிரியர் சூசை ஆனந்தன் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

வடக்கில் மகாவலி எல் (L) வலய விவசாய அபிவிருத்தி போன்று பருத்தித்துறை மற்றும் பேசாலையில் பாரிய மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெறுவதாக செய்திகள் வந்துள்ளன. அதற்கு ஆதரவாகவும் பல்வேறு காரணிகளால் எதிர்ப்புக்களும் கிளம்பியுள்ளதாகவும் செய்திகள் வந்துள்ளன.

கடல் வளத்துறையின் மேம்பாட்டிற்கு துறைமுகங்கள் மிக அவசியம் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. ஆயினும் அதனால் அமையவுள்ள துறைமுகங்களினால் நன்மையடையப்போவதுயார் என்பது தான் சிந்திக்கவேண்டியுள்ளது என யாழ். பல்கலைக்கழக புவியியல் துறைப் பேராசிரியர் சூசை ஆனந்தன் சுட்டிக்காட்டியுள்ளார்.

வாழைச்சேனை மற்றும் ஒலுவில் ஆகிய இடங்களிலுள்ள துறைமுகங்கள் இன்று எவரால் நன்கு பயன்படுத்தப்படுகிறதோ அதே நிலைதான் வடக்கிலுள்ள துறைமுகங்களுக்கும் நடக்கப் போகிறது.

தெற்கு மீனவர்களின் பலநாள் கலங்களுக்கு தங்கிச் செல்ல வசதியான துறைமுகங்கள் வடக்கில் இதுவரை இல்லை என்பது கவனிக்கத்தக்கது. புசித்திருந்தவனுக்குப் பாயாசத்தோடு விருந்து வைத்த மாதிரி தென்பகுதி மீனவர்களுக்கு நல்ல வாய்ப்பாகவே அமையும். அதே வேளை வடக்கில் பல நாட்கலங்களின் பாவனையும் பெரிய அளவில் இல்லை. மேலும் இழுவை மடித் தொழிலில் ஈடுபட்டுள்ள வடபகுதி மீனவர்களுக்கு 3.5 தொன் இழுவைப்படகுகள் தரித்து நிற்க இத்துறை முகங்கள் வாய்ப்பாக அமைந்த போதிலும்இப்போது இழுவை மடித் தொழில் தடை செய்யப்பட்ட தொழிலாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

எந்த வேளையிலும்தடை அமுலுக்கு வரலாம். அவ்வாறான சூழ்நிலையில் அந்தப்படகுகள் படுப்புவலைத் தொழிலுக்குமாற வேண்டிவரலாம். ஆனால் எந்தளவுக்கு மீனவர்கள் அதனைப் படுப்புவலைத் தொழிலுக்கு பயன்படுத்துவர் என்பது கேள்விக்குறி. 17.5 அடி நீளமுடைய கண்ணாடி நாரிழைப்படகுகளே அதற்கு போதுமான வையாக இருக்கும். இவ்வாறான சூழ்நிலையில் அத்துறைமுகங்கள் பலநாட் கலங்களைப் பயன்படுத்தி வரும் தென்பகுதி மீனவர்களுக்கே வாய்ப்பானதாக அமையலாம்.

மேலும் அமையவுள்ள துறைமுகங்கள் இலங்கை துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் கீழேயே நிர்வகிக்கப்படலாம். அவ்வாறான ஒரு நிலையில் அதனுள் வரும் வேலைவாய்ப்புக்கள் எவருக்குப் போய்ச்சேரும் என்பதும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. மேலும் கடற்படையினரும் பாதுகாப்பு கருதி அதனைப் பயன்படுத்தலாம். பலநாட்கலங்களின் வருகை நிகழுமாயின் அவை பிசியான இடமாக மாறும். இவ்வாறான ஒரு பின்னணியில் இந்த அபிவிருத்தி நடவடிக்கை தென்பகுதியினரின் ஒருவகை ஆக்கிர மிப்புக்கான அடித்தளமாக மாறலாம். வடமாகாண சபைக்கு மீன்பிடித்துறை சார்ந்து எவ்வித அதிகாரங்களும் இல்லாத சூழலில்துறை முகம் அமையுமுன் தலை மன்னார் பியர், சவுத்பார், சிலாவத்துறை, பூக்குளம் ஆகிய பகுதிகளிலும் முல்லைத்தீவில் கொக்கிளாய், நாயாறு பகுதிகளிலும் நடந்தது என்ன என்பதையும் நினைவிற்கொள்வது நல்லது என்பது எமது கருத்து என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பகிரங்க ஏலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் மோட்டார் சைக்கிள், உழவு இயந்திரப்பெட்டிகள்,உழவு இயந்திரம், கப்வாகனம் ,துவிச்சக்கர வண்டிகள், கையடக்கத் தொலைபேசிகள் , மண்வெட்டி, சவள், மோட்டர் ,ஹாஸ் சிலிண்டர், பிக்கான்,அலவாங்கு,கோடரி, கமரா, கணனி உதிரிப்பாகங்கள், அம்பிலிபயர் ,நிழற்பிரதி இயந்திரம், கதிரைகள், தொலைநகல் ,எலக்ரோனிக் ரைப்ரைட்டர், மின்விசிறி, எயர் கண்டிசனர் , மேசை மற்றும் இதர பொருட்கள் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

யாழ்.நீதவான் நீதிமன்ற வழக்குகளில்பறி முதல் செய்யப்பட்டதும் உரிமைகோரப்படாததுமான மேற்குறித்த பொருட்கள் 27.10.2018, 28.10.2018 ஆம் திகதிகளில் காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் நீதிமன்ற வளாகத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

குறித்த பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் பொருட்களைக் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவேசெலுத்த வேண்டும். காசோலைஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஏலத்தில் குறித்த பொருட்களை கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன்சமுகமளிக்கவும். அத்துடன் ஏலவிற்பனையில் பெற்றுக்கொள்ளும் பொருட்களை அன்றைய தினம் உடனடியாக வளாகத்திலிரு ந்து அகற்ற வேண்டும் என பதிவாளர் அறிவித்துள்ளார்.(இ

## குளத்தைப் பாதுகாக்க குழாய்கள் பொருத்துக

(சாவகச்சேரி)

மந்துவில் கிழக்கு வேளையில் குளத்தைப் பாதுகாக்க நீர் கடத்தும் 24 அடி குழாய்களைப் பொருத்த வேண்டும் என சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் கு.குகானந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்.

குறித்த வேளையில் குளமானது மக்களின் பங்களிப்புடன் தூர்வாரப்பட்டுள்ளது. குளத்தைச் சூழ தூர்வாரப்பட்ட மண்ணினால் அணை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளமையால் வேகமாகக் குளத்தினை நோக்கி ஓடிவரும் நீரானது அமைக்கப்பட்ட மண்ணாலான அணையினை உடைத்து மீண்டும் மண்ணினை குளத்திற்குள் கொண்டு சென்றுவிடும்.

ஆகவே நீர் உள்ளே செல்லவும் குளம் நிரம்பும் பட்சத்தில் நீர் வெளியே வரவும் குழாய்கள் வைக்க வேண்டிய தேவை உள்ளது. இதற்கு சாவகச்சேரி பிரதேச சபை 24அடி நீர் உள் வரும், வெளியேறும் நீர்க் குழாய்களைக் கொள்வனவு செய்து தரும் பட்சத்தில் மக்கள் பங்களிப்புடன் மீதி வேலைகளையும் நிறைவு செய்ய முடியும். ஆகவே குறித்த பகுதி மக்களின் நன்மை கருதி பிரதேச சபையினர் உதவி செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-30)

## 95 வீதமான வேலைத்திட்டங்கள் சாவகச்சேரியில் இதுவரை பூர்த்தி

### தவிசாளர் வாமதேவன் தகவல்

(சாவகச்சேரி)

எமது கையில் பல திட்டங்கள் உள்ள போதிலும் தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 8 மாத காலமாக இடம்பெறாமையால் வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்த முடியவில்லை என சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நாம் இதுவரை காலமும் 95வீதமான வேலைத் திட்டங்களை செய்து முடித்துள்ளோம்.எமது கைகளில் பல திட்டங்கள் உள்ள போதிலும் எமது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 8மாத காலமாக இடம்பெறாமையால் வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கான அனுமதியைப் பெற முடியாதுள்ளது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை உடனடியாக நடத்தக் கோரி தென்மராட்சிப் பிரதேச செயலர் மற்றும் இணைத் தலைவர்களிடம் கோரிக்கை விடுகிறேன். ஒருங்கிணைப்புக் கூட்டம் இன்மையால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கான அங்கீகாரத்தைப் பெற முடியாதுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-30)

## தென்மராட்சி இலக்கிய அணியின் பாரதி விழா தமிழ்க் கோட்டத்தில்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் பாரதி விழா எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5மணியளவில் சங்கத்தானை கம்பன் கல்லூரி வளாக தமிழ்க்கோட்டத்தில் யாழ்.கல்வி வலய ஓய்வு வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பாரதியை பெரிதும் கவர்ந்தவர்கள் தேசத் தலைவர்களே! தெய்வீக ஞானிகளே ! என்னும் தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது.

ந.விஜயசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இப்பட்டிமன்றத்தில் ச.மார்க்கண்டு, பரா.ரமேஷ் ச.சலீசன், நா.நவராஜ் ஆகியோர் வாதிடுவர். (இ

## இராசி பலன்

**மீனம்:** அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**மேடம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகள் கைகூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**இடபம்:** மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்:** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, திடீர்ச் செலவுகள் ஏற்படலாம்.

**கும்பம்:** சிறிய வேலையொன்றிற்காக சற்று அலைய நேரிடலாம், இறை வழிபாட்டில் நாட்டம் கூடும், பயணத்தால் பலன் கிடைக்கும், சயன சுகக் குறைவான நாள்.

**கடகம்:** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்:** பெரியோரின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் சிறப்புகளைக் காண வேண்டிய நாள்.

**சிம்மம்:** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும் நாள்.

**தனுசு:** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அமைப்புகள் வந்து சேரலாம்,

**விருச்சிகம்:** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வெற்றிதரும் செய்திகள் வீடு வந்து சேரலாம், பாராட்டும் புகழும் கூடும் நாள், போசன சுகமுண்டு.

**துலாம்:** நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:** உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், உதிரி வருமானங்கள் பெருகும் நாள், வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும்.

இராசி பலன்

கிரகநிலை

சந்திராஷ்டமம்

திருவாதிரை, புனர்பூசம்

ராகு

கேது, சந், செவ்

சனி

குரு

சுக், புத

சூரி

17.10.2018

புரட்டாதி 31, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு

அட்டமி பிற்பகல் 01.51 மணிவரை

உத்தராடம் முன்னிரவு 11.02 மணிவரை

சுபநேரம் 4.32-6.02 மணிவரை

இராகுகாலம் 12.02-01.32 மணிவரை

அட்டமி-நவமி

வளவன்





யாழ்/உடுவில் மான்ஸ் த.க. பாடசாலையின் பரிசளிப்பு விழாவின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வைத்திய கலாநிதி அ.ஜெயக்குமரன் உரை நிகழ்த்துவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சுன்னாகம் பொது நூலக நூலகர் திருமதி .ஜெ.சுதர்சன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.


## மில் வேலைக்கு ஆட்கள் தேவை

மில் வேலையில் அனுபவ முள்ளவர்களும், பழக விரும்பு பவர்களும் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
077 773 3532 (6048)

## வைத்தியம்

தலைமுடி உதிர்தல், உடல் பருமன் கூட்டுதல்/ குறைத்தல் (வயிறு/மார்பு/கை) முள்ளந்தண்டு பிரச்சினைகள், ஆண்மை குறைபாடுகள், குழந்தையின்மை போன்ற சகலவித நோய்களுக்கும் பக்க விளைவின்றி சிகிச்சை வழங்கப்படும். தொடர்பு:-Shan's Health Care, 255,K. K.S.Rd,Kokuvil. T.P:077 035 7307 (6073)


# பிரதேசசபை அமர்வில் அமளிதுமளி

(அட்டாளைச்சேனை)



அட்டாளைச்சேனை பிரதேச சபை அமர்வில் முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் இருவரும் தத்தமது வாதங்களை சபையில் முன்வைத்து உரையாடி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

அட்டாளைச்சேனை பிரதேச சபை அமர்வு நேற்று முன்தினம் தவிசாளர் ஏ.எல். அமானுல்லா தலைமையில் மத அனுஷ்டானங்களுடன் ஆரம்பமானது. சபையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.எல்.எம். ஹம்சா ஒலுவில் கடலரிப்பை தடுப்பதற்கு நிரந்தரமான தீர்வினை வலியுறுத்தி பிரேரணை ஒன்றை நிறைவேற்ற வேண்டுமென தவிசாளரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதனையடுத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் தமீம் ஆப்தீன் துறைமுகத்தில் குவிந்துள்ள மணலை அகற்றி மீனவர்களின் ஜீவனோபாயத்தை வழங்குவதற்கு உதவுமாறு சபையில் பிரேரணையொன்றை முன்வைத்தார்.

ஒலுவில் பிரதேச கடலரிப்பைத் தடுப்பதற்கு உடன் நடவடிக்கை அவசியம் ஏற்பட்டுள்ள அதேவேளை மீனவர்களது பிரச்சினைகளும் தீர்த்து வைக்கப்பட வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் இருவரும் தத்தமது வாதங்களை சபையில் எதிரும் புதிருமாக முன்வைத்தனர். (இ-7)


## காயத்திரி திருமாங்கல்ய சேவை

திருமணம், பொருத்தம் பார்த்தல், நிச்சயித்தல், குறிப்பு எழுதுதல் போன்ற சேவைகளை மிகவும் திருப்திகரமாக செய்து வருகின்றோம். எமது சேவையினூடாக உங்கள் பிள்ளைகளின் மணவாழ்வினை மங்கல வாழ்வாக்கிக் கொள்ளுங்கள்.

பதிவுகள் இலவசம்.

(5943) தொடர்புகளுக்கு:- 076 835 1932, 021 223 2222 உரும்பிராய்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.நடேசன் பாக்கியநாதன்
(Med, MA, PGDE,BA)

Best Wishes - எமது கல்லூரி ஆசிரியர் திரு.நடேசன் பாக்கியநாதன் அவர்கள் 2018 ஆம் ஆண்டிற்கான இலங்கை கல்வியமைச்சினால் தேசிய ரீதியில் வழங்கப்படும் ஆசிரியருக்கான "குரு பிரதீபா பிரபா" விருதினைப் பெற்று எமது கல்லூரிக்கு பெருமையினைச் சேர்த்துள்ளார். அவரை வாழ்த்துவதில் எமது கல்லூரிச் சமூகம் பெருமையடைகின்றது.

வாழ்த்துவோர்:
பணியாளர் நலன்புரிச் சங்கம்,
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி,
வல்வெட்டித்துறை.



## 101 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



குப்பிளான் திரு
கந்தையா
கிருஷ்ணன் (சிங்கப்பூர்)
17.10.2018

தங்களின் ஆரம்ப ஊக்குவிப்புடனும் நிதியுதவியுடனும் குப்பிழான் விக்கினேஸ்வராவுக்கு பிரதான மண்டபமும் சரஸ்வதி சிலையும் அமைத்து வழங்கியதுடன் மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பையும் விளையாட்டு கழகங்களின் மூலம் உடல் உறுதியை பேணுவதற்கான அவற்றுக்கான ஊக்குவிப்பு நிதியையும் ஏழை மக்களுக்கான உலர் உணவுப் பொதி நூறையும் வழங்கி மகிழ்விக்கும் தங்களுக்கு எமது பல்லாண்டு நல்வாழ்த்துக்கள்

குப்பிளான் விக்கினேஸ்வர ம.வி.பழைய மாணவர்கள் சார்பில்
திரு.தில்லைநாதன் ரவீந்திரநாதன் MA
(அதிபர்,யா/நீர்வேலி சி.சி.த.க.பாடசாலை)


## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை பாடசாலை மண்டபத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறும். (இ)

## தரம்-6 அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியில் 2019 ஆம் ஆண்டிற்கான தரம் 6 அனுமதிக்குரிய விண்ணப்பப்படிவங்கள் நாளை மறுதினம் 19.10.2018 வெள்ளிக்கிழமை தொடக்கம் வழங்கப்படும். விண்ணப்பங்களை பூர்த்தி செய்து 31.10. 2018இற்கு முன்னர் ஒப் படைக்க வேண்டும் என அதிபர் கே.குமணன் அறிவித்துள்ளார். (இ)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 65 சூரிசெவ் 4 இல்
உயரம்: 172cm
தகைமை/தொழில்:Eng/நியூசிலாந்து
தொ.இ: B/8976

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: சூரிசெவ் 1 இல்
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ: B/8978

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: சூரிசெவ் 11 இல்
தகைமை/தொழில்:O/L/வியாபாரம்
தொ.இ: B/8979

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்
தொ.இ: B/8980

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 31 செவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/8982

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 91 செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: G/1531

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 32சூரிசெவ் 10 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:பட்டதாரி/ஆசிரியர்
தொ.இ: G/1543

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 23
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/1549

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# Yogis
INSTITUTE OF BEAUTY THERAPY
HAIR DRESSING &
HOME SCIENCE (Pvt) Ltd.

பண்டிகைக்கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புகள்

## 3 நாட்கள் மட்டும்

2018 ஒக்டோபர் 20, 21, 24 திகதிகளில் (C-4143)

காலை 10.00 மணி முதல் ஆரம்பம். இலகுவாகவும், வித்தியாசமாகவும் விரைவாகவும், செய்யக்கூடிய

- 5 கேக் வகைகள்
- 5 பேஸ்ரி வகைகள் (Pastries)
- 5 Sweets வகைகள்

வகுப்புக்களில் சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்

077 716 4923
021 222 2796
75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.

# தமிழரசுக் கட்சி இளைஞர் அணிக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு

(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணிக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட அலுவலகமான தாயகத்தில் கட்சியின் கிளைத்தலைவர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே தெரிவு நடைபெற்றது.

இதன்போது இளைஞர் அணியின் மாவட்ட தலைவராக பாலச்சந்திரன் சிந்துஜன், செயலாளராக ஜெயராசா விதுசன், உப தலைவராக ச.பத்மசீலன், உப செயலாளராக செல்வன் சிவகுரு பகீரதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் மாவட்டத்தின் சகல உள்ளூர் அதிகாரசபை பிரதேசங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 21 நிர்வாக உறுப்பினர்கள் அடங்கலாக 25 உறுப்பினர்களைக் கொண்ட புதிய நிர்வாகம் தெரிவுசெய்யப்பட்டது. (2-281)




# வவுனியா வடக்கு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் குடிநீர் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆராய்வு





(குருமன்காடு)

வவுனியா வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேசச் செயலாளர் க.பரந்தாமனின் நெறிப்படுத்தலின் கீழ் நெடுங்கேணி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் புனர்வாழ்வு மீள்குடியேற்றம், வடக்கு அபிவிருத்தி பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோரின் இணைத் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் தொடர்பிலும் இப்பகுதியில் பரவும் சிறுநீரக பிரச்சினைகளுக்கு தீர்வாக குடிநீரை சுகாதார பரிசீலனைக்கு உட்படுத்தி பயன்படுத்தல், விவசாயிகள் யானைகளால் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வாக மின்சார வேலியமைத்தல் மற்றும் அமைச்சுக்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டங்களின் நிலைமைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் வவுனியா ஐ.தே.க.அமைப்பாளர் கருணாதாச, வவுனியா வடக்கு பிரதேச சபை தவிசாளர் இ.தணிகாசலம், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள், அரச உயர் அதிகாரிகள், பொலிஸார், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# மன்னார் மாவட்ட செயலகம் முன்பாக மக்கள் ஆர்ப்பாட்டம்





(மன்னார்)

முசலி பிரதேசச் செயலாளரை உடனடியாக இடமாற்றம் செய்யக்கோரி முசலி பிரதேச மக்கள் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முசலி பிரதேச செயலாளர் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அவரை உடனடியாக இடமாற்றம் செய்யக் கோரியே குறித்த ஆர்ப்பாட்டம் மக்களால் முன்னெடுக்கப்பட்டது.

மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக ஒன்று கூடிய முசலி பிரதேச மக்கள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து முசலி மக்கள் மன்னார் மாவட்டச் செயலக நுழைவாயில் வரை சென்றனர்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்ராஸிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்தனர்.

மகஜரை பெற்றுக்கொண்ட அரசாங்க அதிபர் கருத்து தெரிவிக்கையில், ஏற்கனவே குறித்த பிரதேசச் செயலாளர் விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டு மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தலைமையிலான குழுவினர் அங்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முசலி மக்களின் கோரிக்கைக்கு அமைவாக குறித்த குழுவினர் உடனடியாக அங்கு சென்று பிரதேசச் செயலாளரிடம் விசாரணைகளை மேற்கொள்வார்கள்.

நீங்கள் என்னிடம் சமர்ப்பித்த மகஜர் உடனடியாக அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-285)

# தேங்காய் உடைத்து தீச்சட்டி ஏந்தி 600வது நாளில் உறவினர்கள் கவனயீர்ப்பு





(குருமன்காடு)

வவுனியாவில் சுழற்சி முறையில் போராட்டம் மேற்கொண்டு வரும் தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட சங்கத்தின் குடும்ப உறவுகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டம் நேற்று முன்தினம் 600 நாட்களை எட்டியுள்ளது.

இதையடுத்து அன்றைய தினம் பிற்பகல் 12.30 மணியளவில் கந்தசாமி ஆலயத்தில் தேங்காய் உடைத்து விசேட வழிபாடுகளை மேற்கொண்ட காணாமலாக்கப்பட்ட உறவுகள் பேரணியாக பிரதான வீதி வழியாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் தமது போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

வவுனியாவில் கடந்த 600 ஆவது நாட்களாக சுழற்சி முறையில் போராட்டம் மேற்கொண்டுவரும் காணாமலாக்கப்பட்ட உறவுகளினால் அன்றைய தினம் தமிழ் அரசியல் கைதிகளில் விடுதலையை வலியுறுத்தி தேங்காய் உடைத்து விசேட பூஜை வழிபாடுகளை மேற்கொண்டுள்ளதுடன் தீச்சட்டி ஏந்தியவாறு பிரார்த்தனை மேற்கொண்டபின் பஜார் வீதி வழியாக ஹொரவப்பொத்தான வீதியைச் சென்றடைந்து அங்கிருந்து நீதிமன்றம் வழியாக போராட்ட களத்திற்கு கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொண்டவர்கள் பேரணியாகச் சென்றனர்.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திய பதாகைகளைத் தாங்கியவாறும் 600ஆவது நாட்களாக நீதிக்காகப் போராடுகின்றோம் எனவும் அரசியல் கைதிகளின் தாய்மாரும் வீதியோரத்தில் தான் காணாமலாக்கப்பட உறவுகளின் தாய்மாரும் நிற்கின்றார்கள். எங்களுக்கு எந்தவொரு தீர்வும் கிடைக்காத நிலையில் தான் நாங்கள் இந்த போராட்டத்தை மேற்கொள்வதாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் தெரிவித்தனர். (2-250)

# வவுனியாவில் தாய்மார் கழகத்திற்கு அரைக்கும் ஆலை திறந்து வைப்பு





(பனிக்கன்குளம்)

வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கத்தால் வவுனியா தவசிகுளத்தில் தாய்மார் கழகத்திற்கான தானியங்கள் அரைக்கும் ஆலை நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

மாகாண சபை உறுப்பினர் சத்தியலிங்கத்தால் மத்திய சுகாதார அமைச்சிடமிருந்து பெற்றுக்கொடுக்கப்பட்ட நிதியில் ரூபா பத்து இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

குடும்பப் போசாக்கை மேம்படுத்தும் முகமாக ஆறு தானியங்கள் அடங்கிய போசாக்கு உணவு தயாரிக்கும் நோக்கிலேயே இந்த அரைக்கும் ஆலை அமைக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் 64 தாய்மார் கழகங்கள் உருவாக்கப்பட்டு இயங்கிவரும் நிலையில் இதுவரையில் இதுபோன்று எட்டு அரைக்கும் ஆலைகள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த நிகழ்வில் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் லவன் செல்வரட்ணம், பிரதேசத்திற்கு பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர், தாய்மார் கழக அங்கத்தவர்களும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)







மன்னார் மாவட்ட செயலகத்தின் இந்து அலுவல்கள் மன்றத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் 10 மணியளவில் வாணிவிழா இடம்பெற்றது. மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மோகன்றாஸ் தலைமையில் வாணிவிழா பூஜையும் அதனைத் தொடர்ந்து பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், திட்டமிடல் பணிப்பாளர் , மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து.கொண்டிருந்தனர்.

(படங்கள்:- மன்னார் செய்தியாளர்)

## வெயிலில் பிஞ்சுகள் வாடியிருக்கும் என நினைத்தேன்

# புலிகள் பெற்ற பிள்ளைகள் புலிகளாகவே காத்திருந்தனர்

## கிளிநொச்சியில் இயக்குநர் பாரதிராஜா உணர்ச்சி பேச்சு




(கண்டாவளை)

**வெயிலில் பிஞ்சுபூக்கள் வாடியிருக்கும் என நினைத்தேன். ஆனால் இங்குள்ள பிள்ளைகள் புலிகள் பெற்ற பிள்ளைகள். அவர்கள் புலிகளாகவே காத்திருந்தமையை காண முடிந்தது என இயக்குநர் சிகரம் பாரதிராஜா கிளிநொச்சியில் வைத்து உணர்வு பூர்வமாக தெரிவித்தார்.**

கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தின் கணனிக் கூடத்தை மாணவர்களின் பயன்பாட்டிற்கு தென்னிந்திய திரையுலகினர் திறந்து வைத்தனர்.

குறித்த நிகழ்வு நேற்று முற்பகல் 11 மணியளவில் பாடசாலை அதிபர் பெருமாள் கணேசன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய போதே இயக்குநர் பாரதிராஜா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் விருந்தினர்களாக தென்னிந்திய திரையுலக இயக்குநர் பாரதிராஜா, தயாரிப்பாளரும் நடிகருமான பாக்கியராஜ், இளம் நடிகர்கள் மற்றும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

லண்டனில் உள்ள சித்தி விநாயகர் ஆலயத்தின் 1.5 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குறித்த கணனிக்கூடம் மாணவர் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்டது.

**இந்நிகழ்வில் உரையாற்றிய நடிகரும், இயக்குநருமான பாக்கியராஜ்,**

பாடசாலை கல்வி என்பது மிகவும் முக்கியமானது. நான் பாடசாலை கல்வியை முழுமையாக தொடரவில்லை. கல்வியை இடையில் நிறுத்திவிட்டு சினிமாத்துறைக்குள் சென்றுவிட்டேன். இன்று கல்வியின் பெறுமதியை நன்கு உணர்கின்றேன். கல்வி என்பது மிக மிக முக்கியமானது.

அந்த கல்வியை இடையில் விட்டுவிடாதீர்கள். நான் பாடசாலை கல்வியை இடையில் விட்டமையையிட்டு இப்போது மிகவும் வருந்துகின்றேன். இன்று மிகவும் கவலை அடைகின்றேன். கல்வியின் முக்கியத்தை வெளிநாடுகளுக்கு செல்லும் போதுதான் உணர முடிகின்றது.

இங்கு ஆங்கிலத்தில் பலரும் பேசும்போது ஆங்கிலம் தெரியாமல் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றேன்.

அருகில் இருப்பவர்களிடம் என்ன பேசுகின்றனர் என்று கேட்கவேண்டி உள்ளது. எனவே பாடசாலை கல்வி என்பது மிகவும் முக்கியம். பிள்ளை பருவத்தில் சிறந்த வகையில் பாடசாலை கல்வியை தொடருங்கள் என அவர் குறிப்பிட்டார். குறித்த விடயங்களை குறிப்பிடுகையில் அவர் கண்கலங்கினார்.

**அதன்பின் உரையாற்றிய சி.சிறிதரன்,** சாந்தபுரம் என்பது மாவீரன் சாந்தனின் நினைவாக உருவாக்கப்பட்டமை தொடர்பிலும், இப்பகுதி மக்கள் குடியேற்றப்பட்ட போது பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டு பெரும் சிரமங்கள் ஏற்படுத்தப்பட்டமை தொடர்பிலும் குறிப்பிட்டார். (2-315)

## உப உணவுப் பயிர்ச்செய்கையை மட்டுமே கனகாம்பிகைக்குளத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டும்

### கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கனகாம்பிகைக் குளத்தின் கீழ் உபவுணவு பயிர்ச்செய்கை மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் வடிகால்கள் மற்றும் நீர்ப்பாசனம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் மேற்கொள்ள வேண்டுமெனவும் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி நீர்ப்பாசனத்திணைக்களத்திற்குட்பட்ட கனகாம்பிகைக்குளத்தின் கீழான நிலப்பரப்பிற்குள் உப உணவுச் செய்கைகள் மேற்கொள்வதற்காகவே வழங்கப்பட்டது.

தற்போது இக்குளத்தின் கீழ் குறிப்பிட்டசில காணிகள் நெற்செய்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றன.

அண்மையில் நடைபெற்ற விவசாயக்குழுக்கூட்டத்தின் போது, கனகாம்பிக்கைக் குளத்திற்குட்பட்ட 100 ஏக்கர் உப உணவு பயிர்ச்செய்கை நிலப்பரப்பில்நெற்செய்கைக்காக மானியப்பசளைகள் வழங்குமாறு கோரப்பட்டுள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வே. ஆயகுலன் தெரிவித்துள்ளார்.

இதற்குப்பதிலளித்த மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், அரசாங்கத்தின் பிரதான கொள்கையில் உப உணவுப்பயிர்ச் செய்கைகளை ஊக்குவித்தல் மிக முக்கியமான ஒன்றாகும்.

இக்காணிகளில் நெற்செய்கைகளை ஊக்குவித்தலானது மேட்டுப்பயிர்ச்செய்கைக்கென ஒதுக்கப்பட்ட காணிகளை இழக்கநேரிடலாம் என்ற அடிப்படையிலும் கனகாம்பிகைக்குளம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி உபஉணவுப் பயிர்ச்செய்கைகளுக்கே இந்த நிலம் பயன்படுத்த வேண்டும்.

இது தொடர்பில் நீர்ப்பாசனம், வடிகால்கள் தொடர்பான பிரச்சினைகளைத்தீர்ப்பதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் முயற்சி செய்ய வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)




## பாண்டியன் குளம் கமநல சேவை நிலைய விவசாயிகளுக்கான மானிய உரம் விநியோகம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாண்டியன்குளம் கமநலசேவை நிலையத்திற்குட்பட்டவிவசாயிகளுக்கான மானிய உரம்எதிர்வரும்22ஆம்திகதி முதல் வழங்கப்படவுள்ளதாக கமநலசேவை நிலையத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் காலபோக நெற்செய்கை விதைப்பு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் பாண்டியன்குளம் கமநலசேவை நிலையத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கான மானிய உரம் எதிர்வரும் 22ஆம்திகதி முதல் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் எதிர்வரும் 22ஆம் திகதி நட்டாங்கண்டல் விவசாயிகளுக்கும் மறுநாள் 23ஆம்திகதி அம்பாள்புரம்மற்றும்வன்னிவிளாங்குளம் விவசாயிகளுக்கும் 25ஆம் திகதி பாலைப்பாணி விவசாயிகளுக்கும் 29ஆம் திகதி கண்ணகி மற்றும் மூன்று முறிப்பு விவசாயிகளுக்கும் பாண்டியன்குளம் கமநலசேவை நிலையத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 29ஆம்திகதிவரையும்ஏனைய பிரதேசங்களுக்கான மானிய உரங்கள் பிரதேச உரக்களஞ்சியங்கள் ஊடாகவும் கமநல சேவை நிலையங்கள் ஊடாகவும் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

## கற்கைநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள்




(பரந்தன்)


கிளிநொச்சி திருநகரில் அமைந்துள்ள லிற்றில் எய்ட் திறன் விருத்தி நிலையத்தில் இலவச கற்கைநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

ஆசிரியர் தயாளன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரும், கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளருமான உடுவை எஸ். தில்லைநடராஜா, யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார், லிற்றில் எய்ட் நிறுவனத்தின் லண்டன் இணைப்பாளர் ஜெயபாலன், ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி யோகநாதன், ஓய்வுபெற்ற கரைச்சி பிரதேச சபை செயலாளர் அருள்சோதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பல்வேறு துறைகளில் கற்கைநெறிகளை பூர்த்தி செய்த மாணவர்களும், தையல் பயிற்சியை பூர்த்தி செய்த மாணவிகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. (2-312)

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2018-16.11.2018



விளம்பி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் உச்சம் பெற்றிருக்கிறார். அதோடு சந்திரனோடும், கேதுவோடும் இணைந்து தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். இதனால் சந்திர மங்கள யோகம் உருவாகின்றது. எனவே குடும்பத்தில் நீண்டகாலமாக நடைபெறாமல் இருந்த சுபகாரிய நிகழ்வுகள் இப்பொழுது நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும்.

உங்கள் இராசிக்கு 7ஆம் இடத்தில் சூரியன் நீச்சம் பெறுகிறார். பஞ்சம ஸ்தானாதிபதி சூரியன் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. இருப்பினும் ஆட்சி பலம் பெற்றிருக்கும் சுக்ரனோடு இணைந்து சூரியன் சஞ்சரிப்பதால் நீசபங்க ராஜயோகம் ஏற்படுகிறது. எனவே பிள்ளைகளால் தொல்லைகள் ஏற்பட்டாலும் பிரச்சினைகள் படிப்படியாக நல்ல முடிவிற்கு வரும். புத-சுக்ர யோகமும் இம்மாதம் இருப்பதால் பொருளாதாரப் பற்றாக் குறை அகலும். தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்க கூட்டாளிகள் வழிவகுத்துக் கொடுப்பர்.

ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். சீர்வரிசைப்பொருட்கள் வாங்குவது முதல் வாகனம் வாங்கும் யோகம் வரை அனைத்தும் கைகூடும் நேரமிது. பெருமைக்குரிய சம்பவங்கள் நிறைய நடைபெறும். குரு அஷ்டமத்தில் அடியெடுத்து வைத்துவிட்டாரே என்று கவலைப்பட வேண்டாம்.

குரு இருக்கும் இடத்தைக் காட்டிலும் பார்க்கும் இடத்திற்கே பலன்அதிகம் என்பதால் பயப்படத்தேவையில்லை. 2, 4, 12 ஆகிய இடங்களை குரு பார்ப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவர். வீண் வம்பு, வழக்குகளில் சிக்கியிருந்த உங்களுக்கோ, உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கோ அதில் இருந்து விடுபடும் வாய்ப்பு கிடைக்கும். அஷ்டமத்து குருவால் ஆனந்தமான வாழ்க்கை அமைய, வியாழன் தோறும் குருவை வழிபடுவது நல்லது. மாதத் தொடக்கத்திலேயே சரஸ்வதி பூஜையும், அடுத்த நாள் விஜயதசமியும் வருகின்றது. சரஸ்வதி பூஜை அன்று நாமகளையும் விஜயதசமி அன்று பராசக்தியையும் வழிபாடு செய்தால் வளர்ச்சியில் உள்ள தளர்ச்சி அகலும்.

**விருச்சிக புதன் சஞ்சாரம்!**

ஒக்டோபர் 24ஆம் திகதி விருச்சிக இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். ஜீவன ஸ்தானாதிபதியாக விளங்கும் புதன் மறைவிடத்திற்கு வரும்பொழுது, மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். மேலும் அஷ்டமத்தில் இருக்கும் குருவோடு புதன் இணைகிறார். குரு பகவான் உங்கள் இராசி யைப் பொறுத்த வரை 9, 12 ஆகிய இடங் களுக்கு அதிபதியான

வர். 12 இற்கு அதிபதி 6 இற்கு அதிபதியோடு இணையும் பொழுது, விபரீத ராஜயோக அடிப்படையில் சில எதிர்பாராத நற்பலன்கள்உங்களுக்கு கிடைக்கும். பயணங்கள் பலன் தருவதாக அமையும். பக்குவமாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். காலதாமதமான காரியங்கள் கடகடவென நடைபெறும்.

**கும்ப செவ்வாய் சஞ்சாரம்!**

ஒக்டோபர் 27ஆம் திகதி கும்ப இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். இராசிநாதன் லாப




ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரம் நிதிநிலை உயரும். நிம்மதி கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை எதிர்பார்த்த படியே வந்து சேரும். வி.ஐ.பிக்கள் அறிமுகம் ஆவார்கள்.

சொந்த வீடில்லை என்று கவலைப்பட்டவர்களுக்கு, இந்த செவ்வாய் பெயர்ச்சி சொத்து சேர்க்கைக்கு வழிவகுத்துக் கொடுக்கப் போகிறது. சகோதர ஒற் றுமை பலப்படும். விலகிச் சென்ற உடன் பிறப்புகள் வீடு தேடி வந்து உங்கள் முயற்சி க்கு உறுதுணையாக இருப்பர்.

**வக்கிர புதன் ஆதிக்கம்!**

சில கிரகங்கள் வக்கிரம் பெறும்பொழுது, அதிக அக்கறை காட்ட வேண்டும். 6இற்கு அதிபதியான புதன் வக்கிரம் பெறும்பொழுது, புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும். சாதகமான தீர்ப்பு உங்களுக்கு வரலாம். இதுபோன்ற நிகழ்வு நவம்பர் 13ஆம் திகதி துலாம் இராசியில் புதன் வக்கிரம் பெறும் நேரத்தில் நடைபெறும். அங்குள்ள சுக்கிரனோடு இணைவதால் அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வந்து அணிந்து அழகு பார்க்கும் சூழ்நிலை உண்டு. இம் மாதம் செவ்வாய் தோறும் விரதமிருந்து முருகப்பெருமானை வழிபடுவதோடு, சூரசம்ஹாரத்தன்று சுப்பிரமணியரை வழிபட்டால் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

மாதத் தொடக்கத்தில் பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். மனதளவில் நினைத்ததை மறு கணமே செய்து முடிப்பீர்கள். குணத்தில் தங்கம் என்று பெயர் எடுப்பீர்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். கணவன்-மனைவி உறவில் அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் உங்களுக்கு பெருமை சேர்க்கும் விதம் நடந்துகொள்வர். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். கும்பச் செவ்வாயின் ஆதிக்க காலத்தில் குடியிருக்கும் வீட்டைக் கூட விலைக்கு வாங்க நேரிடும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. சரஸ்வதி பூஜையன்று கலைவாணி வழிபாடும், வியாழன் தோறும் தட்சிணாமூர்த்தி வழிபாடும் வெற்றிக்கு வித்திடும்.

## சுபச் செலவுகள் அதிகரிக்கும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



விளம்பி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. அதேநேரத்தில் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் ஒருபுறம் இருக்கிறது. சனியால் ஏற்படும் தொல்லைகள் குருவின் பார்வை பலத்தால் நீங்கும் என்பது பொதுவிதி. இருப்பினும் உங்கள் சுய ஜாதகத்தில் தசாபுத்தி பலம் பெற்றிருந்தால் தடைகளும், தாமதங்களும் அகலும். தனவரவு திருப்திகரமாக இருக்கும். எனவே இம்மாதம் முழுவதும் இனிய பலன்கள் உங்களுக்கு வரவேண்டுமானால் வியாழன் தோறும் குருபகவான் வழிபாட்டை மேற்கொள்ளவேண்டும். சனிக்கிழமைதோறும் சனி பகவான் வழிபாட்டையும், அனுமன் வழிபாட்டையும் தவறாமல் மேற்கொள்ளவேண்டும்.

ஒருவருக்கு அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் நடைபெறும் பொழுது தான் சிக்கல்களும், சிரமங்களும் அதி கரிக்கும். தக்கவிதத்தில் மற்றவர்கள் செய்யும் உதவியைக் கூட பக்கத்தில் இருப்பவர்கள் தடுத்து விடுவர். எனவே வருமானப் பற்றாக் குறையின் காரணமாக, வாங்கும் கடன்களின் சுமை கூடிக்கொண்டே செல்லும். திட்டமிட்ட காரியம் திசைமாறிச் செல்லாமல் இருக்கவும், தேக ஆரோக்கியம் சிறப்பாக அமையவும் குரு பார்வை நேரடியாக உங்கள் இராசியில் பதிய வேண்டும்.

அந்த நிலை இப்பொழுது இருப்பதாலும், குரு பார்வை நேரடியாக உங்கள் இராசியில் பதிவதாலும், மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும் என்றே சொல்லலாம். குரு உங்கள் ராசிநாதன் சுக்ரனுக்கு பகை கிரகமாக இருந்தாலும், நவக்கிரகங்களில் சுப கிரகம் என்பதால் நல்ல வாய்ப்புகளைக் கொடுக்க வேண்டும் அல்லவா? எனவே எதிலும் உங்கள் கை ஓங்கும். இதயத்தில் மகிழ்ச்சி குடிகொள்ளும். விலகிய உறவினர்கள் விரும்பி வந்து இணைவர்.

இதுபோன்ற காலங்களில் நீங்கள் குல தெய்வ வழிபாட்டை மேற்கொள்வ தோடு, மற்ற தெய்வங்களின் வழிபாட்டையும் மேற்கொள்ளவேண்டும். பிரதோஷம் தோறும் நந்தி வழிபாடு, சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயர் வழிபாடு செய்தாலே வெற்றிப் படிக்கட்டில் ஏறலாம். இம்மாதம் முதல் நாளே சரஸ்வதி பூஜை வருகின்றது. அன்றைய தினம் கலைவாணி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். விஜயதசமி அன்று அம்பிகையின் பூஜையில் கலந்துகொள்ளுங்கள்.

ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அவர்களுக்கு காலாகாலத்தில் நடைபெற வேண்டிய கல்யாணக் கனவுகள் நடைபெறாமல் இருக்கிறதே என்ற கவலை இனி அகலும். மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான வழிபிறக்கும்.

**கும்பச் செவ்வாய் சஞ்சாரம்!**

இதுவரை உங்கள் இராசிக்கு 7, 12இற்கு அதிபதியான செவ்வாய் 9ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்தார். இப்பொழுது 10ஆம் இடத்திற்குஅடியெடுத்து வைக்கப் போகிறார். 10இல் செவ்வாய் வரும்பொழுது பலரையும் வைத்து வேலை வாங்கும் யோகம் உண்டு. அந்த அடிப்




படையில் பார்க்கும் பொழுது ஒரு சிலருக்கு சுயதொழில் செய்யும் யோகம் தானாகவே வந்துசேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு

புரிபவர்களின் செயற்பாட்டையும் கண்டறிந்து அதன்பிறகு ஏற்றுக்கொள்வது நல்லது. குடும்பத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் வாங்கி மகிழ்வது நல்லது. இதன் மூலம் விரயங்களில் இருந்து விடுபட இயலும். தட்டுப்பாடுகள் அகல கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டிய நேரமிது. அதுமட்டுமல்லாமல் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலமே விருப்பங்கள் நிறைவேறும். நல்ல திருப்பங்கள் உருவாகும். வெளியூரில் படிக்கும் பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். இம்மாதம் பார்க்கும் குருவைப் பலப்படுத்த சிவாலயத்தில் உள்ள அறுபத்து மூவர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். கந்தசஷ்டியில் சுப்பிரமணியரை வழிபட்டால் சுகங்களும், சந்தோஷங்களும் கூடுதலாக கிடைக்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் உங்களுக்கு செலவுகள் அதிகரிக்கலாம். தெளிவான மனோநிலையில் இருந்து கொண்டு செயற்படுவீர்கள். வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளுக்கு வள்ளல்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். வாரிசுகளால் பிரச்சினை ஏற்படாமல் இருக்க உங்கள் நேரடிப் பார்வை தேவை. கணவன்-மனைவிக்குள் ஒருவரையொருவர் விட்டுக்கொடுத்து புரிந்துகொண்டு செயற்பட்டால் ஒற்றுமை பலப்படும். நீண்ட தூரத்திற்கான பணிமாறுதல்கள் கிடைக்கும். மேலதிகாரிகள் இதுவரை உங்களுக்கு தராமல் இருந்த பதவி உயர்வைக்கூட உங்களுக்கு இப்பொழுது கொடுக்கலாம். விஜயதசமியன்று வெற்றியை வழங்கும் நவராத்திரி நாயகியை வழிபாடு செய்யுங்கள். சனிக்கிழமைகளில் ஆதியந்தப் பிரபுவை வழிபடுவது நல்லது.

## கல்யாணக் கனவுகள் நனவாகும்!

**விருச்சிக புதன் சஞ்சாரம்**

ஒக்டோபர் 24ஆம் திகதி விருச்சிக இராசிக்குப் புதன் செல்கிறார். தன பஞ்சமாதிபதி புதன் உங்கள் இராசியைப் பார்க்கும் இந்நேரத்தில் பணவரவு திருப்திகரமாக இருக்கும். பக்கபலமாக இருக்கும் நண்பர்களின் எண்ணிக்கை உயரும். உறவினர் பகை அகலும். உயர் பதவி கிடைக்கும். ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. பிள்

வரலாம். நிதிப் பற்றாக்குறை அகலும்.

**புதனின் வக்கிர இயக்கம்**

நவம்பர் 13ஆம் திகதி துலாம் இராசிக்கு புதன் வக்கிர இயக்கத்தில் செல்கிறார். இந்த வக்கிர இயக்கம் அவ்வளவு நல்லதல்ல. பணப் பற்றாக்குறை ஏற்படும். கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற இயலாது. பிரச்சினையும் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்களை ஏற்றுக்கொள்ளும் பொழுது, பணி

(தொடரும்)

# கூட்டு ஒப்பந்தம் என்ற பேரில் மக்களின் உழைப்புச் சுரண்டல்

## சி.பி.ரத்நாயக்க எம்.பி தெரிவிப்பு



(கொழும்பு)

கூட்டு ஒப்பந்தம் என்ற பேரில் மலையக மக்களின் கடுமையான உழைப்பு மாத்திரமே சுரண்டப்படுகின்றது. தேசிய அரசாங்கம் தோற்றம் பெற மலையக மக்கள் பிரதான பங்கு வகித்தனர். ஆனால் இன்று அவர்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசாங்கம் பின்வாங்குகின்றது என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மலையகத்தில் இன்று பொய்யான அபிவிருத்திகள் மாத்திரமே முன்னெடுக்கப்பட்டுள்ளன. நிர்மாணிக்கப்பட்டுள்ள குடியிருப்புக்களும் அம்மக்களின் விருப்பத்திற்கு முரணாகவே அமைக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் கட்சி காரியாலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் பெற்றுத்தர வேண்டும் என்ற நோக்கத்தில் உருவாக்கப்பட்ட கூட்டு ஒப்பந்தம் தொழிற்சங்கத்தினரதும், முதலாளிமார் சம்மேளனத்தினரது தனிப்பட்ட நலன்களை மாத்திரமே நிறைவேற்றியுள்ளது.

இதற்காக அப்பாவி மக்களின் கடுமையான உழைப்பு தொடர்ந்து பொய்யான வாக்குறுதிகளால் சுரண்டப்பட்டுள்ளது. இன்றும் சுரண்டப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி வேட்பாளருக்கு சமல் தான் தகுதியானவர்

## கோத்தாவை பகிரங்கப்படுத்திய பந்துலவுக்கு வாசுதேவ பதில்





(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருக்கு சமல் ராஜபக்ஷவே தகுதியானவர். அவரை நியமிப்பதற்கு எமது கட்சி திட்டமிட்டு செயற்படவுள்ளது என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி நேற்று முன்தினம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டு எதிர்க்கட்சியின் ஜனாதிபதிவேட்பாளர்யாராக இருக்க வேண்டும் என்பது தொடர்பில் இதுவரைக்கும் நான் பகிரங்கமாக தெரிவிக்கவில்லை. கூட்டு எதிர்க்கட்சியில் இருக்கும் கட்சிகளுக்கிடையில் வீண் பிரச்சினைகள், தர்க்கம் ஏற்படக்கூடாது என்பதற்காக ஊடகங்களுக்கு வெளிப்படுத்தாமல் வந்தேன்.

இருந்தபோதும் கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பந்துல குணவர்த்தன ஜனாதிபதி வேட்பாளருக்கு மிகவும் பொருத்தமானவர் என தெரிவித்து அவர் ஒருவரின் பெயரை ஊடகங்களுக்கு பகிரங்கமாக தெரிவித்திருந்தார்.

அதனால்தான் இதுவரை காலமும் நான் பகிரங்கப்படுத்தாமல் இருந்துவந்ததை வெளிப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. சமல் ராஜபக்ஷவே ஜனாதிபதி வேட்பாளருக்கு தகுதியானவர் என்பதை நாங்கள் தெரியப்படுத்தவேண்டியதில்லை. அது எல்லோரும் அறிந்தவிடயம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸ் அதிகாரி பலி! பெண் வைத்தியருக்கு மீண்டும் விளக்கமறியல்

(கொழும்பு)

வாகன விபத்தொன்றில் கைது செய்யப்பட்ட பெண் வைத்தியரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொரலஸ்கமுவ, விக்ரமரத்ன பகுதியில் கார் மற்றும் ஜீப் ரக வாகனமொன்றும் மோதி விபத்திற்குள்ளானதில் பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உயிரிழந்தார்.

குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பில் காரைச் செலுத்திய வைத்தியரான பெண் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த பெண் வைத்தியரை நேற்று மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது அவரை இம்மாதம் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1533

### மீனாட்சி

பதில் தெரிந்தும் கேள்வி கேட்பவர்கள்



மனைவிகளும் ஆசிரியர்களும் மட்டுமே!!!

### சக்தி

ஒரு ஆனுக்கு நிறைய பெண் தோழிகள் இருந்தால் அவன் காதல் மன்னனாதான் இருக்கனும்கு அவசியம் இல்லை. கண்ணியமானவனாகவும் இருக்கலாம்



### அனு



வலிகளும் துயரங்களும் இழப்புகளும் எல்லா உயிர்களுக்கும் ஒன்று தான் என்பதை இயற்கை உணர்த்திய காட்சி

### துர்க்கா

அவளை நினைத்து கவிதை எழுதி அவளிடம் கொடுத்தேன்



வாங்கிப் படித்துவிட்டு கேட்டா பாரு ஒரு கேள்வி... " அண்ணா யாரையாவது லவ் பண்றீங்களா..."

### கங்கா

நாளைக்கு லீவு என்பதில்...



இன்னமும் நம்மில் இருக்கும் குழந்தைத்தனம் வெளிப்படுகிறது

### ஐஸ்வர்யா

டுவிட்டர், பேஸ்புக், வட்ஸ் அப்புக்குள்ள வந்தா முதல்ல நேரம் போறது தெரியாது, அப்புறம்



நாம வீணாப் போறது தெரியவே தெரியாது...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.





யாழ்.கரணவாய் மகா வித்தியாலயத்தில் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. அதிபர் ச.சண்முகநாதன் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் , சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண் சபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம், ச.சுகிர்தன், வே.சிவயோகன், க.தர்மலிங்கம், சி.அகிலதாஸ் , கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ,வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் , வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-மகாலிங்கம்)

## நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் 90வது பிறந்தநாள் நினைவு நிகழ்வு




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகமானது நடிகர் திலகம் பத்மபூஷண், செவாலியே சிவாஜி கணேசனின் 90ஆவது பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு சிறப்பு நினைவு நிகழ்வினை கடந்த 14.10. 2018 அன்று ஞாயிற்றுக்கிழமை மாலை தூதரக முன்றலில் ஏற்பாடு செய்திருந்தது.

இலங்கையின் முன்னாள் இராஜதந்திரி தர்மகுலசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பொ.தயானந்தன், மருத்துவர் பிரசாந்தன், உயர் அதிகாரிகள், தூதரக அலுவலர்கள் மற்றும் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் ரசிகர்கள் எனப்பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட இந் நிகழ்வில் யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன் மற்றும் தர்மகுலசிங்கம் நடிகர் திலகத்தின் நடிப்புத் திறன் மற்றும் அவரின் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றி நினைவு கூர்ந்து சிறப்புரையாற்றினர்.

அதனைத் தொடர்ந்து நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் திரைப்படங்களில் இடம்பெற்ற முக்கிய காட்சிகளை தொகுத்து உருவாக்கப்பட்ட சிறப்பு காணொலி தர்மகுலசிங்கத்தின் நேரடி வர்ணனையுடன் காட்சிப்படுத்தப்பட்டது. (இ-7)

## சர்ச்சையை ஏற்படுத்திய சிவப்பு அறிவித்தல்

(சாவகச்சேரி)

தென்மராட்சியின் பல பகுதிகளில் கடந்த 4மாத காலமாக மின் பட்டியல் பதியப்படாமல் இறுதியாக வழங்கிய 4மாதத்திற்கான மின் பட்டியலுடன் சேர்த்து மின் கட்டணம் செலுத்தாததற்கான சிவப்பு அறிவித்தல் சேர்த்து வழங்கப்பட்டதாக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் கு.குகானந்தன் சுட்டிக் காட்டியுள்ளார்.

சபை அமர்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிரதேசசபையில் இடம்பெற்ற போதே அவர் இவ் விடயத்தை தவிசாளரிடம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அண்மையில் நாவற்குழி,கைதடி,மட்டுவில் பகுதிகளில் 4மாத காலம் பதியப்படாத மின் பட்டியலுடன் சேர்த்து சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பிரதேசசபைத் தவிசாளர் மின்சார சபைக்கு ஏற்கனவே கடிதம் ஒன்று வழங்கியும் இந்த நிலை தொடர்கிறது.

சாவகச்சேரி பிரதேசசபை இது தொடர்பாக மீண்டும் ஒரு கடிதத்தை மின்சார சபைக்கு உடனடியாக அனுப்ப வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார். (இ-30)

## தூத்துக்குடி மீனவர்களுக்கு 3 மாதங்கள் சிறைத் தண்டனை

## ரூ.60 இலட்சம் அபராதம்

(கற்பிட்டி)

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு புத்தளம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த தூத்துக்குடி மீனவர்கள் 8 பேருக்கு மூன்று மாதங்கள் சிறைத்தண்டனை மற்றும் தலா 60 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து கற்பிட்டி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தத் தகவலை அறிந்த தூத்துக்குடி மீனவர்கள் "சொந்தமாக படகு இல்லாத காரணத்தினால் தான், நாங்களே மற்றவர்களின் படகுகளில் கூலிக்காக கடல் தொழிலுக்குப் போகின்றோம். இந்த நிலையில் 60 இலட்சம் ரூபாய் அபராதமா? அவ்வளவு பணத்துக்கு நாங்க எங்க போவது? அரசு தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்." என கண்ணீர் வடித்துள்ளனர்.

இதில் தூத்துக்குடி திரேஸ்புரம் கடல்பகுதியைச் சேர்ந்த வினோத்குமார், அந்தோணி ரூபின்ஸ்டன், வில்பிரட், விஜய், ரமேஷ், ஆரோக்கியம், வினோதன் மற்றும் பாக்கியம் ஆகிய 8 மீனவர்களுக்கே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதி கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர்.

நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கைக் கடற்படையினர் அவர்களைச் சுற்றி வளைத்து, "எல்லை தாண்டி மீன்பிடித்ததால் உங்களைக் கைது செய்கிறோம்" எனக்கூறி, துப்பாக்கி முனையில் படகுடன் இலங்கைக்கு அழைத்துச் சென்றனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் கற்பிட்டி சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பின்னர் புத்தளம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த நிலையில், இந்த வழக்கு, மீண்டும் கற்பிட்டி நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரணை செய்த நீதிபதி, மீனவர் ஒருவருக்கு தலா 60 இலட்சம் ரூபாய் அபராதமும், எதிர்வரும் 2019ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் திகதி வரை அதாவது மூன்று மாதங்கள் சிறைத்தண்டனையும் அளித்து தீர்ப்பளித்தார்.

இதைத் தொடர்ந்து, மீனவர்கள் மீண்டும் புத்தளம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## வறுமை ஒழிப்புத்திட்டத்தின் கீழ் 5 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபைக்கு வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் 5இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் கந்தையா வாமதேவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தவிசாளர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் இந்தப் பணத்தை சபையில் உள்ள 31 உறுப்பினர்களுக்குப் பிரிக்காது 17 வட்டாரத்திற்குப் பிரிக்க வேண்டும். உறுப்பினர்களுக்குப் பிரிக்கும் பட்சத்தில் பண பெறுமதி குறைந்து விடும்.

அத்துடன் அர்த்தமுள்ள வறுமை ஒழிப்பாகவும் அது இருக்காது. ஒவ்வொரு வட்டாரத்திலும் மிகவும் வறுமைப்பட்ட குடும்பங்களைத் தெரிவு செய்து வருமானம் ஈட்டக்கூடிய வழி வகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மேசன், தச்சன் தொழில்களை மேற்கொள்ள உபகரணங்கள் இன்றி இருப்பவர்களுக்கு அதற்கான உபகரணங்களை கொள்வனவு செய்து கொடுத்தால் அது பயனுள்ளதாக இருக்கும். கோழி மற்றும் கால்நடைகள் வறுமை ஒழிப்பிற்கு பெரிதாக உதவ மாட்டாது.

அவை அடிக்கடி நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகி நட்டத்தை உண்டு பண்ணும். தையல் பயின்று தையல் இயந்திரம் இல்லாமல் இருப்பவர்கள், வேலைக்குச்செல்ல துவிச்சக்கரவண்டி இல்லாமல் இருப்பவர்கள்ஆகியோரை இனங்கண்டு உறுப்பினர்கள் வறுமை ஒழிப்புத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

உறுப்பினர்கள் பயனாளிகளின் பெயர் விபரங்களை உடனடியாகத்தந்துதவ வேண்டும். அப்போதே இதற்கான 5இலட்சம் நிதியை விரைவில் விடுவிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-30)

## சனசமூக நிலையத்துக்கு 30மில்லியன் ரூபா செலவில் மூன்று மாடிக் கட்டடம்



(கண்டாவளை)

முல்லைத்தீவு விசுவமடு மத்தி சனசமுக நிலையத்திற்கான மூன்று மாடிகளைக் கொண்ட புதிய கட்டடம் 30 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது சுமார் 15 ஆயிரத்திற்கும மேற்பட்ட நூல்களையும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களையும் தன்னகத்தே கொண்ட விசுவமடு மல்லி சனசமூக நிலையம் நீண்ட நாட்களாக தற்காலிக கட்டடம் ஒன்றிலேயே இயங்கி வருகின்றது.

இந்த நிலையத்திற்கான 3 மாடிகளைக்கொண்ட புதிய கட்டடம் 30 மில்லியன் ரூபா செலவில் **(child first.uk)** என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

## மாணவி நதிக்கு ஊக்குவிப்பு நிதி



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கொடிகாமத்தைச் சேர்ந்த மாணவி நவாஸ்கன் நதி புலமைப்பரிசில் பரீட்சையில் 198புள்ளிகளைப் பெற்று தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தையும், தமிழ் மொழி மூலம் முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டார்.

இந்நிலையில் குறித்த மாணவியை சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் சந்தித்துப் பாராட்டி ஊக்குவிப்புப் பரிசிலையும் வழங்கிக் கௌரவித்துள்ளார்.இது தொடர்பில் நேற்று முன்தினம் சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற அமர்வின் போது தவிசாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது சபையில் கல்விக்கான ஊக்குவிப்பு நிதி இது வரை ஒதுக்கப்பட்டதில்லை. இனிவரும் காலங்களில் சபையின் வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி ஊக்குவிப்புக்கென குறிப்பிட்ட தொகை நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

கல்வியின் வளர்ச்சி ஊடாகவே ஒரு அழகான சமூகத்தை ஏற்படுத்த முடியும். எமது பிரதேச சபை சார்பில் எமது மண்ணிற்கு பெருமை தேடித்தந்த மாணவி நதியைப் பாராட்ட வேண்டியது எமது கடமை.சபையில் நிதி இல்லாத காரணத்தால் சபை உறுப்பினர்கள் 31பேரும் மாணவிக்காக தம்மால் இயன்ற நிதிப் பங்களிப்பை வழங்க வேண்டும்.

அந்த நிதிப்பங்களிப்பின் மூலம் மாணவியின் பெயரில் வங்கிக் கணக்கு ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நாளை வியாழக்கிழமை சாவகச்சேரி பிரதேச சபையில் நடக்கவிருக்கும் சரஸ்வதி பூஜை நிகழ்வில் வங்கிப்புத்தகம் மாணவியிடம் கையளிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-30)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சித்த மருத்துவமும் சித்த மருந்துகளும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

சித்தமருந்துகளைதயாரிக்கும் போது மூலிகைகளுள் கூட தாதுச்சத்துக்களை இணங்கண்டு மருந்துத் தயாரிப்பில் தாதுக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

"கொவ்வை சிவப்புக்
கொடியின் சிறுகீரை
செவ்வலிகை யான்
மிரி செந்தரா அய் ஒவ்வு
சிடம்
மூக்கி புளிக ரண்
மூதோ ரிலைக்கஞ்சற்
தேக்கவுரி மூலமிலை
செம்பு"


என்ற இச் செய்யுளில் கூறப்பட்ட தாவரச் சரக்குகளிலும் செம்பு என்ற உலோகச் சத்து காணப்படுகின்றது.

சித்த மருத்துவத்தில் இரசம் சேர்ந்த மருந்துகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இதற்கு இடப்பட்ட இரசம் என்ற பெயரே இது அறுசுவையும் உடையது எனத் தெரிவிக்கின்றது. இதற்குள்ள "இனிமை" என்ற வேறு பெயர் பொதுவாய் அறுசுவையையும் சிறப்பாய் இனிப்பையும் உடையது.

இதுவென உணர்த்துகின்றது. இதனாலேயே இனிப்பு உடலை வளர்ப்பது போல இஃது உடலை வளர்க்குமென்பதும் பல சுவைகளும் இதில் அடங்கியிருத்தலால் இது வேறு பொருட்களின் உதவியின்றியே உறுப்புகட்கு வன்மையைத் தரும் என்பது விளக்கமாகும். இக்காரணத்தால் இஃது எல்லாத் தாதுப்பொருட்களுக்கும் உயிர்ப் பொருட்களுக்கும் மேம்பாட்டாய் கொள்ளப்படுகின்றது.

இரசம் வெப்பம் அல்லது சீதம் வீரியங்களை மட்டுமுடைய மற்றப் பொருட்களை போலன்றி வெப்ப சீத வீரியங்கள் இரண்டையும் சம அளவிலுடையது. ஆகையால் அவ்வீரியமுடைய பொருளோடு சேருகிறதோ அதன் வீரியத்தையும் செயலையும் அடையும் தன்மை வாய்ந்துள்ளது.

இரசம் சேர்ந்த மருந்துகள் சீதத்தினால் உண்டாகும் நோய்களுக்கும் வெப்பத்தினால் உண்டாகும் நோய்களுக்கும் உள்ளாட்சி மருந்துகளுக்கும் வெளியாட்சி மருந்துகளுக்கும் சிறந்ததாக சித்த மருத்துவத்தில் கருதப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது. ஆனாலும் எந்த மருந்துகளில்



சேருகின்றதோ அதற்கேற்ப நச்சு நீக்க முறைகளை பயன்படுத்தி சுத்திக் கிராமம் செய்யப்படுதலும் அவசியமாகும்.

மருந்துண்ணும் காலம் கூட வாத ரோகிகளுக்கு உணவு செய்வதற்கு முன்பு பித்த ரோகிகளுக்கு பாதி உணவு உண்டவுடனும் கப ரோகிகளுக்குஉணவுஅருந்திய பின்பும் மருந்துகள் கொடுக்கப்பட்டால் செயற்றிறனுடையதாக அமையும்.

குடிநீர் கற்கம், ஆமணக்கம் நெய் என்னும் இவைகள் கோடை காலத்திற்கு உதவும் பேதி மருந்துகளாகும். இவை பனிக் காலங்களிற்கு உதவமாட்டாது.

நேர்வானம், பலவகை கள்ளி இலைப் பால்கள் இரச சம்பந்தமான மருந்துகள், உப்புவகைகள்இவைகள் எக் காலத்திலும் பேதியாகக் கொள்ளக் கூடிய மருந்துகளாகும்.

மருந்துகளை சேகரித்து வைக்கும் பாத்திரங்களாக தெங்கின் குடுக்கை, மூங்கிற்குழை, தந்தம் என்பவற்றால் செய்யப்படும் பாத்திரங்கள் முதல் தரம் என்னும் அவற்றில் வைக்கப்பட்ட தாழ்ந்த மருந்தும் உயர்ந்த மருந்தாகும் என்றும் உடலில் வெப்பு முதலிய பிணிகளை நீக்குகின்ற உயர்ந்த தைலங்களுக்கெல்லாம் ஆவிரை விறகும் சிற்றாமுட்டி விறகுமாம். கண், மூக்கு, செவி, பாதம் ஆகிய இவ்விடங்களில் இருக்கின்ற தைலங்களுக்கும் குடிக்கின்ற தைலங்களுக்கும் மருந்து நெய் இவைகளுக்கும் உசிலம் விறகும் இல ந்தை விறகுமாம் தடவிப் பூசுவதாகிய சூடுள்ள பிடித்தைல வகைகளுக்கெல்லாம் இலுப்பை புளி முதலிய மரங்களின் விறகுமாகும்.

வாதநோய்களுக்கு தயாரிக்கும் மருந்துகளிற்கு புளி, வேம்பு, பூவரசு, இலு ப்பை, அரசமரம் இவற்றின் விறகுகள் சிறந்ததாகும்.


மேலும் விறகு வகைகள் நோய்களுக்கு தக்கவாறும் மருந்துகளில் சேர்க்க படும் உலோக பாடாணங்களுக்குதக்கவாறும் விறகை உபயோகித்து தரமான சித்த மருந்துகள் தயாரிக்கப்படுகின்றது.

உதாரணமாக வாதரோடத்திற்கு நுணா, வன்னி, மாவிலங்கு, வாகை இவை போன்ற மரங்களின் விறகுகளையும் பித்த தோசத்திற்கு நெல்லி, இலந்தை, வேம்பு, விளா ஆகிய மரங்களின் விறகுக ளையும் கப தோஷத்திற்கு உசிலம், வேல், கொன்றை, வேங்கை மரங்களின் விறகுகளையும் இரசம் சேர்ந்த மருந்துகளிற்கு வேம்பு, பனை, தென்னை இவற்றின் விறகுகளையும் இரும்பு சேர்ந்த மருந்துகளிற்கு வேல், வேங்கை இவற்றின் விறகுகளையும் உபயோகித்தல் வேண்டும்.

எனவே சித்த மருத்துவத்தின் தனித்துவத்தை பேணுவதற்கு மூலிகை மருந்துகளால் மட்டுமன்றி தாதுச் சரக்குகள் சேர்ந்த மெழுகு, குழம்பு, பற்பம், செந்தூ ரம் பிரத்தியேகமாக குறிப்பிடப்படுகின்ற தைல வகைகள் முதலியவற்றின் மூலம் நோய்களை சிகிச்சையளித்தல் அவசியமாகும். (முற்றும்)

## கொழும்பு தாமரைக்கோபுர பணிகள் 95 வீதம் நிறைவு

### ஜனவரியில் ஜனாதிபதியால் திறப்பு



(கொழும்பு)

கொழும்பு தாமரைக் கோபுர அமைப்பு பணிகள் 95 வீதம் நிறைவடை ந்து இருப்பதாக ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர். செனவிரத்ன தெரிவித்துள்ளார். சகல நிர்மாணப்பணிகளும் இந்த வருட இறுதிக்குள் நிறைவடையும் என்று அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் எதிர்வரும் ஜனவரி மாதம் தாமரைக் கோபுரத்தை திறந்து வைக்க எதிர்பார்க்கப்படுவதாகவும், ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்தார்.

தாமரைக் கோபுரத்தை அமைக்கும் பணிகள் கடந்த 2008 ஆம் ஆண்டு ஆரம்பமானது.

இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு இதனை முன்னெடுத்தது. இந்த நிர்மாணப் பணிகளுக்காக 10 கோடியே 40 இலட்சம் அமெரி க்க டொலர்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

தாமரைக் கோபுரம் அமைக்கப்பட்டதன் பின்னர் இலங்கையின் உயரமான கட்டடமாக அது திகழும். 350 மீற்றர் உயரமாக அமைக்க முன்னர் திட்டமிட்டிருந்த போதிலும் அது தற்போது 356 மீற்றராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மிக வேகமான மின் தூக்கியும் இதில் அமைக்கப்பட்டுள்ளதுடன் அது ஒரு விநாடிக்கு 7 மீற்றர் வரையில் செல்லக் கூடியது.

அத்துடன், அதிநவீன வசதிகளுடன் கூடிய இரண்டு மாநாட்டு மண்டங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், அந்த இரண்டு மண்டபங்களிலும் ஒரே தடவையில் சுமார் 700 பேர் வரை ஒன்று கூடுவதற்கான வசதிகளும் இதில் அமையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 90 | 100 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 160 | 80 | 100 | 120 | 100 |
| தக்காளி | 100 | 50 | 100 | 100 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 50 | 40 |
| கோவா | 120 | 50 | 120 | 120 | 120 |
| கரட் | 150 | 120 | 200 | 240 | 160 |
| பூசணி | 50 | 35 | 50 | 60 | 40 |
| புடோல் | 150 | 30 | 80 | 120 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 120 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 100 | 60-120 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 160 | 150 | 200 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 120 | 70 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 150 | 120 | 160 | 160 | 180 |
| லீக்ஸ் | 80 | 70 | 100 | 120 | 90 |
| பீற்றூட் | 50 | 50 | 60 | 80 | 50 |
| கறிமிளகாய் | 150 | 80 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 120 | 80 | 200 |
| போஞ்சி | 200 | 120 | 240 | 300 | 250 |
| கத்தரிதம்புள்ள | 80 | 90 | — | 80 | 80 |
| கீரை - 1பிடி | 40 | 30 | 50 | 30 | 50 |
| தேசிக்காய் | 300 | 300 | 350 | 200 | 280 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50-55 | 30-50 | 60 |
| இராசவள்ளி | 140 | 120 | 160 | 200 | 160 |
| வெங்காயப்பூ | 200 | 90 | 240 | 160 | 140 |
| முள்ளங்கி | 40 | 30 | 60 | 100 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 50 |
| ஈரப்பலா | 60 | 120 | 50 | 80 | — |

# வாக்காளர் இடாப்பை உறுதி செய்யும் பணிகள் இம்மாதம் 25 ஆம் திகதி



(கொழும்பு)

2018ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பை உறுதி செய்யும் பணிகள் இம்மாதம் 25ஆம் திகதி மேற்கொள்வதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்திருப்பதாக தேர்தல்கள் மேலதிக ஆணையாளர் எம்.எம்.மொஹம்மட் தெரிவித்துள்ளார்.


எதிர்கால்த்தில் இடம்பெறும் தேர்தல்களுக்கு இந்த வாக்காளர் இடாப்பே செல்லுபடியான ஆவணமாகும் என்றும் தேர்தல்கள் மேலதிக ஆணையாளர் தெரிவித்தார். (இ-7)

# சீனக்குடா எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவுக்கு வழங்க வேண்டாம்

## தொழிற்சங்கங்கள் போர்க்கொடி

**(கொழும்பு)**

**திருகோணமலை - சீனக் குடாவிலுள்ள 16 எண்ணெய்த் தாங்கிகளை இந்தியாவின் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்துடன் இணைந்து அபிவிருத்தி செய்யும் இலங்கை அரசாங்கத்தின் முடிவுக்கு எதிராக பெற்றோலிய பணியாளர் தொழிற் சங்கங்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளன.**



சீனக்குடாவில் பிரித்தானியர் காலத்தில் அமைக்கப்பட்ட, 99 எண்ணெயத் தாங்கிகளில் 15 தாங்கிகள் ஏற்கனவே இந்தியாவின் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின்கட்டுப்பாட்டில்உள்ளன.

ஏனையவற்றில் 16 எண்ணெய் தாங்கிகளை லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்துடன்இணைந்து இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிட்டுள்ளது. இதற்கு இலங்கைஅமைச்சரவை கடந்தவாரம் அங்கீகாரம் அளித்துள்ளது.

இந்த நிலையில் இலங்கை பெற்றோலியபணியாளர்தொழிற்சங்கங்கள் இந்தத் திட்டத்துக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன. 16 எண்ணெய்த் தாங்கிகளையும்பயன்படுத்த முடியும் என்று பரிந்துரை செய்யப்பட்ட போதிலும், அதனை இந்திய நிறுவனத்துக்கு வழங்க அரசாங்கம்முற்படுவதாக, தொழிற்சங்கங்கள் குற்றம்சாட்டியுள்ளன.

கொலன்னாவவிலுள்ள தாங்கிகளுடன் ஒப்பிடுகையில், திருகோணமலை- மட்டக்களப்பு வீதியில் உள்ள 16 எண்ணெயத் தாங்கிகளும் நல்ல நிலையில் இருப்பதாகவும், இதனை, அனுபவம் வாய்ந்த தகுதியான பொறியாளர்கள் ஆய்வு செய்து அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர் என்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

"மூன்று மாதங்களுக்குத் தேவையான எண்ணெயை கையிருப்பில் வைத்திருக்க வேண்டும் என்ற போதிலும், இரண்டு வாரங்களுக்கான எரிபொருளே இப்போது இருப்பில் வைக்கப்படுகிறது.

மூன்று மாத எண்ணெய் இருப்பை வைத்திருப்பதற்கு எண்ணெய்த் தாங்கிகள் இல்லை. மூன்று மாத கையிருப்பை வைத்திருப்பதற்கு இன்னும் 83 தாங்கிகள் தேவைப்படுகின்றன. இரண்டு வார கையிருப்பு போதுமானதல்ல. எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டால், பொது மக்கள் பாரிய பிரச்சினையை எதிர்கொள்வார்கள்" என்று பெற்றோலிய கூட்டுத்தாபன தொழிற்சங்கங்களின் செயலர் ராஜகருண தெரிவித்தார். அதேவேளை, அரசாங்கத்தின் இந்த முடிவுக்கு எதிராகப் போராட்டத்தில் குதிக்கவும் தொழிற்சங்கங்கள் தயாராகி வருகின்றன. (இ-7)

# பாதை திட்டத்தில் கடன் பிரச்சினை

## ஒப்புக்கொள்கிறது சீனா

(பீஜிங்)

தமது அணை மற்றும் பாதை திட்டத்தில் சில கடன் பிரச்சினைகள் இருப்பதாக, சீனாவின் துணை நிதி அமைச்சர் சூ ஜியாயி ஒப்புக் கொண்டுள்ளார் என்று ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

தமது வெளிநாட்டு முதலீடுகளில் கடன் நிலைத்தன்மை அம்சம் தொடர்பாக, சீன அரசாங்கம், நுண் - கண்காணிப்பை வலுப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தோனேசியாவில் அனைத்துலக நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின், கூட்டங்களின் பக்க நிகழ்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"அணை மற்றும் பாதை திட்டத்தில், கடன் நிலைத்தன்மை ஒரு சிக்கலான பிரச்சினை. ஆனால், நாங்கள் அதனை கவனத்தில் கொள்வோம்" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# அரசாங்கத்தை கவிழ்க்க இடமளிக்க மாட்டோம்

## ருவான் விஜேவர்தன உறுதி

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியினர் எவ்வாறான கருத்துக்களை வெளியிட்டாலும் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு சிறிதளவும் இடமளிக்கப்போவதில்லை என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார். கம்பஹா பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலம் முழுவதும் கூட்டு எதிர்க்கட்சியால் முன்வைக்கப்பட்ட சகல சவால்களையும் தற்போதைய அரசாங்கம் தோல்வியடையச் செய்துள்ளதாகவும் பாராளுமன்றத்தில் ஆட்களை மாற்றி அரசாங்கத்தின் அதிகாரத்தை பெற்றுக் கொள்வோம் என கூறுவது வேடிக்கையாக இருப்பதாகவும் ருவான் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருப்பது ஐக்கிய தேசியக் கட்சிக்கு என்பதை கூட்டு எதிர்க்கட்சியினர் மறந்திருக்கிறார்கள் எனவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# யானை பிரச்சினையை தீர்ப்பதற்கு நிர்வாகிகளின் தலையீடு முக்கியம்

(கொழும்பு)

இந்நாட்டில்நிலவும்யானைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நிர்வாகிகளின் தலையீடு முக்கியமான ஒரு விடயம் என வனஜீவராசிகள் பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெரும தெரிவித்துள்ளார்.

குருநாகல், மல்கடுவ பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யானை பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமாயின் அதற்காக அனைத்து அரச நிறுவனங்களும்நிபந்தனை அற்ற விதத்தில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். 2010ஆண்டு முதல்2017 வரையில்பல்வேறு காரணங்களுக்காக 1992 யானைகளும் 582 மனிதர்களும்உயிரிழந்துள்ளதாக பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)



# இன்று ஒரு தகவல்

## கையை நீட்டும் தவறான பழக்கம்

கையை நீட்டுவது என்று நான் இங்கே குறிப்பிடுவது நமது தேசிய பழக்கமான இலஞ்சத்தைப் பற்றி அல்ல. எவரையும் சாமானியத்தில் கைநீட்டி அடித்து விடக்கூடாது என்கிறேன்.

மெத்தப் படித்தவர்கள் கூடச் சமயங்களில் கையை நீட்டி விடுகிறார்கள். இதனால் தங்கள் உயரத்தில் தரந்தாழ்ந்து விடுகிறார்கள்.

தோளுக்கு மிஞ்சி மகனைக் கைநீட்டி அடித்த காரணத்தினால் அவன் ஜென்ம விரோதியாகிப் போகிறான்.

20-25வருடத் தாம்பத்தியத்தின் புனிதம் கணவன் கைநீட்டிய ஒரே காரணத்திற்காக முறிந்தே விட்டது.

வகுப்பில் அன்பான ஆசிரியையே கைநீட்டி அடித்துவிட்டாரே என்கிற காரணத்திற்காக அண்மையில் தற்கொலை செய்து கொண்டு விட்டாள் ஒரு மாணவி'.

தெருவில் முன்பின் தெரியாதவருடன் நடந்த வாக்குவாதத்தில் இவர் கையை நீட்டிவிட்டார் என்பதற்காக இன்று பொலிஸ் கேஸாகி நடையாய் நடக்கிறார் ஒருவர். என்ன பழக்கமிது இந்தக் கைநீட்டும் பழக்கம் !

எந்தக் கைகலப்பிலும் சரி சமரசம் செய்கிறவர்களோ தண்டனை தருகிறவர்களோ யார் முதலில் கை நீட்டியது என்கிற கேள்வியைத் தான் முதலில் கேட்கிறார்கள் கை நீட்டியவர் பக்கம் மிகவும் பலவீனம் ஆகி விடுகிறது.

எந்தப் பிரச்சினை என்றாலும் எப்போது வாக்குவாதம் முற்றினாலும் பரபரக்கும்கைகளுக்குஒன்றைசொல்லி விட வேண்டும் கையே! நீ கட்டுப்பாட்டிற்குள்ளேயே இரு! என் மானத்தை வாங்கி என்னைப் பாழும் குழியில் தள்ளி விடாதே ! என்று அதற்கு உடனே செய்தி அனுப்ப வேண்டும் .

யார் முதலில் சிறப்பாக குத்துவிட்டார்கள், யார் முந்திக்கொண்டார்கள் என்பது குத்துச்சண்டைக்கு வேண்டுமானால் வெற்றியைத் தரும் செயலாக அமையலாம்.வாழ்க்கையின் வெற்றிக்கு இந்தப் பழக்கம் சரிப்பட்டு வராது. கைகள்,கை குலுக்க மட்டும் பயன்படட்டும்!

**லேனா தமிழ்வாணன்**

## திறன் வகுப்பறை திறப்பு விழா

(கரணவாய்)

துன்னாலை வடக்கு மெ.மி.த.க.பாடசாலையின் திறந்தவெளியரங்கு, கணனி அறை, திறன்வகுப்பறை ஆகியவற்றின் திறப்பு விழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் சி.லிங்கனதாஸ் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணசபை உறுப்பினர்களான வி.சிவயோகன், கே.தர்மலிங்கம், எம்.கே.சிவாஜிலிங்கம், ச.சுகிர்தன், சி.அகிலதாஸ், வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், பருத்தித்துறைப் பிரதேச சபை உறுப்பினர்களான இ.நாகேந்திரராஜா, ஞா.தர்ஷன், நா.பாலரமேஸ் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் மா.நவநீதமணி, கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலய அதிபர் சி.சிவகணேசன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-60)

## இலவச சித்திர வித்தியாரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி. சித்திரப்பயிற்சி நிறுவனத்தில் நாளை மறுதினம் 19 ஆம் திகதி விஜயதசமி தினத்தன்று சித்திர வித்தியாரம்பம் நடைபெறும்.

எனவே பயில விரும்பும் மாணவர்கள் அன்றைய தினம் மாலை 4.00 மணிக்கு வருகை தரவும். அன்றைய தினம் இந்தியாவின் பிறிட்ச் அக்கடமியின் (Bridge Academy) ஓவியத் தரப் பரீட்சைக்கும் (Painting Grade Exam) விண்ணப்பிக்க முடியும் என இயக்குநர் அறிவித்துள்ளார். (இ)

### நிரந்தர நியமனம் வழங்கக்கோரி

## வடமாகாண தொண்டர் ஆசிரியர்கள் ஆளுநர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம்



(யாழ்ப்பாணம்)


வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் பல வருடங்களாக தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றி வரும் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி நேற்று வடமாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொண்டர் ஆசிரியர்கள் ஆளுநரைச் சந்தித்து தமது நிரந்தர நியமனம் தொடர்பில் பேசுவதற்கு வந்திருந்தனர்.

ஆளுநர் வெளிநாடு சென்றிருந்த காரணத்தினால் அமைதியான முறையில் நண்பகல் வரை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நியமனங்கள் பல தடவைகள் வழங்கப்பட்ட போதிலும் நாம் புறக்கணிக்கப்பட்டுள்ளோம். அதற்கான காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

எனவே எமக்கு உரிய முறைப்படி நியமனம் வழங்கப்பட வேண்டும். இல்லையென்றால் அடுத்த வாரத்தில் இருந்து தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தொண்டர் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். (இ-9)



## எழுத்தாளர் செந்திநாதன் காலமானார்



எழுத்தாளர் இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தனது 66 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

சிறுகதை, நாவலாசிரியராக, இலக்கியப் படைப்பாளியாகத் திகழ்ந்த இவர், பல்வேறு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

முள்முடி மன்னர்கள், இருள் இரவில் அல்ல, மருத்துவர்களின் மரணம், என்றாவது ஒருநாள், என்னுடையதும் அம்மாவினுடையதும் உள்ளிட்ட இவரது சிறுகதை தொகுப்புகளும், நாவல்களும் நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன. இவரது படைப்புகள் சிங்கள மொழியாக்கம் செய்து நூல்களாகவும் வெளியிடப்பட்டுள்ளன. (இ-7)

## மாடுகள் ஏலம்

(யாழ்ப்பாணம்)

கட்டாக்காலி மாடுகள் நான்கு பிடிபட்டுள்ளன. இதற்கு யாரும் உரிமை கோராததனால் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நுணாவில் மேற்கு கமக்காரர் அமைப்பின் எல்லைக்குள் நுணாவில் மேற்கு பொது நோக்கு மண்டபத்தில் பெரும்பாக உத்தியோகத்தர் முன்னிலையில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என அவ் அமைப்பின் தலைவர் சு.பூபாலசிங்கம் அறிவித்துள்ளார். (இ)



கரவெட்டி கிராமிய சித்த வைத்தியசாலைக்கு மாகாணசபை உறுப்பினர் வே. சிவயோகன், க.தர்மலிங்கம் ஆகியோர் மாகாண சபை நிதி ஒதுக்கீட்டிலிருந்து மடிக்கணனி, மருத்துவ உபகரணங்களை கரவெட்டி பிரதேச சித்த வைத்திய அதிகாரி எஸ். யோகேந்திரனிடம் கையளித்தனர். (படங்கள்:- மகாலிங்கம்)

## மூக்குக் கண்ணாடி வழங்கலும் மருத்துவ பரிசோதனைகளும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 74 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 14 ஆவது சமூக நலத்திட்டத்தின் கீழ் இலவச மூக்குக் கண்ணாடி விநியோகமும் மருத்துவ பரிசோதனைகளும் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை சங்கிலியன் மன்ற மண்டபத்தில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை இடம்பெறும். (இ)

## இராஜினாமா செய்வீர்களா என அடிக்கடி என்னிடம் கேட்காதீர்கள்!

### சுமந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய அரசியல் அமைப்பு நிறைவேறாவிட்டால் பாராளுமன்ற பதவியை இராஜினாமா செய்வேன். இராஜினாமா செய்வீர்களா என அடிக்கடி கேட்காதீர்கள் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

புதிய அரசியல் அமைப்பு நிறைவேறாவிட்டால் தங்களது நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய அரசியல் அமைப்பு உருவாக்கம் ஆமை வேகத்தல் நகர்ந்தாலும் முன்னேறிக்கொண்டு இருக்கிறது.

நிறைவேறும் என்ற நம்பிக்கை இருக்கும் வரையில் தான் அதில் பங்கு கொள்வேன். அது நிறைவேறாது என தீர்மானிக்கும் நேரம் அங்கு இருக்கமாட்டேன்,

நிறைவேறாது விட்டால் அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வேன். பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வேன். ஒவ்வாரு முறையும் இதை கேட்காதீர்கள் எனத் தெரிவித்தார். (இ-9)

## சிங்கப்பூர் கந்தையா கிருஷ்ணரின் பிறந்தநாள் உதவி வழங்கல் இன்று

(இருபாலை)

குப்பிளான் சிங்கப்பூர் கந்தையா கிருஸ்ணரின் 101 ஆவது பிறந்த நாள் உதவி வழங்கல் நிகழ்வு இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணியளவில் குப்பிளான் சிவபூமி ஆச்சிரமத்தில் விழா தலைவர் குப்பிளான் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கம் தி.சசிதரன் தலைமையில் இடம்பெறும் .

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் குப்பிளான் வடக்கு தெற்கைச் சேர்ந்த 100குடும்பங்களுக்கு தலா 2000ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதி வழங்குவதுடன் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டு கழகத்துக்கு அன்பளிப்பு நிதியாக இரண்டு இலட்சம் வழங்கப்படவுள்ளது.

இத்துடன் இவ்வூரை சேர்ந்த தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாண வர்களுக்கும் க.பொ.த (சா.த) 8ஏ, 8ஏபி பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-136)

## இணுவில் இந்து வாணிவிழா

(யாழ்ப்பாணம் )

யாழ். இணுவில் இந்துக் கல்லூயின் வாணி விழா இன்று 17 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறும் .

இதில் யாழ்.மாவட்ட இந்து கலாசரா அமைச்சின் ஓய்வு நிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கத்தின் சிறப்புச் சொற்பொழிவும் ஓய்வு நிலை அதிபர் திருமதி அ.விஜயரகுநாதனின் சிறப்பு விருந்தினர் உரையும் இடம்பெறும். (இ)



சாவகச்சேரி டிறிபேர்க்கல்லூரி ஆங்கிலதின விழா கடந்த சனிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமானது.கல்லூரி அதிபர் எஸ்.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆங்கிலபாட வடமாகாண இணைப்பாளர் வே.ஸ்ரீதரன் கலந்து சிறப்பிக்க உள்ளார். சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்விவலய ஆங்கிலபாட ஆசிரியஆலோசகர் திருமதி சிவஞானவதனி ஸ்ரீதரன், கௌரவ விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவர் திருமதி ரி.சுந்தரகலா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (படங்கள்:-விஜயவாசன்)

## உத்தியோகத்தர்கள் இணைந்து பணியாற்றும் பண்பு அருகிவருகிறது

### வைத்திய நிபுணர் பிறேமகிருஸ்ணா சுட்டிக்காட்டு


(சாவகச்சேரி)

தற்போதைய காலகட்டத்தில் பொது நிறுவனங்களில் உத்தியோகத்தர்கள் இணைந்து வேலை செய்யும் பண்பு அருகி வருவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் உணர்வழியியல் வைத்திய நிபுணர் சு.பிறேமகிருஸ்ணா தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் விளையாட்டுப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தெரிவிக்கையில்,

விளையாட்டு உடல் நலத்தை மேம்படுத்தும். பொது நோக்கிற்காக இணைந்து கடமையாற்ற வேண்டிய தேவை நம் எல்லோருக்கும் உண்டு. பொது நிறுவனங்களில் சேர்ந்து வேலை செய்யும் பண்புகள் தற்போது அருகி வருகின்றன.



விளையாட்டுப் போட்டிகள் போன்ற நிகழ்வுகளைப் பொது நிறுவனங்களில் நடத்தி இணைந்து சேவையாற்றும் பண்பை வளர்க்க வேண்டும். எந்தவொரு வேலையாக இருந்தாலும் கூட்டு முயற்சி இருந்தால் தான் அது வெற்றியளிக்கும்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் விளையாட்டுப் போட்டியில் அனைத்து உத்தியோகத்தர்களும் இணைந்து பங்குபற்றுவதைப் போல் வைத்தியசாலையிலும் இணைந்து கடமையாற்ற வேண்டும். இந்த உணர்வு வைத்தியசாலை வரை வளர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார். (இ-30)

# சீனாவுடன் சுதந்திர வணிக உடன்பாடு அந்நாட்டு அமைச்சருடன் மலிக் சந்திப்பு

சீனாவுடன் சுதந்திர வணிக உடன்பாடு செய்து கொள்வது தொடர்பான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதில் இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பாக தாம் அடுத்த மாதம் சீனாவின் வணிக அமைச்சரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாக ஸ்ரீலங்காவின் அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் அனைத்துலக வணிக அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்துள்ளார்.

சீனாவின் ஷங்காய் நகரில் அடுத்த மாதம் அனைத்துலக மாநாடு ஒன்று நடைபெறவுள்ளதாகவும் அதில் பங்கேற்கச் செல்லும் போது, சீனாவின் வணிக அமைச்சரவைச் சந்திக்கவிருப்பதாகவும் மலிக் சமரவிக்ரம தெரிவித்தார்.

"சுதந்திர வணிக உடன்பாடு தொடர்பாக இலங்கை இப்போது இந்தியா, தாய்லாந்து, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடன் பேச்சுக்களை நடத்தி வருகிறது. பங்களாதேஷுடன் சுதந்திர வணிக உடன்பாடு குறித்த கூட்டு சாத்திய ஆய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)



தென்மராட்சி-நாவற்குழி மகாவித்தியாலயத்தின் கணனி ஆய்வுகூடத் திறப்பு விழா நேற்று செவ்வாய்க்கிழமை பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உத்தியோகபூர்வமாக கணனி ஆய்வுகூடத்தைத் திறந்து வைத்தார். பாடசாலையில் கணனி ஆய்வுகூடம் இன்மையால் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் 13 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீட்டில் இந்தக் கணனி ஆய்வுகூடம் அமைக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் கே.சயந்தனும் கலந்து கொண்டார். (படங்கள்:- சுபேசன்)

## முதலாம் ஆண்டுநீக்காத நினைவஞ்சலி

அன்னை மடியில் 1977 12 06



ஆண்டவன் அடியில் 2017 09 29

அமரர் **சுப்பிரமணியம் கருணாநிதி**

(மாவட்ட முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்ட செயலகம் - முல்லைத்தீவு)

திதி :- பூர்வ பக்க நவமி

ஆண்டு ஒன்று கடந்தாலும் ஆறிடுமோ
மாண்டனையோ மாதுயரம் எந்தனையே வதைக்க
நீண்ட புகழ் வரைந்தனையோ! நிம்மதியாய்
மீண்டொருக்கால் வாராயோ! மேதினியில்நித்தம்
நித்தம் நினைத்துருகி நீல வழி நீர் சொரிய
உள்ளக் கமல மதில் உனை இருத்தி அஞ்சலிகள்
உத்தமனே செய்கின்றோம் நாராணன் திருவடியில்
பேரமைதி பெற்றிடுவாய்

(C-4053)

கரம்பைக் குறிச்சி மேற்கு, வரணி. இங்ஙனம் - குடும்பத்தினர்

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 8 (நீதிமான்)

சனி ஆதிக்கத்தினரின் உடல் தோற்றம், உணவு, நோய் மற்றும் மருத்துவ முறைகள்

உயரமாகத் தோன்றும் இவர்களின் கை, கால், விரல்கள் நீண்டு அழகாக இருக்கும். முகம் நீண்டு ஒற்றை நாடியுடன் காட்சியளிப்பார்கள். தடித்த உடல் வாகு இருந்தாலும் கன்னம் உப்பியிருக்காது. ஒட்டியோ, குழிந்தோ கன்ன மிருக்கும். கண்களும் குழி விழுந்து இருக்கும். ஆனால் அமைதியிருக்காது. கலக்கமும் சந்தேகமும் இருக்கும். மூக்கு பருமனாக இருக்காது. ஒடுங்கி வளைந்து, கூரான மூக்கு இருக்கும். வாய் பெரிதாக இருக்கும். பற்கள் விகாரத் தோற்றத்துடன் இருக்கும். அழகான பற்கள் இருந்தாலும் உறுதியாக இருக்காது. சீக்கிரமே உதிர்ந்துவிடும். உதடுகள் பருத்து உறுதியாக இருக்கும். கழுத்து எலும்பு, நரம்புகள் பலமாக இருக்கும். இவர்கள் குரலில் கவர்ச்சியிருக்காது. தலை முடி குத்துவது போல இருக்கும். இவர்களின் தேகம், கை, கால்களில் மஞ்சள் நிறம் கலந்திருக்கும். சிலர் வெண்புள்ளி, சிலர் சிவந்த கைகளுடன் இருப்பார்கள். இது இவர்களின் அதிகமான சிந்தனா சக்தியையும் தனிமையையும் காட்டும்.

சனி ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் தொழில்கள்

அளவுக்கதிகமான தன்னம்பிக்கை கொண்ட இவர்கள் கலைத்தொழிலால் பெரும்பணம் ஈட்டுவார்கள். அரசியல், வாகன வகைத் தொழில்கள், நிலத்திருந்து எடுக்கப்படும் இரும்பு, தாதுக்கள், எண்ணெய், எரிவாயு, ஆயுத தயாரிப்பு, அச்சு இயந்திரம், நிர்வாக இயல் துறைகள், மனேஜ்மென்ட், நீதிமன்றம், சிறைச்சாலையில் அதிகாரிகள், ரொக்கெட் ஆய்வு, பலபேரைக் கட்டியாளும் நிர்வாகம், விவசாயம், காண்ட்ராக்ட் தொழில்கள், கட்டுமானப் பொருட்கள் தயாரிப்பு மற்றும் விற்பனை போன்ற தொழில்களால் பெரும் இலாபமடைவார்கள். கலைத் தொழில் கஷ்டப்பட்டு பெரும் பணம் ஈட்டித்தரும். இவர்கள் மற்றவர்களுடன் கூட்டு சேருவதைவிட தனித்து நின்று செயலாற்றி வெற்றி பெறுவார்கள். உழைப்பே இவர்களின் உயர்வுக்கு வழிவகுக்கும். பலபேரைக் கட்டியாளும் வாய்ஜாலம் தெரிந் தவர்கள். ஆன்மீகம் சம்பந்த மானவற்றைத் தொழிலாக மாற்றுவார்கள். பொதுநல நிறுவனம் என்ற பெயரில் பணம் திரட்டுவார்கள்.

சனி ஆதிக்கத்தினரின் அதிர்ஷ்ட நாட்கள்

1,10,19,28 ஆகிய திகதிகள் அதிர்ஷ்ட நாட்களாகும். 28 ஆம் திகதி மட்டும் பரிபூரண அதிர்ஷ்டம் தருவதில்லை. சந்திரனும் சனியும் ஆக 2 உம், 8 உம் சேர்ந்திருப்பதால் முழுமையான வெற்றிகள் கிடைப்பதில்லை. எந்தவொரு மாதத்திலும் வரும் 1, 10, 19, 5, 14, 23, 9, 27 ஆகிய திகதிகள் அதிர்ஷ்ட தினங் களாகும். திகதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டி வரும் கூட்டு எண் 1 வரும் நாட்களும் அதிர்ஷ்ட தினங்களாகும். மேற்கண்ட நாட்களில் ஈடுபடும் காரியங்கள் முழு வெற்றியைத் தரும். நீடித்து நிலைக்கக் கூடிய காரியங்களைக் கூட்டு எண் 1 வரும் நாட்களில் செய்து வர வேண்டும். அதேநேரத் தில் திகதி எண்ணும் சாதகமாக அமைய வேண்டும்.




துரதிர்ஷ்ட நாட்கள்

தாங்கள் மேற்கொள்ளும் எந்தவொரு புது முயற்சியையும் 8, 17, 26 ஆகிய நாட்களில் செய்யக் கூடாது. 8 ஆம் எண் சந்திக்கும் நாட்களில் மிகப் பெரிய தோல்விகள் கிடைக்கும். பெரும் நட்டம் ஏற்படும். தவறான நாளில் பெற்ற வெற்றிகள் நிலைக்கா. உடனே பறி போய் விடும். ஆகாத நாட்களில் முக்கியமான காரியங்களில் ஈடுபடாமல் அமைதியாக இருந்தாலே போதும். அதிர்ஷ்ட மடைய, துரதிர்ஷ்ட நாட்களை விலக்கி அதிர்ஷ்ட நாட்களில் முக்கி யமான காரியங்களை மேற் கொண்டாலே போதும். பன் மடங்கு அதிர்ஷ்டம் விருத்தியாகும்.

அதிர்ஷ்டமான நிறங்கள்

மஞ்சள், பொன்னிறம், நீலம், வெளிர்நீலம் போன்ற வர்ணங்கள் சூரிய ஆதிக்கத்தினரின் அதிர்ஷ்ட நிறங்களாகும். அணியும் ஆடைகள், வசிக்கும் இடங்கள், பேனா, பென்சில், விசிடிங் கார்டுகள், வண்டி, வாகனம் போன்ற அனைத்து விதமான உபயோகப் பொருட்களையும் அதிர்ஷ்ட நிறங்களில் உபயோகித்து வந்தால் அதிர்ஷ்டம் விருத்தியாகும். அதிர்ஷ்ட நிற பேனாவால் அதிர்ஷ்ட நிற மையால் கையெழுத்திட்டு வர வேண்டும். விரைவான அதிர்ஷ்டம் கிடைக்கும்.

துரதிர்ஷ்டமான நிறங்கள்

கறுப்பு, கோப்பி கலர், இருண்ட நிறங்கள், சிவப்பு இவர்களுக்கு வீண் அலைச்சலையும் மனக் குழப்பத்தையும் ஏற்படுத்தும். பல நிறங்கள் கலந்த இருண்ட நிறங்கள் இவர்களுக்கு காரியத் தடைகளையும் காரியத் தோல்வியையும் ஏற்படுத்தும்.

அதிர்ஷ்ட இரத்தினங்கள்

நீலக்கல் இவர்களின் அதிர்ஷ்ட இரத்தினமாகும். இந்திர நீலம் சிறந்தது. வலது கை மோதிர விரலில் தோலில் உரசும்படி அணிந்து கொண்டால் நல்ல அதிர்ஷ்டம் விருத்தியாகும். அதிர்ஷ்ட இரத்தினங்களை தோசமில்லாததாகப் பார்த்து அவரவர் அதிர்ஷ்ட நாளன்று வாங்கி அதிர்ஷ்ட நாளில் அணிந்து கொள்ள வேண்டும்.

அதிர்ஷ்ட உலோகம்

தங்கம், இரும்பு, வெள்ளி போன்றவற்றை கலந்து முக்கூட்டு முறையில் செய்து தயாரிப்பது இவர்களின் அதிர்ஷ்ட உலோகமாகும். காப்பு அச்சரங்கள் போன்றவற்றை அதிர்ஷ்ட உலோகங்களில் பதித்து வணங்கி வரலாம். அதிர்ஷ்ட இரத்தினங்களை முக்கூட்டு உலோக மோதிரத்தில் பதித்து அணிந்து கொள்ளலாம். அதிர்ஷ்டம் பன்மடங்கு விருத்தியாகும்.

(தொடரும்....)


# ராஜீவ் கொலை விவகாரம்

## ஏழு தமிழர்களை விடுவிக்கக்கோரி ஆளுநருக்கு தபால் அனுப்பும் போராட்டம்



முருகன் சாந்தன் பேரறிவாளன்
நளினி ரவிச்சந்திரன் ராபர்ட் பயஸ் ஜெயகுமார்

## 2000 பேர் பங்கேற்பு



(காங்கயம்)

ராஜீவ் கொலையாளிகளை விடுதலை செய்ய கோரி நேற்று முன்தினம் ஆளுநருக்கு 2 ஆயிரம் பேர் தபால் அனுப்பினார்கள்.

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக முருகன், சாந்தன், நளினி, பேரறிவாளன் உட்பட 7 பேர் ஆயுள் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர். நீண்ட நாட்களாக சிறையில் தவிக்கும் அவர்களை விடுதலை செய்ய கோரி காங்கயத்தில் புரட்சிகர முன்னணி சார்பில் ஆளுநர் பன்வாரிலாலுக்கு மனு அனுப்பும் போராட்டம் நடைபெற்றது.

காங்கயம், வெள்ள கோவில், நத்தகாடையூர் பகுதியை சேர்ந்த சுமார் 2 ஆயிரம் பேர் இதில் பங்கேற்று ஆளுநருக்கு மனு அனுப்பினார்கள்.

புரட்சிகர இளைஞர் முன்னணி நிர்வாகி திருநாவுக்கரசு தலைமையில் இந்த மனு அனுப்பப்பட்டது. காங்கயம்தபால்நிலையத்தில்நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு தொடங்கிய இப்போராட்டம் மாலை 5 மணி வரை நடைபெற்றது.

நிர்வாகிகள் குழுக்களாக பிரிந்து வந்து மனுக்களை அனுப்பினார்கள். (7)

# பிரதமர் மோடியின் மனதில் தொழிலதிபர்களுக்கே இடம்

## ராகுல்காந்தி சுட்டிக்காட்டு

(டில்லி)

பிரதமர் நரேந்திர மோடியின் மனதில் சாதாரண மக்களுக்கு இடமில்லை. ஆனால் தொழிலதிபர்களுக்கு எப்போதும் இட முண்டு என காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.



மத்தியப்பிரதேசம் மாநிலம், தாதியா என்னுமிடத்தில் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கை நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இதன் போது அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ராகுல் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

நான் விவசாயிகளின் கடன்களைத் தள்ளுபடி செய்யக்கோரி ஒருமுறை மாத்திரம் பிரதமர் அலுவலகத்துக்குச் சென்று, தொழிலதிபர்களின் கடன்களைத் தள்ளுபடி செய்வது போல விவசாயிகளின் கடன்களையும் தள்ளுபடி செய்யலாமென பிரதமரிடம் வலியுறுத்தினேன். ஆனால் அவர் ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

மேலும் பெண் குழந்தைகளைக் காப்போமென பெயரளவில் கூறும் பிரதமர், உத்தரப்பிரதேசத்தில் பெண் ஒருவர் மீது பாலியல் வன்கொடுமை புரிந்த சட்டமன்ற உறுப்பினரைக் கட்சியில் இருந்து இன்னும் நீக்கவில்லை.

இவ்வாறு ஒடுக்கப்பட்டோருக்கும் பெண்களுக்கும் பிரதமர் மனதில் எப்போதும் இடமில்லை. ஆனால் தொழிலதிபர்களுக்கு எந்நேரமும் அவரது மனதில் இடமுண்டு.

இதனால்தான் தொழிலதிபர்களை சகோதரர்களென அழைக்கும் பிரதமர், உழவர்களையும் தொழிலாளர்களையும் அவ்வாறு அழைப்பதில்லை என ராகுல்காந்தி தெரிவித்துள்ளார். (7)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி ட்ரம்ப்

அமெரிக்காவில் மைக்கல் சூறாவளியினால் பாதிக்கப்பட்டு குடியேற்றங்களை இழந்த மக்களுக்கு அந்நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிவாரணப் பொருட்களைக் கையளிக்கும் செயற்பாட்டில் பங்குகொண்டுள்ளார்.

காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ள புயலினால் பாதிக்கப்பட்ட 18,500 இற்கும் மேற்பட்ட அகதிகளை நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தித்துள்ளார்.

குறித்த சந்திப்பின் போது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் தவிர அவர்களுக்கு வழங்க வேண்டிய முக்கிய வசதி, உறைவிடமென ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் புதன்கிழமை அமெரிக்காவின் பல பகுதியிலுள்ள மக்களைத் தாக்கிய சூறாவளியே மைக்கல் சூறாவளியாகும்.

மேலும், குறித்த சந்திப்பைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட இன்னுமொரு மக்கள் தொகுதி தங்கியிருக்கும் ஜோர்ஜியா நகருக்கும் விஜயம்செய்த ட்ரம்ப்நேற்று மாலை வெள்ளை மாளிகை திரும்பியமை குறிப்பிடத்தக்கது. (7)



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் மற்றும் அவருடைய மனைவி மெலனியாவும், புளோரிடாவிலுள்ள லைன் ஹவன் நகரில் தற்

# பேருந்து கவிழ்ந்து விபத்து 6 பேர் பலி, 20 பேர் படுகாயம்

இந்தியாவின் மேற்கு வங்க ஹூக்ளி பகுதியில், பயணித்த பேருந்து ஒன்று கட்டுப்பாட்டினை இழந்து, கால்வாயில் கவிழ்ந்து விபத்திற்குள்ளானது.

கொல்கத்தாவிற்கு பயணித்த இந்த பேருந்து, நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் டகா ட்டிய கால்வாய்க்குள் கவிழ் ந்து வீழ்ந்துள்ளது.

விபத்தினையடுத்து விரைந்த மீட்புப் படையினர் மீட்பு பணிகளில் ஈடுபட்டனர். இந்த விபத்தினால் இது வரையில் 6 பேர் உயிரிழந்துள்ளதுடன், 20 பேர் காயமடைந்ததாகவும் அவர்கள் விரைவாக அருகில் இருந்த ஹரிபால கிராமப்புற வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)



## கச்சா எண்ணெய் விலைகுறைப்பு


# இந்தியாவின் வேண்டுகோளை நிராகரித்த சவுதி அரேபியா

(டில்லி)

கச்சாஎண்ணெய்விலையை குறைத்தல் மற்றும் ரூபாயை பரிவர்த்தனை செய்தல் உள்ளிட்ட பிரதமர் நரேந்திர மோடியின் வேண்டுகோளை சவுதி அரேபியா நிராகரித்துள்ளது. இந்தியாவின் டில்லியில், சர்வதேச எண்ணெய் உற்பத்தி செய்யும்நிறுவன அதிகாரிகள் மற்றும் இந்திய அதிகாரிகள் பங்கேற்ற கூட்டமொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதன்போது அதில் கலந்து கொண்ட பிரதமர் மோடி, கச்சா எண்ணெய் விலையை குறைக்கும் விடயத்தில் ஏற்றுமதி நாடுகள் தீர்வை ஏற்படுத்த வேண்டும்.

கச்சா எண்ணெய் விலை உயர்வால் உலக அளவில் பொருளாதாரம்பெரும்பாதிப்பை எதிர் நோக்கியுள்ளது" என குறிப்பிட்டிருந்தார்.





இந்நிலையின் மோடியின் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில், அக்கூட்டத்தில் கலந்துகொண்ட சவுதி அரேபியாவின் எண்ணெய் துறை அமைச்சர் காலித்அல் ஃபாலி தெரிவித்ததாவது, கச்சா எண்ணெய் விநியோகம் மாத்திரமே எங்களின் கட்டுப்பாட்டில் உள்ளது.

ஆகையால்அதற்கு தேவையான உதவிகளை இந்தியாவுக்கு செய்ய தயாராக உள்ளோம். ஆனால் விலை குறைப்பு என்பது எங்கள் கட்டுப்பாட்டில் இல்லை. இவ் விடயத்தில் இந்தியாவுக்கு எங்களால் உதவ முடியாது எனக் குறிப்பிட்டிருந்தார். (7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

71



கண்டி இராச்சியம்

"இறுதியாக, முதலாவது சங்கிலி மன்னனின் ஆட்சிக்குப் பின் ஒரு வலுவான, திறமையுள்ள, நாட்டுப்பற்றுள்ள அரசன் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆளவில்லை.யாழ்ப்பாண அரசர் தம் சொந்த மக்களைத் திரட்டி, நல்ல கட்டுக்கோப்பான, திறமை வாய்ந்த, நாட்டுப்பற்றுள்ள ஓர் உள்ளூர் இராணுவத்தைக் கட்டியெழுப்பத் தவறியமை நிச்சயமாக அவர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தை இழந்தமைக்கு மிக முக்கியமான காரணங்களில் ஒன்றாக அமைந்திருக்கின்றது"

## போர்த்துக்கீசர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களின் அழிவும் (கி.பி. 1505-கி.பி. 1658)

யாழ்ப்பாண இராச்சியத்தையும் கைப்பற்றிவிட்டால் அவ்வாறான நெருக்கடியிலிருந்து விடுபட்டு, இந்தியாவிலும் இலங்கையிலும் தாம் சுதந்திரமாக நடமாடி அந்நாட்டு வருமானங்களைப் பெற்று, வர்த்தகத்தினூடாகவும் அதிக வருமானத்தை ஈட்டமுடியும் என்ற பேராசை ஒரு முக்கிய காரணமாக இருந்திருக்கின்றது.

போர்த்துக்கீசருக்கு, இந்து சமுத்திரக் கடற்பிராந்தியத்தில் குறிப்பாக இந்தியாவின் மேற்கு, கிழக்குக் கரையோரத் துறை முகங்களோடு தொடர்புகளை ஏற்படுத்துவது, ஒரு பாரிய சவாலாக இருந்தது. யாழ்ப்பாண அரசு கைப்பற்றப்பட்டால், அவ்வாறான இராணுவ, வர்த்தகப் போக்கு வரத்துத் தொடர்புகளுக்கு மிக இலகுவானதாகவும், இந்தியா, இலங்கை, மலாக்கா, தென் கிழக் காசியா போன்ற நாடுகளைத் தொடர்ந்து அடிமைப்படுத்துவதற்கு மிகவும் வாய்ப்பாகவும் அமையும் என்பதைப் போர்த்துக்கீசர் கருதியதன் விளைவும், யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்குரிய முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

மேலும், கோட்டை இராச்சியம், 1543 இல் போர்த்துக்கீச மேலாண்மையை ஏற்றிருந்தது. அத்தோடு கோட்டை மன்னன் தர்ம பாலனின் மரண சாசனப்படி 1597 இல் கோட்டை போர்த்துக்கீச முடிக்குரியதாகியது. யாழ்ப்பாண இராச்சியத்தையும் கைப்பற்றி விட்டால், இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் அனைத்தும் தம்வசம் என்ற எதிர்பார்ப்பும் அவர்களுக்கு இருந்தது.

அவ்வாறான ஒரு நிலையில் தமக்கு எதிரான கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு மிக இலகுவாக அமையும் என்றும், கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்டால் இலங்கை முழுவதும் தமது ஆளுகைக்கு உட்பட்ட நாடாக வரும் என்ற ஒரு பாரிய திட்டமும், யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றக் காரணமாக அமைந்தது.

இவ்வாறான ஒரு நிலையில் ஒரு நிலையில், தமது வர்த்தகத்துடன் போட்டியிடும் இலங்கை, தென்னிந்திய முஸ்லிம் வர்த்தகர்களின் மேலாதிக்கத்தைத் தடுத்து நிறுத்தி, தாமே வர்த்தகத்தின் ஏகபோக உரிமையைப் பெற்று அதிக இலாபம் பெறலாம் என்ற பேராசை போர்த்துக்கீசர் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றக் காரணமாகவும் இருந்தது.

செல்வம் சேர்ப்பதும், கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதுமே போர்த்துக்கீசரின் ஆசிய நாடுகளுக்கான பயணத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. அரசியல், வர்த்தக நோக்கம் நிறைவேறும் பட்சத்தில் தமது மதத்தைப் பரப்புவதும் அவர்களுக்கு முக்கியமாக இருந்தது. மன்னாரில் ஏற்கனவே கிறிஸ்தவ மதமாற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு, அங்கு வெற்றிபெற்ற போர்த்துக்கீசருக்கு, செறிவாக மக்கள் வாழும் யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் தமது மதத்தைப் பரப்ப வேண்டும் என்ற அதிதீவிர நோக்கமும், யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றக் காரணமாக அமைந்தது.

இவ்வாறான ஒரு பின்னணியில், எவ்வாறான காரணிகள் யாழ்ப்பாண இராச்சிய மன்னர் தமது இராச்சியத்தைப் போர்த்துக்கீசர் வசம் இழக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதனையும் நோக்குவது அவசியமாகும்.

முதலாவதாக, 1560 இல் யாழ்ப்பாண இராச்சிய மன்னர், போர்த்துக்கீசருக்குத் திறைசெலுத்த ஒப்புக் கொண்டமை, அவர்களின் பொருளாதாரத்தைத் தளர வைத்தது. அத்தோடு மன்னார் போர்த்துக்கீசர் வசமாகிய நிகழ்வினால், அதுவரையும் முத்து வர்த்தகத்தின் மூலம் பெற்ற பெருந்தொகை வருமானத்தை யாழ்ப்பாண அரசு இழந்தது.

இதுவே யாழ்ப்பாண அரசு பொருளாதார ரீதியாக ஆட்டம் கண்டமைக்குரிய அடிப்படைக் காரணமாகும். அத்தோடு மன்னாரில் போர்த்துக்கீசர் தமது படைகளை நிறுத்தி, அடிப்படைகள் மூலம் கரையோரப் பிரதேசங்களை வேவு பார்த்து, யாழ்ப்பாண அரசனுக்கு எதுவித இராணுவ, பிற உதவிகள் தென்னிந்தியாவில் வராத வண்ணம் உதவிகளைப் பெறுவதில் யாழ்ப்பாண அரசர்கள் பெருஞ் சிரமப்பட்டார்கள்.

மேலும், கோட்டையும், மன்னாரும் போர்த்துக்கீசர் வசம் இருந்தபடியால் தரைமார்க்கமாகவும், கடல் மார்க்கமாகவும் போர்த்துக்கீசப் படைகள் இலகுவாக வந்து இருமுனைத் தாக்குதல் களை யாழ்ப்பாண அரசிற்கு எதிராகத் தொடுக்கக் கூடியதாக இருந்தது.

கோட்டை இராச்சியம் கடற்கரையோரமாக இருந்ததன் விளைவே அவ் இராச்சியத்தைப் போர்த்துக்கீசர் இலகுவில் கைப்பற்ற வாய்ப்பளித்தது. யாழ்ப்பாண இராச்சியமும், சாதகமான ஒரு புவியியல் சூழ் நிலையைப் போர்த்துக்கீசருக்கு வழங்கியது.

கண்டி இராச்சியம் இறுதிவரை போர்த்துக்கீசரால் கைப்பற்றப்படாமல் இருந்தமைக்கு, அவ் இராச்சியத்தின் புவியியற் பின்னணியும் ஒரு முக்கிய காரணமாக அமைந்தது. டச்சுக்காரர்களின் ஆசியா நோக்கிய பயணங்களும் அவர்கள் 1610இல் இந்தியாவிலுள்ள புலிக்கட்டில் (Pulicat) தமது நடவடிக்கைகளில் ஈடுபட்டமையும், தெற்கிலுள்ள சிங்கள இராச்சியங்கள் போர்த்துக்கீசருக்கு எதிராக டச்சுக்காரரின் உதவியை நாடுவதாக போர்த்துக்கீசர் அறிந்தமையும், அவர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றி அதனூடாக முழு இலங்கையையும் வசமாக்கத் தம்மைத் தயார்படுத்தியதாகவும் அறிய முடிகிறது.

அத்தோடு போர்த்துக்கீசரின் இராணுவபலம், குறிப்பாக துப்பாக்கி, வெடிபொருள், கனகரக ஆயுதங்கள் கொண்ட தரைப்படை, கடற்படைக்கு முன் யாழ்ப்பாண அரச படைகள் கத்தி, வாள், ஈட்டி, அம்பு போன்றவற்றை வைத்துக் கொண்டு அவர்களை எதிர்க்க முடியாமற் போய் விட்டது.

போர்த்துக்கீசப் படைகள் எண்ணிக்கையில் குறைவாக இருந்த போதிலும், கோட்டையிலிருந்து சிங்களக் கூலிப்படைகளை (Lascarians) ஆயிரக்கணக்கில் போர்த்துக்கீசத் தளபதி பெற்று யாழ்ப்பாண இராச்சியத்தைத் தாக்கி அழிக்கப் பயன்படுத்தினான்.

அத்தோடு மட்டுமல்லாமல், மன்னாரில் மதம்மாறிய தமிழ்க் கத்தோலிக்கர்களும் யாழ்ப்பாணத்தில் மதம்மாறிய தமிழ்க் கத்தோலிக்கர்களும், குறிப்பாக மேல்மட்ட வர்க்கத்திலிருந்த முதலிமார்களும் போர்த்துக்கீச அந்நிய சக்திகளுக்கு விலைபோய், யாழ்ப்பாண இராச்சிய வீழ்ச்சிக்கும், அழிவுக்கும் காரணமாக இருந்திருக்கின்றார்கள். இறுதியாக, முதலாவது சங்கிலி மன்னனின் ஆட்சிக்குப் பின் ஒரு வலுவான, திறமையுள்ள, நாட்டுப்பற்றுள்ள அரசன் யாழ்ப்பாண இராச்சியத்தை ஆளவில்லை.

அரச கட்டிலுக்காகவும் தமக்குள்ளே போட்டி போடுகின்ற நிலைமையும், அரசகட்டில் ஏறுவதற்காகப் போர்த்துக்கீசரிடம் போய் உதவி கேட்கின்ற நிலைமையுமே காணப்பட்டது. இவ்வாறான பலவீனங்களும் சுயநலப் போக்கும், யாழ்ப்பாண அரசர் போர்த்துக்கீசரிடம் தோற்றுப் போனதற்கு காரணங்களாக அமைந்தன.

யாழ்ப்பாண அரசர், போர்த்துக்கீசருடான சண்டைகளுக்கு, தஞ்சாவூர் நாயக்கரின் படை உதவிகளையும், கள்ளிக்கோட்டை சமோரினின் படை உதவிகளையும் அடிக்கடி பெற்றுப் போர் புரிந்தமை பற்றி மேலே கூறப்பட்டது.

ஆனால் யாழ்ப்பாண அரசர் தம் சொந்த மக்களைத் திரட்டி, நல்ல கட்டுக்கோப்பான, திறமைவாய்ந்த, நாட்டுப்பற்றுள்ள ஓர் உள்ளூர் இராணுவத்தைக் கட்டியெழுப்பத் தவறியமை நிச்சயமாக அவர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தை இழந்தமைக்கு மிக முக்கியமான காரணங்களில் ஒன்றாக அமைந்திருக்கின்றது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2018

# பாதிரியாரும் பண்ணையும்



### கதை

ஒருநாள் பாதிரியார் ஒருவர் காரில் சென்று கொண்டிருந்தபோது மிகவும் அழகான தோட்டம் ஒன்றைப் பார்த்தார்.

அங்கே செழித்து வளர்ந்துள்ள பயிர்களைப் பார்த்து, அதற்குரியவரைப் பாராட்டுவதற்காகத் தனது காரை நிறுத்தினார். தனது டிராக்டரை ஓட்டிக்கொண்டிருந்த விவசாயி அந்தப் பாதிரியாரை நோக்கி ஓட்டி வந்தான்.

அவன் வந்த உடனே பாதியார் 'கடவுள் உனக்கு ஓர் அழகான தோட்டத்தை அருளியிருக்கிறார். நீ அதற்காக அவருக்கு நன்றிக்கடன்பட்டிருக்க வேண்டும்' என்று சொன்னார்.

விவசாயியோ 'ஆமாம் ஐயா. கடவுள் எனக்கு ஓர் அழகான் தோட்டத்தை அருளி இருக்கிறார். நான் அதற்காக அவருக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறேன்.

ஆனால் இந்தத் தோட்டம் முழுவதையும் கடவுள் தனக்காக வைத்துக் கொண்டிருந்தபோது நீங்கள் பார்த்திருக்க வேண்டும்' என்று பதில் சொன்னார்.

அதாவது தரிசாக இருந்த நிலத்தை தோட்டக்காரன் முயற்சியால் அழகான தோட்டமாக மாற்றியிருந்தான்.

### கதை கூறும் கதை

இந்தக் கதை உங்களுக்கு என்ன கதை கூறுகின்றது. கடவுள் ஒருபோதும் யாருக்கும் எதையும் கொடுப்பதில்லை. கடவுளிடமிருந்து கடவுள் பக்தி மூலம் நம்பிக்கையையும் கட்டுப்பாட்டையும் பெற்றுக்கொள்ளலாமே தவிர வேறு ஒன்றும் எமக்குக் கிடைக்காது. எந்த ஒன்றையும் சாதிப்பதற்கு நம்பிக்கையும் கட்டுப்பாடும் மிக அவசியம். அதனால் தான் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் நம்பிக்கையோடு எதையாவது சாதிக்கிறார்கள். ஆனால் நாம் அவருக்குக் கடவுள் எல்லாவற்றையும் கொடுப்பதாக நினைக்கின்றோம்.

கடவுள் எம்மிடம் எதையாவது கேட்பதோ அல்லது நாம் கேட்ட எல்லாவற்றையும் எமக்குத் தருவதோ இல்லை.. நாம் தான் எங்கள் பழக்கப்படி நான் உனக்கு இன்னது செய்வேன் நீ எனக்கு இதை செய்யவேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறோம். பேரம் பேசுகிறோம்.

நான் சில மாணவர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்களுக்கு பரீட்சை நெருங்கும் காலத்தில் பக்தி அதிகரிக்கும். விரதம் இருப்பார்கள். கோவிலில் கற்பூரம் கொளுத்தித் தேங்காய் உடைப்பார்கள். தவறில்லை. அதே வேகமும் அர்ப்பணிப்பும் கற்றலிலும் இருக்க வேண்டும். எமக்குப் பசித்தால் நாம் தான் சாப்பிட வேண்டும். எமக்குத் தேவையானதை நாம் தான் செய்ய வேண்டும். அப்போதுதான் அதற்குரிய விளைவினை எதிர்பார்க்க முடியும்.

பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளிடம் கடவுள் பக்தியை ஏற்படுத்துங்கள். கோவிலுக்குச் செல்வதும் விழாக்களில் கலந்து கொள்வதும் செலவுகளுடன் கூடிய பொழுது போக்காக மாறிச் செல்கிறது. மன அமைதியையும் மன ஒருமைப்பாட்டை வளர்க்கவும் பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாக்கவும் கோயிலுக்குச் செல்லும் வழக்கத்தைப் பிள்ளைகளுக்குப் பழக்குங்கள். உங்களின் செயற்பாடுகள் தவறாக அமைந்தால் அதுவே பிள்ளைகளிடமும் சென்று சேரும். என்னை ஒரு நல்ல மாணவனாக மாற்றத் துணை நிற்கும்படி கடவுளை வேண்டும் ஒரு பிள்ளை தானாகவே மனதளவில் தான் ஒரு நல்ல மாணவன் என்பதில் நம்பிக்கை கொள்ள ஆரம்பிப்பான். அதற்காகவே உழைப்பான். வெற்றி பெறுவான்.

## எனது அம்மா



- எனது அம்மாவின் பெயர் சோபா.
- எனது அம்மா நல்ல அன்புள்ளம் கொண்டவர்.
- எமக்கு நல்ல சுவையான உணவுகள் சமைத்துத் தருவார்.
- எனது தேவைகள் அறிந்து நிறைவேற்றுவார்.
- அம்மா எனக்கு பாடம் சொல்லித் தருவார்.

**நெ.சஷ்மிகா, தரம் - 1 பி, யா/கொக்குவில் இ.ஆ.பா, சிறுவர் வட்ட மாணவி, கொக்குவில் பொது நூலகம்.**

## பெரியோரின் பொன்மொழிகள்



- தன் தவறை உணர்ந்து உண்மையாக வருந்துபவன் குற்றமிழைக்காதவனுக்கு ஒப்பாவான். **நபிகள் நாயகம்**
- சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் பூமியைச் சொந்தமாக்கிக் கொள்வார்கள். **இயேசுநாதர்**
- தவறு செய்வது மனிதகுணம். மன்னிப்பது தேவகுணம். **பாப்பாண்டவர்**
- சாத்தியம் என்று நம்புபவர்களுக்கு எதுவுமே சாத்தியமாகும். **வேர்ஜின்**
- ஒருமுறை அறிவாளிகளுடன் பேசுவது ஒரு மாதம் புத்தகங்களைப் படிப்பதை விட அதிக நன்மை தரும். **ஏஞ்சலோ**
- செல்வந்தனாக இறப்பதை விட சான்றோனாக வாழ்வதே சிறப்பு. **ஜோன்சன்**
- எவ்வித தியாகமும் இல்லாது எவ்வித நன்மையும் பெற முடியாது. **ஹேறல்ப்ஸ்**

**பி.மதுசாயினி, யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.**

## தெரிந்து கொள்ளுங்கள்



**● முட்டாள்கள் தினம்**

உலகம் முழுவதும் வருடந்தோறும் ஏப்ரல் முதலாம் திகதி கொண்டாடப்பட்டு வரும் முட்டாள் தினத்தின் சின்னம் கழுதை. பிரான்சில் அத்தினத்தை மீன் நாள் எனவும் ஸ்கொட்லாந்தில் குயில்நாள் என்றும் ஜப்பானில் பொம்மை நாள் எனவும் அழைக்கின்றனர்.

**● நட்சத்திரங்கள்**

நட்சத்திரங்கள் எல்லாம் குளிர்ச்சியான தன்மை கொண்டவை அல்ல. துருவ நட்சத்திரம் எனும் நட்சத்திரமானது சூரியனை விட அதிக வெப்பநிலை கொண்டவையாகும்.

**● யானையை தின்னும் எறும்பு**

ஆபிரிக்கர் காடுகளில் யானைகளை கொன்று தின்னும் ஒருவகை எறும்புகள் வாழ்கின்றன. இவை யானை வேட்டைக்குப் பெருங்கூட்டமாகச் செல்லும். ஒரு பெரிய யானையை கொன்று 3 நாட்களுக்குக் கடித்துத்தின்று எலும்புக் கூடாக்கிவிடும் சக்தி கொண்டவை இந்த எறும்புகள்.

**● ஒட்டகச்சிவிங்கி**

ஒட்டகச் சிவிங்கிகள் காடுகளில் வளர்ந்து இருக்கும் வேலமரத்து இலைகளை தின்னும். இது வேலமரங்களுக்கு பிடிக்காது. ஒட்டகச் சிவிங்கி வேலமரத்து இலைகளை சாப்பிட்டு கொண்டு இருக்கும் போது அந்தமரம் எத்தலின் என்ற வாயுவை வெளியிட்டு அருகில் இருக்கும் வேல மரங்களை எச்சரிக்கும். உடனே அவை அதை புரிந்து கொண்டு தமது இலைகளில் டானின் என்ற பொருளை வெளிவிடும். இது மிருகங்களுக்கு கெடுதி விளைவிக்கும் பொருளாகும். எனவே ஒட்டகச்சிவிங்கி அவற்றை முகர்ந்து பார்த்துவிட்டு வேல மரத்து இலைகளை சாப்பிடாமல் சென்றுவிடும்.

**● குடை**

பழங்கால எகிப்திலும் கிறீஸிலும் குடையை மக்கள் வெயிலுக்குத்தான் பயன்படுத்தி வந்தார்கள். மழைக்குப் பயன்படுத்துவதில்லை. பழங்கால இந்தியாவிலும் அண்டை நாடுகளிலும் ஆண்ட மன்னர்களுக்கு கொற்றக் குடையாக பிடிக்கப்பட்டது வெள்ளை நிறக் குடையாகும்.

**பி.கானுஜன், யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.**

**தொகுப்பு:- கொக்குவில் பொது நூலகம்**

## நிலக்கரி சுரங்கத்தில் வெடிப்பு 5 பேர் உயிரிழப்பு



(பீஜிங்)

சீனாவில் நிலக்கரிச் சுரங்கமொன்றில் ஏற்பட்ட பாரிய வெடிப்பில் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

தென்மேற்கு சீனாவின் கிஜியாங் மாகாணத்திலுள்ள ஸிஹறாவோ நகரத்தில் லியான்போ என்ற நிலக்கரிச் சுரங்கமொன்றில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நண்பகல் வெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளதோடு நான்கு பேர் படுகாயமடைந்துள்ளதாக சோங்கிங் சக்தி முதலீட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

லியான்போ சுரங்கமானது, வெடிப்புக்கு உட்படும் முன்னரே அச்சுரங்கவாயிலை பணியாளர்கள் மூடியுள்ளனர்.

அடைக்கப்பட்ட நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட ஒருவிதமான வாயு காரணமாகவே குறித்த வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (7)

# அமெரிக்க கூட்டுப்படைகள் மீது சர்வதேச விசாரணை நடத்தவும்




(டமாஸ்கஸ்)

அமெரிக்க கூட்டுப்படைகள் மீது சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என சிரியா வலியுறுத்தி உள்ளது.

சிரியாவில் அரசு படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையேயான உள்நாட்டு போர் 7 ஆண்டுகளாக நீடித்து வருகிறது. மற்றொருபுறம் அந்நாடு ஐ.எஸ். பயங்கரவாதிகளின் சொர்க்காபுரியாகவும் திகழ்கிறது. அங்கு ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் வான்தாக்குதல்களை நடத்திவருகிறது.

ஆனால் அமெரிக்க கூட்டுப்படைகள் கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக செயற்படுவதாகவும், கூட்டுப்படைகளின் தாக்குதல்களில் அப்பாவி மக்களே அதிகளவில் கொல்லப்படுவதாகவும் சிரியா தொடர்ந்து குற்றம் சாட்டுகிறது.

எனவே அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படைகள் சிரியா மண்ணில் இருந்து முற்றிலுமாக வெளியேற வேண்டுமென சிரிய அரசு நீண்டகாலமாக வலியுறுத்தி வருகிறது.

இந்த நிலையில், டீர் அல் சவுர் மாகாணத்தில் உள்ள ஐ.எஸ். பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஹாஜின் நகரில் கடந்த சில தினங்களுக்கு முன்பு அமெரிக்க கூட்டுப்படைகள் இரசாயன தாக்குதலை நடத்தியதாக தெரிகிறது. இதில் பலர் கொல்லப்பட்டதாகவும், படுகாயம் அடைந்ததாகவும் கூறப்படுகிறது. இதற்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள சிரிய அரசு, தொடர்ந்து இது போன்று குற்றங்களில் ஈடுபட்டு வரும் அமெரிக்க கூட்டுப்படைகள் மீது சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பாக அந்நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சகம் வெளியிட்டு உள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது.

சர்வதேச அளவில் தடை செய்யப்பட்ட ஆயுதங்களை சிரிய மக்கள் மீது பயன்படுத்தி, சர்வதேச சட்டம் மற்றும் மனித உரிமைகளை அமெரிக்க கூட்டுப் படைகள் வெளிப்படையாக மீறி வருகிறது.

இதுபற்றி சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். மேலும் சட்டத்துக்கு புறம்பாகவும், ஆக்கிரமிப்பு முறையிலும் சிரியாவில் அமெரிக்க படைகள் முகாமிட்டு இருப்பதை முடிவுக்குகொண்டு வர வேண்டும். (7)

## சவுதி ஊடகவியலாளர் தூதரகத்தினுள்ளேயே கொலை செய்யப்பட்டுள்ளதாக துருக்கி அறிவிப்பு

(றியாத்)

சவுதி ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி இஸ்தான்புல்லிலுள்ள தூதரகத்தினுள்ளேயே கொலை செய்யப்பட்டுள்ளதாக நம்புவதாக துருக்கி குறிப்பிட்டுள்ளது.

அதற்கான தடயங்கள் காணப்படுவதாகவும் துருக்கி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

துருக்கியின் இஸ்தான்புல் நகரிலுள்ள சவுதி தூதரகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை துருக்கி மற்றும் சவுதி அதிகாரிகள் இணைந்து தேடுதல் நடத்தினர்.

தேடுதலின் பிரகாரம், ஜமால் கஷோக்கியை தூதரகத்திற்குள்ளேயே சவுதி முகவர்கள் கொலைசெய்து அவரது சடலத்தை அங்கிருந்து அகற்றியுள்ளனர் என துருக்கி அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், கஷோக்கியை கொலை செய்தவர்கள் முரட்டுத்தனமான கொலையாளிகள் என கடுமையாக சாடியுள்ளார். குறித்த கொலைக்கு பொறுப்புக்கூற வேண்டுமென்றும் தெரிவித்தார்.

சவுதியை தண்டிக்க நேரிடுமென ஏற்கனவே அவர் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந் நிலையில், கஷோக்கியின் கொலை தவறாக நடந்து விட்டதென குறிப்பிடுவதற்கு சவுதி அரேபியா தயாராகி வருகின்றதென சீ.என்.என். செய்தி வெளியிட்டுள்ளது. எனினும், இதற்கு சவுதி எவ்வித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

கடந்த 2ஆம் திகதி இஸ்தான்புல்லிலுள்ள சவுதி தூதரகத்திற்குச் சென்ற ஜமால் கஷோக்கி அதன் பின்னர் காணாமல் போயிருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக உலக நாடுகள் சவுதி மீது கடும் கண்டனத்தை வெளியிட்டு வந்த நிலையில், அவர் கொலைசெய்யப்பட்டதாக துருக்கி உறுதிப்படுத்தியுள்ளது. (7)

# காஸாவில் இஸ்ரேல் கடற்படை துப்பாக்கிச்சூடு

## 24 பாலஸ்தீனர்கள் உயிரிழப்பு



(காஸா)

காஸா பகுதியில் இஸ்ரேல் கடற்படை நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 24 பாலஸ்தீனர்கள் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேலுக்கும், பாலஸ்தீனுக்கும் இடையே நெடுங்காலமாக மோதல் போக்கு இருந்து வருகிறது. பாலஸ்தீனைப் பொறுத்தவரையில், அங்கு ஹமாஸ் இயக்கம் ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

இஸ்ரேல் இராணுவத்தினர் மீது தொடர் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிற ஹமாஸ் இயக்கம், பாலஸ்தீன மக்களிடையே செல்வாக்கு பெற்றுள்ளது. பாலஸ்தீனர்களுக்கு இஸ்ரேலை மீட்டுக்கொடுத்து, மேற்குக் கரை, காஸா ஆகிய பகுதிகளைக் கொண்ட இஸ்லாமிய குடியரசாக மாற்றுவதே ஹமாஸ் இயக்கத்தினர் நோக்கம் ஆகும். ஹமாஸ் இயக்கத்தினரை இஸ்ரேல் பயங்கரவாதிகள் என கூறுகிறது.

இந்நிலையில், காஸா பகுதியில் அமைதி ஊர்வலத்தில் பங்கேற்ற பாலஸ்தீனர்கள் 24 பேர் இஸ்ரேல் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேல் கடற்படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் குண்டுதுளைத்து 24 பாலஸ்தீனர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# பிரித்தானிய அரச தம்பதிகளுக்கு ஆஸி.ஆளுநர் நாயகம் வரவேற்பு





(லண்டன்)

பிரித்தானிய இளவரசர் ஹரியையும் அவருடைய மனைவி மேகனையும் அவுஸ்திரேலிய ஆளுநர் நாயகம் பீற்றர் கொஸ்குரோவ் மற்றும் அவருடைய மனைவி லைன் கொஸ்குரோவ் நேற்று செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாக சிட்னியிலுள்ள எட்மிரல்டி ஹவுஸிற்கு வரவேற்றுள்ளனர்.



கென்சிங்டன் மாளிகையின் நேற்றைய மகிழ்ச்சியான உத்தியோகபூர்வ தகவலைத் தொடர்ந்து, கர்ப்பிணியான சசெக்ஸ் சீமாட்டியும் இளவரசர் ஹரியும் சென்றுள்ள முதல் விஜயமிதுவாகும்.

அல்மிரல்டி ஹவுஸில் நேற்று அரச தம்பதிகள் இருவரும் விருந்தினர்களுக்கான பதிவுப்புத்தகத்தில் தங்கள் கையொப்பங்களை இட்டுள்ளனர்.

மேலும், எதிர்வரும் வசந்த காலம் பிறக்கவிருக்கும் குழந்தைக்கு பாதணிகளையும் விளையாட்டு பொம்மைகளையும் தம்பதியினர் இருவருக்கும் தொப்பிகளையும் ஆளுநர் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (7)

## ஏமன் பிரதமர் அஹமத் அதிரடி பதவி நீக்கம்

### ஜனாதிபதி மன்சூர் ஹாதி நடவடிக்கை

(சனா)

ஏமன் நாட்டின் பிரதமர் அஹமத் ஒபைட் பின் டக்ர்-ஐ நீக்கி புதிய பிரதமரை நியமித்துள்ளார் ஜனாதிபதி மன்சூர் ஹாதி.

ஏமன் நாட்டின் பிரதமராக இருந்த காலித் பஹா-வை கடந்த 2016ஆம் ஆண்டு நீக்கி அஹமத் ஒபைட் பின் டக்ர்-ஐ புதிய பிரதமராக்கினார் ஜனாதிபதி அபட் ரப்போ மன்சூர் ஹாதி. கடந்த 2016இல் இருந்து அஹமத் ஒபைட் பின் டக்ர் பிரதமராக செயலாற்றி வந்தார்.

ஏமன் நாட்டில் பொருளாதார சூழ்நிலை மிகவும் சீரழிந்து வருவதாக பெரும்பாலான மாகாணங்களில் போராட்டங்கள் நடைபெற்று வருகிறது. போராட்டக்காரர்கள் அரசு உடனடியாக பதவிவிலக வேண்டும் என்று கோரிக்கை வலுத்தன.

இந்நிலையில் பிரதமர் அஹமத் ஒபைட் பின் டக்ர்-ஐ ஜனாதிபதி அபட் ரப்போ மன்சூர் ஹாதி நேற்று அதிரடியாக நீக்கியுள்ளார்.

அவருக்குப் பதிலாக 38 வயதான மயீன் அத்துல் மலேக்-ஐ புதிய பிரதமராக நியமித்துள்ளார். சலேம் அஹமது சயீத்தை துணை பிரதமராக நியமித்துள்ளார்.

அண்மைக்காலமாக அரசின் பொருளாதாரம் மற்றும் சேவைத் துறைகளில் அலட்சியமாக செயற்பட்டதால் ஜனாதிபதி இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக கூறப்படுகிறது. (7)

நமது உண்மை நங்கூரம் பாய்ச்சிய கப்பலைப் போல அமைதியுடன் இருக்க வேண்டும்.

– புத்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## உன் அண்ணன் இராமனுடன் காட்டுக்குச் செல் இலக்குவனா!

தன் தலை முடியில் ஒரு நரை இருப்பதை அவதானித்த தசரத மன்னன், ஆட்சிப் பொறுப்பைத் தன் மூத்த மகன் இராமனிடம் ஒப்படைக்க முடிவு செய்தான்.

ஆட்சியை ஒப்படைப்பதன் சம்பிரதாய நிகழ்வைப் பட்டாபிஷேகம் என்று அழைப்பது வழக்கம். அதற்கான ஏற்பாடுகள் தடல்புடலாக நடந்தேறுகின்றன.

இராமன் மீது நெடுநாள் பகை கொண்டிருந்த மந்தரை எனும் கூனியாள் பட்டாபிஷேகத்தைக் குழப்பச் சூழ்ச்சி செய்கிறாள்.

தன் தோழியாகிய கைகேயியைச் சந்தித்து இராமனுக்கு முடி சூட்டுவதைத் தடுத்து, பரதனுக்கு முடி சூட்ட எத்தனம் செய் என்கிறாள்.

கூனியின் உபதேசத்தை ஏற்க மறுத்த கைகேயியை ஒரு மாதிரியாகத் தன் வயப்படுத்துகிறாள் மந்தரை.

விளைவு தசரதனிடம் இரு வரம் கேட்கிறாள் கைகேயி. இராமர் காடு செல்ல வேண்டும். பரதன் நாடாள வேண்டும் என்பதே அவ்விரு வரமாகிறது.

ஏலவே கொடுத்த வாக்குறுதியை மீறமுடியாத தசரதன் கைகேயி கேட்ட இரு வரத்தைக் கொடுத்து விட்டு, புத்திர சோகத்தில் மூழ்கிப் போகிறான்.

தசரதனிடம் வரம் பெற்ற கைகேயி இராமனைச் சந்தித்து இராமா நீ காடு செல்க; உன் தம்பி பரதன் நாடாள்க என்று கூறுகிறாள்.

அவதார புருசனாகிய இராம பிரான் தன் சிற்றன்னை கூறியதை சிரமேற்கொண்டு காடேகத் தயாராகிறார்.

இராமன் காடு செல்கிறான் என்ற செய்தியறிந்த அவன் தாய் கோசலை துடிக்கிறாள். பரதன் நாடாள்வதற்காக இப்படிச் செய்து விட்டானே என்று அவள் மனத்திடை நிச்சயம் எண்ணியிருப்பாள்.

இங்குதான் இலக்குவனின் தாய் சுமித்திரை நிதானமாகச் சிந்திக்கிறாள்.

பரதன் நாடாள வேண்டும் என்று கைகேயி விடுத்த கோரிக்கையில் பரதனுக்கு எவ்வித தொடர்பும் இல்லையாயினும் கைகேயியின் வரம் பரதனுக்கும் இழுக்கை ஏற்படுத்துகிறது.

இந்நிலையில் இராமன் காடு செல்ல, இலக்குவன் அயோத்தியில் இருப்பானாயின் இலக்குவனும் பரதனும் சேர்ந்து இராமரைக் காட்டுக்கு அனுப்பினரோ என்ற ஐயம் அயோத்தி மக்களிடம் ஏற்படும்.

தவிர, எனக்கு ஆட்சி வேண்டாம் என்று பரதன் மறுத்தால் இலக்குவனா நீ ஆட்சியைப் பொறுப்பேற்றுக் கொள் என்று வசிட்டர் உள்ளிட்டோர் வற்புறுத்துவர்.

ஆகையால் இந்தப் பழிச்சொல்லில் இருந்து என் மகன் இலக்குவனைக் காப்பாற்ற வேண்டும் என்று அவன் தாய் சுமித்திரை தீர்மானிக்கின்றாள்.

இந்தத் தீர்மானத்தின் ஒட்டுமொத்த முடிவுக்கும் பின்னால் இராமனுக்குப் பட்டாபிஷேகம் நடப்பதுதான் முறை என்ற அறம் அவளிடம் உறுதியாக இருக்கிறது.

இந்த அடிப்படையில்தான் இலக்குவனா நீயும் உன் அண்ணன் இராமனோடு காடு செல் என்று சுமித்திரை உத்தரவிடுகிறாள்.

ஆக, இராமருக்குத்தான் பட்டாபிஷேகம் செய்ய வேண்டும் என்று யார் நினைத்தாலும் சுமித்திரை செய்ததைத்தான் அவர்கள் செய்ய வேண்டும்.

அட, இது எதற்கானது என்று நீங்கள் கேட்டால், வடக்கின் அடுத்த முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் வருவதுதான் தமிழ் மக்களுக்கு நல்லது என்று யார் நினைத்தாலும் அவர்கள் தனித்தனியாகக் கட்சி அமைக்காமல், முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் சேர்ந்து பயணிப்பதுதான் நல்லது.

# இலங்கையில் இந்தியா முன்னெடுத்துவரும் அபிவிருத்தித் திட்டங்கள் மந்தகதியில்

## த ஹிந்து சுட்டிக்காட்டு

(சென்னை)

இலங்கையில் இந்தியா முன்னெடுத்துவரும் அபிவிருத்தித் திட்டங்கள் மெதுவாக நகர்வது குறித்து இந்தியா கவலையடைந்திருக்கும் நிலையில் இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இந்தியப் பிரதமர் மோடிக்கும் இடையிலான சந்திப்பு நிகழவுள்ளது என த ஹிந்து நாளிதழ் தெரிவித்துள்ளது.

இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கவுள்ள நிலையிலேயே ஹிந்து இதனை தெரிவித்துள்ளது.

இருநாடுகளைப் பொறுத்தவரையிலும் இந்த சந்திப்பு மிக முக்கியமானது என அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன என ஹிந்து தெரிவித்துள்ளது.

இலங்கையில் இந்தியாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் மெதுவாகவே நகர்வது குறித்து இந்தியா கவலையடைந்துள்ளது.

அதேவேளை தனது முக்கிய சகாக்களான இந்தியா சீனாவிற்கு இடையிலான உறவுகளில் சமநிலையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ள இலங்கை, இந்தியாவுடனான பிரச்சினைகளுக்கு தீர்வை காணமுயல்கின்றது.

இந்தியா தனது முன்னுரிமைக்குரிய திட்டங்க ளாக மத்தள விமான நிலையம், பலாலி விமான நிலையம், திருகோணமலை எண்ணெய் குதம்,கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையம் போன்றவற்றை கருதுகின்றது என ஹிந்து நாளிதழ் சுட்டிக் காட்டியுள்ளது.

இருதரப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் பொருளாதார வர்த்தகம் தொடர்பான உடன்படிக்கைகள் போன்றவற்றிற்கு மத்தியிலும் இந்தத் திட்டங்கள் முன்னோக்கி நகரவில்லை.

அரசியல் மற்றும் அதிகார மட்ட காரணங்களினாலேயே இந்தியாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தாமதமாகின்றன என கொழும்பை சேர்ந்த அதிகாரிகள் குறிப்பிட்டனர் எனவும் ஹிந்து தெரிவித்துள்ளது.

மத்தள மற்றும் திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பில் இந்தியாவின் மூலோபாய நோக்கங்கள் நன்கு அறியப்பட்ட விடயம் என தெரிவித்துள்ள ஹிந்து நாளிதழ், எனினும் கடந்த சில மாதங்களாக மத்தள விமானநிலையம் குறித்து இலங்கை முரண்பாடான தகவல்களை வெளியிட்டு வருகின்றது.

இதன் காரணமாக மத்தள விமான நிலையத்தை இலங்கை இந்தியாவிடம் கையளிக்குமா என்ற ஊகம் எழுந்துள்ளது எனவும் ஹிந்து நாளிதழ் தெரிவித்துள்ளது.

திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் தொடர்பாக இருநாடுகளும்கொள்கை அளவில் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளதையும் ஹிந்து நாளிதழ் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் எதிர்வரும் பேச்சுவார்த்தைகள் இந்தியாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களை துரிதப்படுத்த உதவும் எனவும் அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமரை கடந்த மாதம் சந்தித்த நிலையிலேயே பிரதமர் ரணில் இந்திய பிரதமரை சந்திக்கவுள்ளார் எனவும் மகிந்த ராஜபக்ஷ மோடி சந்திப்பை பலரும் நட்புறவு மீண்டும் மலர் வதற்கான 'அறிகுறியாக பார்த்துள்ளனர் எனவும் ஹிந்து நாளிதழ் சுட்டிக் காட்டியுள்ளது. (இ-7)

### முன்னர் சர்வாதிகாரி, இப்போது பொம்மை

# மகிந்தவைப் பிரதமராக்குவதால் நெருக்கடியை தீர்த்துவிட முடியாது

## கே.டி.லால்காந்த தெரிவிப்பு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவை பிரதமராகக் கொண்ட இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதால் மட்டும், தற்போதைய நெருக்கடிகளைத் தீர்த்து விட முடியாது என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

மருதானையில் நேற்று முன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட ஜே.வி.பியின் தொழிற்சங்கப் பிரிவின் தலைவர் கே.டி.லால்காந்த, "தற்போதைய நிலையில், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, புதிய அரசாங்கத்தை தெரிவு செய்யும் வாய்ப்பு மக்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

மக்கள் பெரும் துன்பங்களை சந்தித்து வருகின்றனர். இது நல்லாட்சி அரசாங்கம் அல்ல. அடக்குமுறை அரசாங்கம். இந்த அரசாங்கம் அமெரிக்க டொலரில் அதிகமாகத் தங்கியிருப்பதால்தான், பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.

மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக இருக்க விட்டு, மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்குவதால் இந்த நெருக்கடியைத் தீர்க்க முடியாது. இவர்கள் காலத்துக்குக் காலம், மாறி மாறி அதிகாரத்துக்கு வருகிறார்கள். அந்தப் பாவங்களுக்குத் தான் இப்போது விலை செலுத்துகிறோம்.

முன்னர் நாங்கள் ஒரு சர்வாதிகாரியை வைத்திருந்தோம். இப்போது ஒரு பொம்மையை வைத்திருக்கிறோம என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# நவராத்திரி பாமாலை

கல்விக்கு இன்று மூன்றாம் நாள்



### தாயே கலைவாணி

தாயே கலைவாணி– உந்தன்
தாள் பணிந்தோம் தாயே
நாயாய் அலையாமல்– எமை
தாயே காத்தருள்வாய்

ஞானம் தன்னை தருபவளே இந்த
நானிலம் போற்றும் தூயவளே
பழகு தமிழில் உறைபவளே– எங்கள்
பாவம் தீக்கும் கலைமகளே

வெள்ளைக் கமலமுன் னரியணை– இனி
வேறில்லை நீயின்றியோர் துணை
உள்ளம் தினம் பாடவுன் புகழ்– நீ
அள்ளித் தரவேண்டுமுன் நல்லருள்

கே.தவராஜசுந்தரம்
கிளி/ அக்கராயன் மகா வித்தியாலயம்

# தேசிய பாடசாலைகளில் நிலவும் அதிபர்களின் வெற்றிடங்களை

## நிரப்புவதற்கான நேர்முகப்பரீட்சை

(கொழும்பு)

தேசிய பாடசாலையில் நிலவும் அதிபர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நேர்முகபரீட்சை இன்று ஆரம்பமாகவுள்ளது.

நாட்டிலுள்ள 302 தேசிய பாடசாலைகளில் நிலவும் அதிபர்களுக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கான நேர்முகபரீட்சை இன்று முதல் நவம்பர் மாதம் 10ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

302 பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கும் 8 வருட காலத்துக்கும் மேலாக ஒரே பாடசாலையில் பணியாற்றும் அதிபர்களை ஏனைய பாடசாலைகளுக்கு இடமாற்ற அரச சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் கல்வி அமைச்சு உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

(மன்னார்)

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மன்னார் பிரதேசத்தில் புதுகாமம், நானாட்டான் பிரதேசம், வங்காலை, தோமஸ்புரி, நறுவிலிக்குளம், வங்காலை நீர்ப்பாசன சபை, வங்காலை கடற்படை முகாம ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (9)

# றேஞ்சஸ் மிரட்டல் வெற்றி



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்ட தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது காலிறுதியாட்டத்தில் புங்குடுதீவு நசரேத் எதிர் கொற்றாவத்தை றேஞ்சஸ் மோதின.

இதில் றேஞ்சஸ் 5:2 என்ற கோல் கணக்கில் நசரேத் அணியை வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தது. (க-26)

# நெல்மணி வெற்றிக்கிண்ணம் வலைப்பாடு ஜெகமீட்பர் சம்பியன்

முரசுமோட்டை, விளைபூமி விளையாட்டுக்கழகம், கிளிநொச்சி மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நெல்மணி வெற்றிக்



கிண்ணத்துக்கான கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வந்தது.

இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வலைப்பாடு ஜெகமீட்பர் அணியை எதிர்த்து உடுத்துறை செந்தமிழ் அணி மோதியது.

முதற்பாதியில், ஜெகமீட்பர் அணியின் ஜெனிஸ்டன் கோல் ஒன்றை அடித்தார். இரண்டாம் பாதியில் ஜெனிஸ்டன் அணிக்கான இரண்டாவது கோலையும் தனது கால்களால் பெற்றுக்கொடுத்தார்.

முடிவில் ஜெகமீட்பர் அணி, 2:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாக ஜெகமீட்பர் அணியின் டிலுயன் தெரிவு செய்யப்பட்டார். (க-26)

# மைதானத்தில் கோல்மழை நவிண்டில் கலைமதி வெற்றி




இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, வட மாகாண ரீதியில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டு வரு கின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் 24 கழகங்கள் பங்குபற்றுவதுடன், போட்டிகள் விலகல் முறையில் இடம்பெற்று வருகின்றன.

கடந்த 13 ஆம் திகதி நடைபெற்ற முதற் சுற்று ஆட்டமொன்றில தெல்லிப்பழை நாமகள் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதியது. இதில், நவிண்டில் கலைமதி அணி, 5:1 என்ற கோல்கள் கணக்கில் இலகு வெற்றியைப் பதிவு செய்தது. (க-26)

# எதிர்கால சந்ததி ஒளிமயமாக வாழ கரடுமுரடான பாதையைக் கடந்து உழைக்கிறேன்

## டக்ளஸ் எம்.பி தெரிவிப்பு

நான் ஒரு தனிப்பட்ட பகுதிக்கோ தனிப்பட்ட பிரதேசத்திற்கு உரியவன் அல்ல. தமிழ் மக்களது விடுதலைக்காக ஆரம்ப கால போராட்டத்தில் ஈடுபட்டு தொடர்ந்தும் அந்த மக்களின் நல்வாழ்வுக்காக பாடுபட்டுக் கொண்டிருப்பவன் நான். அந்த வகையில் எமது எதிர்கால சந்ததி ஒளிமயமானதாக வாழ வேண்டும் என்பதற்காகவே கரடுமுரடான பாதைகளைக் கடந்து தொடர்ந்தும் அயராது உழைத்து வருகின்றேன் என



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி ட்றிபேர்க் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ட்றிபேர்க் தாரகை விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்துச் சுற்றுப் போட்டியின் இறுதி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், இந்தக் கழகம் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை நீங்கள் கோரிக்கைகளாக என்னிடத்தே தெரிவித்துள்ளீர்கள்.

நிச்சயமாக நான் அவற்றை முடியுமான அளவில் நிறைவேற்றித் தருவதற்கான முயற்சிகளை மேற்கொள் வேன் என்றும் அவர் தெரிவித் தார்.

முன்னதாக ஆரம்ப நிகழ்வுகளை அடுத்து இரு அணி வீரர்களும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதை தொடர்ந்து போட்டியை பிரதம விருந்தினர் டக்ளஸ் தேவானந்தா உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்திருந் தார்.

நிகழ்வில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட மேலதிக நிர்வாக செயலாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன், சாவகச்சேரி நகர முதல்வர், கட்சியின் பிரதேச நிர்வாக செயலாளர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# அல்லைப்பிட்டி சென்.பிலிப்சை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றது சனிஸ்ரார்





வேலணை அம்பிகை நகல் மகேஸ்வரி விளையாட்டுக்கழகம் நடத்திய மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த 15ஆம் திகதி மகேஸ்வரி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இவ் இறுதிப் போட்டியில் அல்





லைப்பிட்டி சென் பிலிப்ஸ் மற்றும் புங்குடுதீவு சனிஸ்ரார் அணிகள் மோதிக்கொண்டன.

விறுவிறுப்பான இறுதியாட்டத்தில் இரு அணிகளும் ஆட்ட நேர முடிவில் எந்த விதமான கோல் களும் போடாமல் முடிவுக்கு வந்தது.

பின்னர் இரு அணிகளுக்கும் வழங்க்கப்பட்ட தண்டனை உதை சுற்றின் மூலம் புங்குடுதீவு சனிஸ்ரார் அணி சம்பியன் பட்டத்தை வென்றது. இதில் அல்லைப்பிட்டி அணி இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இப் போட்டி தொடரின் சிறந்த தொடர் ஆட்டநாயகனாக அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் அணியின் நிதர்சனும் சிறந்த கோல் காப்பாளராக அதே அணியின் அன்ரன் சால்ஸ் ஆகியோர் தெரிவாகினர்.

இப் போட்டியில் சென்பிலிப்ஸ் அணி கால் இறுதியில் துறையூர் ஐயனார் அணியையும் அரையிறுதியில் பள்ளி குடா ஐயனார் அணியையும் வெற்றிகொண்டிருந்தது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் உதைபந்தாட்டக் கொண்டாட்டம்

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டக் கொண்டாட்டம் - 2018 எனும் தொனிப் பொருளிலான உதைபந்தாட்டத் தொடரில் இன்றைய போட்டியில் மாலை 3.45 மணிக்கு சென். மைக்கல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யாழ். ஐக்கியம் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

மாலை 4.45 மணிக்கு நடைபெறும் மற்றுமொரு போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (க)

## கசிப்பு உற்பத்தி நிலை...

நிலையம் ஒன்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளார்.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30. மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது.

கிளிநொச்சி-முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் விசேட உத்தரவுக்கு அமைய, பொலிஸ் அணியினர் தரும்புரம் பொலிஸ் நிலையப் பிரிவில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த போது, கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து தருமபுரம் 10ஆம் யூனிட் காட்டுப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை சுற்றி வளைத்து ஆயிரத்து 375 லீற்றர் கசிப்புக் கோடா மற்றும் 42 லீற்றர் கசிப்புடன், கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்களையும் கைப் பற்றி யுள்ளதுடன் சம்பவ இடத்தில் வைத்து 02 சந்தேகநபர்களைக் கைது செய்த பின்னர் கசிப்பு உற்பத்தி நிலையத்தை நிர்மூலமாக்கி உள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் கைதான சந்தேக நபர்களையும் தருமபுரம் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்ற வழியில் சந்தேகத்திற் கிடமான வகையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றை தடுத்து நிறுத்தி சோதனையிட முற்பட்ட போது மோட்டார் சைக்கிளை கைவிட்டு நபர் ஒருவர் தப்பிச் சென்றுள்ள நிலையில் கசிப்பு 26 லீற்றர் மற்றும் கைத்தொலைபேசி ஒன்று ஆகியவற்றுடன் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றியுள்ளனர்.

இந்த இரு வெவ்வேறு சம்பவங்களின் போதும் கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருட்களும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாகவும் தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-15)

## முச்சக்கர வண்டியில்...

து முச்சக்கரவண்டியை பின்தொடர்ந்து சென்றுள்ளார்.

அப்போது திருநெல்வேலிப்பகுதியில் குறித்த முச்சக்கரவண்டியில் இருந்து பெண்கள் அணியும் ஆடை ஒன்று வீதியில் வீசப்பட்டுள்ளது. அதை அவதானித்த குறித்த நபர் நிலைதடுமாறி அங்கேயே நின்று பொலிஸார் மற்றும் ஊடகங்களுக்கு குறித்த சம்பவம் தொடர்பாக தெரியப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து பெண் ஒருவர் கடத்தப்பட்டுள்ளதாக இணையத்தளங்களில் வேகமாக செய்தி பரவியதையடுத்து பெரும் பதற்றம் ஏற்பட்டதுடன், குறித்த முச்சக்கர வண்டி இலக்கத்தை வைத்து பொலிசார் உடனடியாக உரிமையாளரை கைது செய்தனர்.

முச்சக்கரவண்டி சாரதி தனது வாக்கு மூலத்தில், மனநிலை பாதிக்கப்பட்ட தனது மனைவியை அரியாலையிலுள்ள தேவாலயமொன்றிற்கு தான் நேற்று பிற்பகல், அழைத்துச் சென்றதாகவும், அங்கிருந்து தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முற்பட்டபோது அவர் ஆலயத்தில் இருந்து வெளியேறியதால் அவரது கைகளை கட்டி முச்சக்கரவண்டியில் கொண்டு சென்றதாகவும், முச்சக்கர வண்டியில் இருந்த தனது மகளின் ஆடை ஒன்றை மனைவியே வீதியில் வீசியதாகவும் வாக்குமூலத்தில் தெரிவித்தார்.

இதையடுத்து குறித்த சம்பவம் கடத்தல் இல்லை என்றும் நபர் ஒருவர் தவறாக புரிந்துகொண்டதன் அடிப்படையில் இது கடத்தல் என வதந்தி பரவியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-9,101)

## அரசுக்கு கூட்டமைப்பு...

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாக யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ம-9)

## அரசியல் கைதிகள்...

வெளியிட்டுள்ள அவர்,

ஜனாதிபதியுடன் பேச்சு நடத்திய போது, அரசியல் கைதிகள் விவகாரத்துக்கு இன்று 17ஆம் திகதி ஒரு தீர்வை வழங்குவதாக உறுதியளித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியைச் சந்தித்த போது, இந்த விவகாரம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

ஜனாதிபதி குறிப்பிட்ட நாளில் தீர்வை வழங்குவதாக கூறியுள்ளார். எனவே, சாதகமான முடிவுகளை நாங்கள் எதிர்பார்க்க முடியும் என்று அவர் தெரிவித்தார். (ம)

## அரசு நிதி வழங்காத...

முப்படைகளின் வச முள்ள காணிகளை விடுவிப்பது தொடர் பான கலந்துரையாடல் நேற்று யாழ்.மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், முப்படை யினர், பொலிஸார், அரச அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

குறித்த கலந்துரையாடலின் பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்.

இந்த கலந்துரையாடல் முப்படையினர் வசமுள்ள காணிகளின் தரவுகள் ஆராயப்பட்டதுடன், இன்னும் விடுவிக்கப்பட வேண்டிய காணிகளின் தரவுகளும் விரிவாக ஆராயப்பட்டன. ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் விடுவிக்கப்படவுள்ள காணிகள் எவ்வளவு, விடுவிக்கப்பட்ட காணிகள் எவ்வளவு என்ற விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து காணிகளும் விடுவிக்கப்பட வேண்டு மென யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி தர் . சன ஹெட்டியாராச்சிக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருப்பதாகவும், ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக, குறிப்பிட்ட திகதிக்கு முன்னர், காணி விடுவிப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுத்திருப்பதாக யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி கூறினார்.

ஜனாதிபதி அவ்வாறான ஒரு காலக்கெடு கொடுத்துள்ளதனால், எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர், தனியார் காணிகள் விடுவிப்பது தொடர்பான நிலைப்பாடுகள் அடுத்த செயலணி கூட்டத்தின் போது, காணிகளை விடுவிப்பதற்கான தமது நடவடிக்கைகள் என்ன என்பது பற்றி அறிவிப்பதாக இராணுவ தரப்பினர் கூறியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-9,101)

## தொடர் திருட்டில்...

ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து தெரிய வருகையில்,

திருநெல்வேலி பகுதியில் உள்ள இரு ஆலயங்களிலும் 3 வீடுகளிலும் கடந்த இரு நாட்களாக 4 பேர் கொண்ட குழுவினர் திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இந்த திருட்டில் ஈடுபட்டவர்களின் தெளிவான அடையாளங்களுடன் கூடிய சி.சி.ரி.வி ஆதாரங்களை அப்பகுதி இளைஞர்கள் அண்மையில் பெற்றிருந்தனர். இதனடிப்படையில் குறித்த திருடர்களை பிடிப்பதற்காக இளைஞர்கள் நேற்று திட்டமிட்டிருந்த நிலையில் சந்தேகத்திற்கிடமான முறையில் 4 பேர் நேற்று மாலை திருநெல்வேலி மணல்தறை வீதியில் நடமாடியுள்ளனர். அவர்களை மறித்த இளைஞர்கள் விசாரித்ததுடன் அவர்களிடம் இருந்த பையை சோதனையிட்டபோது கோவிலில் மீட்கப்பட்ட பித்தளை பொருட்களை இளைஞர்கள் மீட்டனர்.

அதன் போது சி.சி.ரி.வி காட்சிகளில் உள்ள நபர்கள் தான் இவர்கள் என அடையாளம் கண்டதை தொடர்ந்து அவர்களை இளைஞர்கள் பிடித்து கட்டுவதற்கு முயற்சித்தபோது இருவர் தப்பி ஓடியுள்ளனர். எனினும் இருவர் அகப்பட்டனர். அவர்கள் இருவரையும் நையப்புடைத்த இளைஞர்கள் அவ ர்களை மின் கம்பத்துடன் கட்டிவைத்தனர்.

பின்னர் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டு சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் குறித்த நபர்களை இதற்கு முன்னரும் கைது செய்ததாகவும் அவர்கள் பிணையில் வந்து மீண்டும் மீண்டும் கொள்ளையில் ஈடுபடுவதாக கூறி கொள்ளையர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர். (ம-9)

## தன் எதிர்கால...

இந்தமாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கிலும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அடைந்து கொள்வதற்கான வழித்தடம் எவ்வாறு அமையவேண்டும் என்பது தொடர்பிலும், இதில் தமிழ் மக்கள் பேரவையின் வகிபாகம் தொடர்பிலும் சில தீர்மானங்களை மேற்கொள்ளும் மாபெரும் மக்கள் ஒன்றுகூடல் 24/10/2018 (புதன்கிழமை) அன்று காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம்-நல்லூர் ஆலய வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வடமாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் விசேட உரையாற்றவுள்ளதோடு தனது எதிர்கால அரசியல் நிலைப்பாடு தொடர்பிலும் தமிழ் மக்களுக்கு அறிவிக்கவுள்ளார்.

மேற்படிஒன்று கூடலுக்கு அரசியல் வேறுபாடுகளைக் கடந்து பொதுமக்கள், பொது அமைப்புக்கள், தொழில் சங்கங்கள் கல்விச் சமூகத்தினர் மற்றும் இளைஞர் யுவதிகள், போன்ற அனைத்துத் தரப்பினரையும் கலந்து பங்களிக்குமாறு தமிழ் மக்கள் பேரவை அழைப்பு விடுக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வாள் முனையில் அச்...

சல்லடை போட்ட கொள்ளையர்கள் அங்கிருந்த பணம் நகை என்பனவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் நேற்று காலை நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (ம-60)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532




மஹஜன சம்பத
திகதி 2018/10/16
சீட்டிழுப்பு இலக்கம் 3769
ஆங்கில எழுத்து: S
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 4 5 3 9 7 9
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2018.10.16
சீட்டிழுப்பு இலக்கம் 1914
ஆங்கில எழுத்து: R
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 35 40 50 79
தேசிய லொத்தர் சபை

செவன
திகதி 2018/10/16
சீட்டிழுப்பு இலக்கம் 127
ஆங்கில எழுத்து: F
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 30 32 68 69
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2018/10/16
சீட்டிழுப்பு இலக்கம் 460
லக்கினம்: ரிஷபம்
வெற்றி இலக்கங்கள்: 19 44 49 50
போனஸ் இலக்கம்: 63
தேசிய லொத்தர் சபை

## மின்சாரம் தாக்...

சாரதி சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயரிழந்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.15 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவது;

வவுனியா மணிப்புரம் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றிற்கு டிப்பர் வாகனத்தில் இருந்த மண்ணை டிப்பர் வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த உயர்த்தியைப் பயன்படுத்தி பறித்து விட்டு உயர்த்தியை மீளவும் சரி செய்யாமல் அப்படியே டிப்பர் பின்புறத்தை உயர்த்திய படி வீட்டின் வெளிப்பகுதிக்கு வந்த போது டிப்பரின் பின்புறம் வீதியில் இருந்த மின்சாரக் கம்பிகளில் முட்டியதால் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக அதன் சாரதி உயிரிழந்துள்ளார்,

இச்சம்பவத்தின் போது செட்டிகுளம் வீரபுரம் கிராமத்தைச் சேர்ந்த ரமேஸ் என்று அழைக்கப்படும் அன்ரன் ஜெகதீஸ்வரன் (வயது - 43) என்ற குடும்பஸ்தரே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற வவுனியா பொலிஸார் சடலத்தை மீட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-15-250-281-315)


**கட்டார் வேலைவாய்ப்பு**

எலக்ரீஷியன், பிளம்பர், மெக்கானிக், டிரைவர், A/C டெக்னீஷியன், Waiter, Office Boy/Girls

**Emerald Isle**
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268

ஆரம்பக் கட்டணம் இல்லை

077 00 38 215
021 221 9 221
www.emeraldisle.lk
email: jaffna@emeraldisle.lk

221-1/1, மின்சார நிலைய வீதி, 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்


## நீதிமன்ற வளா...

தொடர்பில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது முன் வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் சின்னத்துரை சதீஸ்தரன், கடும் அதிருப்தியை வெளியிட்டார்.

அத்துடன், நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்து சந்தேகநபர் ஒருவரை கைது செய்ய முற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரைக் கண்டித்த நீதவான், அவரை யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் முற்படுத்தி விசாரணைகளை முன்னெடுத்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்ற பொலிஸ் அலுவலகருக்கு உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் வழக்கு ஒன்றுக்காக சந்தேகநபர் ஒருவர் நேற்று முற்பட்டிருந்தார். சந்தேகநபர் வழக்கு நடவடிக்கை நிறைவடைந்து திறந்த மன்றிலிருந்து வெளியேறிய போது, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர், அவரை வேறொரு வழக்கில் கைது செய்ய முற்பட்டுள்ளார்.

பொலிஸ் உத்தியோகத்தர் தனது கணவரை நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்துக் கைது செய்ய முற்பட்டார் என்று பெண் ஒருவர் திறந்த மன்றுக்குள் பதற்றத்துடன் வந்து முறையிட்டார். பெண்ணின் அந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் ஆராயுமாறு நீதிமன்ற பொலிஸ் உத்தியோகத்தருக்கு நீதவான் உத்தரவிட்டார்.

அதுதொடர்பில் ஆராய்ந்த நீதிமன்ற பொலிஸ் உத்தியோகத்தர், நீதிமன்ற வளாகத்துக்குள் நின்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை அழைத்து வந்து மன்றில் முற்படுத்தினார்.

குற்றஞ்சாட்டும் பெண்ணின் கணவரைக் கைது செய்ய முற்பட்டீரா? என்று பொலிஸ் உத்தியோகத்தரிடம் மன்று கேள்வி எழுப்பியது. பெண்ணின் கணவர் வழக்கு ஒன்றில் சந்தேகநபராக உள்ளார். அவரைப் பார்ப்பதற்காகவே நீதிமன்ற வளாகத்துக்குள் வந்தேன் என்று பொலிஸ் உத்தியோகத்தர் பதிலளித்தார்.

சந்தேகநபருக்கு இந்த நீதிமன்றில் நேற்று வழக்கு உள்ளது என்று அறிந்து கொண்டு தான் அவரைத் தேடி இங்கு வந்தீரா? என்று மன்று மற்றொரு கேள்வியை எழுப்பியது. அதற்கு பொலிஸ் உத்தியோகத்தர் ஆம் என்று பதிலளித்தார்.

அண்மையில் நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்து சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் தாக்கப்பட்டார். நேற்று (இன்று) சந்தேகநபர் ஒருவரை நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்து கைது செய்யும் முயற்சி பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகிறது.

நீதிமன்ற வளாகத்துக்குள் இவ்வாறு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது என்பது தெரியுமா? என்று நீதவான் அதிருப்தியை வெளியிட்டார்.

குற்றஞ்சாட்டப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரின் செயலைக் கண்டித்த நீதவான், அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை விசாரணை செய்யுமாறு யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

அத்துடன், நீதிமன்ற வளாகத்துக்குள் நுழைந்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்ய முற்பட்டார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்த அவரது மனைவியிடம் வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு நீதிமன்ற பொலிஸ் அலுவலகருக்கு நீதிமன்று கட்டளை வழங்கியது. (ம-9)

## நீதிமன்ற தீர்ப்பு...

என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பா.டெனீஸ்வரனுக்கு மீண்டும் பதவியை வழங்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நடைமுறைப்படுத்தாது வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றம் சுமத்தப்பட்டது.

இந்நிலையில், சி.வி.விக்னேஸ்வரன் முன்வைத்துள்ள அடிப்படை ஆட்சேபனை மனு நேற்று செவ்வாய்க்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், குமுதினி விக்கிரமசிங்க மற்றும் ஜனத் சில்வா உள்ளிட்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மாகாண முதலமைச்சர் என்ற வகையில், முதலமைச்சர் தமக்குள்ள அதிகாரத்திற்கிணங்க முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரனை அமைச்சுப்பதவியில் இருந்து நீக்கி, வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டதாக சி.வி.விக்னேஸ்வரன் சார்பில் ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி எஸ்.கனகேஸ்வரன் மன்றில் தெரிவித்தார்.

குறித்த வர்த்தமானி அறிவித்தலை மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைநிறுத்தியிருந்தாலும், முறைப்பாட்டாளரான பா.டெனீஸ்வரனை மீண்டும் அமைச்சுப்பதவிக்கு நியமிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளிக்கவில்லையென ஜனாதிபதி சட்டத்தரணி மன்றில் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டின் கீழ் வழக்குத் தொடர முடியாது என ஜனாதிபதி சட்டத்தரணி எஸ்.கனகேஸ்வரன் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

இந்நிலையில், சி.வி.விக்னேஸ்வரன் முன்வைத்துள்ள அடிப்படை ஆட்சேபனை மனு தொடர்பிலான தீர்ப்பை எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி அறிவிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம)

## கர...

கைக் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் மேற்படி பகுதியில் உள்ள தோட்டக் காணியினை உரிமையாளர் பண்படுத்திய போது பழமை வாய்ந்த கைக்குண்டு ஒன்று தென்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இது சம்பந்தமாக அப்பகுதி கிராம சேவையாளரினால் நெல்லியடி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. (ம-60)


**வீடு வாடகைக்கு தேவை**

காரைநகர் கிழவன்காடு கலாமன்ற யாழ். கிளைக்கு கலை வகுப்புகள் நடத்துவதற்கு யாழ். நகரை அண்டிய பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:
பதிவாளர் - 077 640 8512 (C-4162)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**நிறஞ்சன் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு:
நிறஞ்சன் நகைமாடம்
சந்தை வீதி, உடுப்பிட்டி. 0763836129 (6080)





**100-வது சமாதி ஆண்டை முன்னிட்டு ஈழத்து சீரடி சாயி நாதனுக்கு சகஸ்ர (1008) திரவ்ய அபிஷேகம் (18.10.2018)**

*அன்பான அடியார்களே!*

18.10.2018 வியாழக்கிழமை

காலை 7 மணிக்கு - யாக கும்ப உத்வாகன பூசை, சகஸ்ர நாம அர்ச்சனை, மஹாயாகம், உபசார ஹோமம், மஹா பூர்ணாகுதி

காலை 10 மணி - சகஸ்ர திரவ்ய அபிஷேகம், பிரதான கலச புறப்பாடு, ஆலய பிரவேசம், அபிஷேகம், அலங்காரம், அன்னதானம்

**சாவடி ஊர்வலம் (பல்லக்கு சேவை)**

மாலை 6 மணியளவில் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி பான்ட் வாத்தியங்களுடன் வட இந்தியா சீரடியில் இடம்பெறுவது போல இடம்பெறும்.

*அனைவரும் வருக! சாயி நாதன் அருள் பெறுக!*

"ஈழத்து சீரடி சாயி மந்திர்"
314, நாவலர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (சி-4160)

உபயகாரர்:
திரு.திருமதி கிருபாகரன்
தனித்தா குடும்பம்
(கிருபா லேனேர்ஸ்)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

அமெரிக்க லொத்தர் விசா (Green Card) பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உடனடியாக எம்மிடம் பதிவுகளை மேற்கொண்டு அமெரிக்கா செல்லும் வாய்ப்பினை பெற்றிடுங்கள்

அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500 (C-4022)

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | சங்கானை | ஊர்காவத்துறை | கரணவாய் | மீசாலை | கிளிநொச்சி | முல்லைத்தீவு | வவுனியா | திருகோணமலை

**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**



DELIVERY IN 3-5 DAYS (C-4120)

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

0768226240 V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

**அமெரிக்க அதிஸ்ட விசா - நீங்களும் அதிஸ்டசாலியாகலாம்!**

இதுவே இறுதி வருடம் கிடைத்த வாய்ப்பை எப்படியாவது பயன்படுத்துங்கள்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்ந்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில்வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும்

0768226243 55000 இலவச விசாக்கள்

கடந்த காலங்களில் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா சென்ற 60 வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

நான் A/L எடுத்துக்கொண்டிருக்கும்போதே பதிவு செய்துவிட்டேன் பெறுபேறுகள் வரவும் விசா வரவும் சரியாக இருந்தது.இப்போது அமெரிக்காவில் எனது வாழ்க்கை நான் எதிர்பார்த்த விதத்தில் அமையக்கூடியதாக இருந்தது. V2 TRAVELS க்கு நன்றிகள்.

2017 ல் எமக்கூடாக 77 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்

குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்



யோகேஸ்வரன் - சுவிந்திரன்
அமெரிக்கா விசா வெற்றியாளர்

இறுதி சந்தர்ப்பம் அடுத்த வருடம் இல்லை

V2 TRAVELS

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | யாழ்ப்பாணம் 0768226241 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.